நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஜன.30-பெப்.5,1994 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 36




மாத்தையா விவகாரத்தின் மர்மம் என்ன? -படங்களோடு- எக்ஸ்ரே ரிப்போர்ட்



வாவ்!

மாபெரிய மனிதனும் மிகச்சிறிய மனைவியும்



மகாபாரதம் கதை-வசனம் உள்ளே

உங்கள் வயதில் பத்துவயது குறையும் பத்து யோசனைகள் லேடீஸ் ஸ்பெசல்

ரசிகனின் இலக்கிய நயம்

புலம்பெயர்ந்த விஷமிகளின் பொல்லாத விஷமத்தனங்கள் அரசியல் அலசல்

## திடன் கொள்ளுங்கள்


*"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்"*

யோவான் 16:33

உபத்திரவங்களைக் குறித்து நம் அண்டவரின் சொற்கள் உண்மையானவை. சந்தேகமில்லாமல் அவற்றில் என்பங்கை அநுபவிக்கிறேன். சூடடிக்கும் கோல் அகற்றப்படவில்லை. போரடிக்கும் களத்தில் நான் படுத்திருக்கும்வரை அது அங்கிருந்து எடுக்கப்பட்டுவிடும் என்றும் நான் நம்பிக்கை கொள்ளமுடியாது. பகைவரின் நாட்டில் இருக்கும் போது நான் எப்படி சொந்த நாட்டில் இருப்பது போல் இருக்க முடியும்? நாடு கடத்தப்பட்டிருக்கும் போது எப்படி மகிழ்ச்சியாய் இருக்க முடியும்? வனாந்தரத்தில் எப்படி வசதிகளுடன் வாழமுடியும்? இது என் இளைப்பாறுதல் அல்ல. இது உலைக்களமும், கொல்லுலையும், சம்மட்டியும் உள்ள இடமாகும். என் ஆண்டவரின் வார்த்தைகளோடு என் அனுபவம் பொருந்துகிறது. அவர் திடன்கொள் என்று கட்டளையிடுவதை கவனித்திருக்கிறேன். ஆனால் ஐயோ, நான் வாட்டம் அடைகிறவனாகவே இருக்கிறேன். நான் அதிகமாக சோதிக்கப்படும்போது சீக்கிரத்தில் என் ஆன்மா தளர்ச்சியடைகிறது. ஆனால் இவ்விதம் நேரிட நான் விடக்கூடாது. ஆண்டவர் என்னைத் திடன்கொள்ளச் சொல்லும் போது நான் வாட்டமுறக் கூடாது.

குணத்தி பிரபா-கனடா.

## ஆன்மீகம்



### நாயகத்தின் நல்லுரைகள்

- ஒழுக்கம் இல்லாததே, அனைத்து கெடுதிகளுக்கும் காரணமாக அமைகின்றது.
- கசப்பாக இருந்தாலும், எப்பொழுதும் உண்மையே பேசு.
- மக்களுக்கு அன்பு காட்டாதவனுக்கு, அல்லாஹ் அன்பு காட்டமாட்டான்.
- சொற்பமான வேலையாக இருந்தாலும், சுத்தமாகச் செய்.
- உமக்கு வெட்கம் என்று ஒன்று இல்லையாயின், நீ வேண்டியதையெல்லாம் செய்.
- மக்களில் சிறந்தவர்கள், மனிதர்களுக்குப் பிரயோசனப்படுபவர்களே.
- நிச்சயமாக அல்லாஹ், கெண்டைக் காலுக்குக் கீழ் (வேஷ்டி) சாரத்தைப் பணித்து உடுப்பவர்களை உகக்கவே மாட்டான்.
- 'நீக்ரோ' அடிமையாக இருந்தாலும் சரியே? வழிபட்டவனுக்குச் சுவர்க்கம். குறைஷிப் பிள்ளையாக இருப்பினுஞ் சரியே, பாவம் செய்தவனுக்கு நரகம்.
- மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தமாட்டான்.
- நமது விஷயத்தில் யாராவது புதிதாக 'பித்அத்' எதையாவது கொண்டு வந்தால், அதனைத் தள்ளிவிடுங்கள்.
- தனது நாவால், கரத்தால்- தனது சகோதர முஸ்லிமுக்கு துன்பங்ளை இழைக்காதவனே ஒரு உண்மையான முஸ்லிம்.
- உனது ஆத்மா அடைய விருப்புவதையே, உனது சகோதர முஸ்லிமும் அடைய வேண்டுமென்று விரும்பு.
- மற்றவர்களை சபிக்கிறவனும், கேவலமாகக் கருதுபவனும், குத்து வார்த்தைகளை பேசுகின்றவனும் ஒரு உண்மை முஸ்லிமல்ல.
- அல்லாஹ்வுக்காக அன்பு செலுத்துவதும், அவனுக்காக வெறுப்பதும், கொடுப்பதும், தடுப்பதும், ஒரு உண்மை (ஈமானுள்ள) விசுவாசியின் அடையாளங்களாகும்.

தொகுப்பு: எச்.எம்.மஸ்னவி
புத்தளம்.

## முரசம்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*
*உற்சாகமூட்டுகின்ற மடல்கள்*
*கடல் கடந்துமிருந்து*
*கரம் வந்து சேருகின்றன.*

*பிரான்சில் இருந்து*
*'பிரசுரிக்கவல்ல' என்ற முன்குறிப்போடு*
*உற்சாகமூட்டியும்-தன் உள்ளத்தில்*
*தவறு என்று பட்டதை எடுத்துச்சொல்லியும்*
*கரம் வந்தது ஒரு கடிதம்.*

*இவ்வாறு-பல வாசக நெஞ்சங்கள்*
*கடல்கடந்த தேசங்களில் இருந்து*
*முரசை நேசித்து-*
*தாய் மண்ணைவிட்டுப் பிரிந்த போதும்*
*தாய் மண்ணிலிருந்து-*
*"உள்ளதை உள்ளபடி சொல்லும்*
*முரசுக்காக வாரா வாரம்*
*தாம் காத்திருப்பதாக" கடிதம் மூலம்*
*தெரிவிக்கும் போது உற்சாகம் விரிகிறது.*

*'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'*
*என்று சொல்லப்பட்டதில்*
*எந்தளவுக்கு நியாயம் உண்டு*
*என்று தெரியவில்லை.*

*எந்த உழைப்பும் பயன் கருதியே*
*வெளிப்படுத்தப்படுகிறது.*
*உழைப்பின் இலக்கு எய்தப்படும்போது*
*களைப்பின் சுவடுகள் காணாமல்*
*போய்விடுகின்றன.*

*இன்னொன்றும் சொல்லவேண்டும்.*
*முரசுக்கு வரும் பாராட்டுக்கள்*
*அதன் உருவாக்கத்தில் உழைக்கும்*
*அனைவருக்கும் பொதுவானவை.*
*கூட்டு முயற்சியின் வெளிப்பாடே*
*முரசின் வளர்ச்சி.*

■

*புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள*
*உள்முரண்பாடுகள்*
*வெளிநாடுகளிலும் பிரதிபலிக்கின்றன.*

*இயக்க மோதல்கள்,*
*இயக்கங்களுக்குள் மோதல்கள்-*
*இதற்கெல்லாம் காரணம்*
*கருத்து மோதல்கள் அல்ல.*

*தலைமையில் உள்ளவர்கள் மத்தியில்*
*ஏற்படுகின்ற பிணக்குகள்,*
*யார் பெரியவர் என்ற போட்டிகள்.*
*பின்னர்-*
*ஒருவரை ஒருவர் குறைசொல்வதும்*
*இல்லாத பொல்லாத குற்றம் காண்பதும்*
*தனிப்பட்ட ரீதியில் இழிவு படுத்தி*
*எடுத்தெறியும் முயற்சிகளும்*
*வழக்கமான நடைமுறைகள்.*

*மாத்தையா செய்த தவறுகள் என்ன?*
*அவ்வாறு தவறு செய்திருந்தால்*
*இதுவரை புலிகள் தலைமையினர்*
*மக்களுக்கு அதை மறைப்பது ஏன்?*
*புலிகள் அமைப்புக்கு சார்பான*
*வெளிநாட்டு இதழ் ஒன்று*
*மாத்தையாவின் ஒருதலைக்காதல் பற்றியும்*
*மாத்தையா வடை வியாபாரி என்றும்*
*எழுதியிருக்கிறது. படிக்க சிரிப்பு வருகிறது.*

*மாத்தையாவின் ஒருதலைக்காதல்*
*இப்போதுதான் பிரச்சனையாக தெரிகிறதா?*
*அவர் பிரதித்தலைவராக போற்றப்படுகையில்*
*அவரும் பிரபாவும் இணைந்திருந்த படங்களை*
*பக்கம் பக்கமாய் வெளியிட்டபோது*
*அந்த ஒருதலைக்காதல் விவகாரமும்*
*அதனால் அவர் அன்று நஞ்சு குடித்ததும்*
*சாதாரண சம்பவங்களாகத்தான் கருதப்பட்டன.*

*'மாத்தையா பிரச்சனை என்பது*
*கட்டுக்கதை' என்று செய்தி சொல்லிய*
*புலிகளது பத்திரிகைகள்*
*இப்போது மாத்தையாவை இகழ்வதில்*
*போட்டி போட்டு நிற்பது வேடிக்கை.*

*இவ்வாறான நிலைகள்-*
*தமிழ் மக்களை வெறுப்பூட்டுகின்றன;*
*நம்பிக்கையீனங்களை தோற்றுவிக்கின்றன.*
*மாத்தையாவின் நிலை என்ன?*
*அவர் செய்த குற்றங்கள் என்ன?*
*என்பவற்றை பொதுமக்களுக்கு*
*உடனடியாக தெரியப்படுத்துவது*
*பிரபாகரனது பொறுப்பாகும்.*

■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை.*

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-33

**விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.**

### பரிசுக்குரிய கவிதை

**புதுவாழ்வு**
வற்றிவிட்ட குளத்தினிலே
வாடிவிட்ட தாமரைகள்
பெற்றிடுமா புதுவாழ்வு?

ச. மகாலிங்கம்
வெளிமடை.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

**அகதிமுகாம்**
எங்கள்
சொந்த முகவரிகளை
இழந்ததால்,
வந்த
புதிய முகவரி,
இந்த
அகதிமுகாம்!
வை.சித்திகிருஷ்ணா
பாண்டிருப்பு-01.

**சுதந்திரம்**
குனிந்தோம்
குட்டப்பட்டோம்
தூங்கினோம்
துரத்தப்பட்டோம்
ஆனால் இனியும்...
கே.ரிசான் அப்துல்பாஸித்
சிலாபம்.

சுதந்திரப் பறவைகள்
சமாதானத் தடங்கலால்
அகதி முகாமுக்குள்-தினம்
அவதிப்படுகிறது.
சீ.ரவீந்திரன்
குருமண்வெளி-11.

**யுத்தக் கறை**
யுத்தக்களந்தனிலே
கரமிழந்த கணவனைப்பார்!
யுத்தம் கொடிதென்று
நித்தம் பாலூட்டு.
அ.தருஷாந்த்
திருகோணமலை.

**பாதி**
ஆடை பாதி ஆகாரம் பாதி
இது நாகரிகம் அல்ல
ஆயுதங்களின் பரிணமிப்பில்
அகதிகளின் எதிரொலி.
க.பாமா-கந்தளாய்.

**ஒரு குலம்**
ஒருகுலமென்ற கோசம்
ஓங்கி ஒலிப்பதெப்போ?
மானிட வாழ்வில்-நல்ல
வசந்தம் காண்பதெப்போ?
பரீஹா.ஏ.ஜுனைது
ஏறாவூர்-06.

**புதிய கணக்கு**
வன்முறை
சக(+)
உள்நாட்டு யுத்தம்
சமன்(=)
வறுமை
வை.மனோராணி
வவுனியா.

**அதுவல்ல இது**
கண்ணாடி மாளிகையில்
களித்துண்ணும் விருந்தல்ல
அன்றாட வாழ்விற்கே
அவதிப்படும் அகதி நிலை.
ஷர்மி-கண்டி.

**யுத்த பூமி**
யுத்த பூமியில்
போர்க்காலக் கைதிகள்
சுமந்தவளுக்கு விடுதலைதான்
இவர்களுக்கு எப்போது...?
ந.சசிகலா-தம்பிலுவில்-2.

**பதியப்பட்டவர்களா?**
படைத்தவனேஅறியாத
பரிதவிப்போர்
பட்டியலில்
பதியப்பட்ட
பாதை தவறிய
பறவைகளா...நீங்கள்?
எம்.எஸ்.காலித்தீன்-ஏறாவூர்-03.

**வறுமை முகாம்**
அகதிமுகாம் என்று
இனி சொல்ல வேண்டாம்
வறுமை முகாம் என்று
பெயர் வைத்திடுவோம்.
ரீ. லக்ஸ்மி
குறுமண்வெளி.

**இது இந்தக் காலம்**
உண்ணும் வரை
உயிர் வாழ்ந்தது
அந்தக் காலம்,
உயிர் வாழும்வரை
உண்ணுவோம்-இது
இந்தக்காலம்.
அரியநாயகம் ஆனந்
பொரல்ல.

## கவிதைப் போட்டி இல-36



*சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 5.2.1994.*

–முகவரி–
கவிதைப் போட்டி இல: 36
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5



**படம்....?**
எங்கள் ஏழ்மையை
வெளிச்சம் போட்டுக்காட்டவா
படம் பிடித்தீர்கள்?
சீ.வல்லிபுரம்-கொழும்பு-13.

**அவதிகள்**
துப்பாக்கிகள் தந்த
துர்ப்பாக்கியம்-இந்த
அகதிகள் படும்
அவதிகள்!
நாதிராமீன்
சிலாபம்.

போரிடத்தில்
மானிடம்
தோற்றுவிட்டதனால்,
எல்லாமே
எங்களுக்கு
அரையும் குறையும்தான்.
பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**உதவி**
ஊரை அழிக்கும் போரால்
உற்றனையோ இந்த நிலை?
யாரே உதவி செய்வார்
நானிலத்தே இனி யுமக்கு?
ச.மகாலிங்கம்-வெளிமடை.

நீதி நிலை தடுமாறியதால்
நிர்க்கதி அரசோச்சுகிறதா?
திருமதி சுசிலா.க
மட்டக்களப்பு.

**ஏமாந்தீர்**
இக்கரையில்
இல்லை!
இனிமை என்று.
அக்கரைக்குப் போனீர்களோ?
தில்லையூரான்-
மண்டூர்.

## வாசகர் சாலை

என் இதய தோழியே..

நீ வாரம் ஒருமுறை என்னை வந்து தழுவுகிறாய். சிறப்பான பாப்பா முரசு, இலக்கிய நயம், சிறுகதைகள், உலக செய்திகள் மற்றும் போட்டிகளை சுமந்து உலாவரும் என் இதய தோழி முரசே, நீ இவ்வுலகில் புகழ் பெற என் உயிர்மேலான வாழ்த்துக்கள். வாழ்க தினமுரசு. வளர்க அதன் புகழ்.

ரெ.ராஜேஸ்வரி-கொழும்பு-09.

•

தித்திக்க வைக்கும் என் தினமுரசே!

எல்லோருடைய மனதைக் கொள்ளை கொள்ளும் உனக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. அதிலும் ரசிகனின் இலக்கிய நயம் எம் நெஞ்சை முத்தமிட்டுக்கொண்டே இருக்கின்றது. உனக்கு எம் இனிய வாழ்த்துக்கள்.

வசந்தகோகிலம், கலைச்செல்வி மலா, உமா,விஜயன், மகேஸ்-அன்ரன்திரு-கோணேசபுரம்.

•

அன்பின் தினமுரசே,
ஆசை வைத்தால் அது மோசம்.
அன்பு வைத்தால் அது துன்பம்.
பாசம் கொள்வது பாவம்.
உன்னோடு பழகிப் பிரிவது துயரம்.

செல்வி.எம்.பீ.பர்சானா-கதுறுவெல.

•

அன்பின் முரசே!

உனை கண்ட அந்நாளே என் மனதில் இடம் பிடித்தாய். நீ தாங்கிவரும் அம்சம் அனைத்தும் அருமை. முரசுக்கு என்றும் என் வாழ்த்து!

நீ.சி.பாபு-கொழும்பு-14.

•

என்றும் என் அன்பிற்குரிய தினமுரசே, வாரத்தில் ஒரு முறை மலர்ந்து சூடு, சுவை சுவாரசியம் போன்றவற்றால் வாசகர் மனங்களில் நீ நிலைத்து நின்று இன்று போல் என்றும் மலர வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

சி.ஸ்ரீகௌரி-திருகோணமலை.

•

அண்மைக்காலமாக தினமுரசு பத்திரிகையில் தி/இளையவன் என்னும் பெரிய பல கதைகள் வெளிவந்து கொண்டிருப்பது என்போன்ற வாசகர்களுக்கும் பெருமை தரக்கூடியதாக இருப்பதனை தாராளமாகவே தெரிவித்துக் கொள்கின்றேன். நம்மைச் சுற்றி நிகழும் நாளாந்த சம்பவங்களை தைரியமாகவே நயமாக வெளிக்காட்டும் அவரைப் போற்றுகின்றோம்.

மணிமாறன்-திருமலை.

•

என் இதயத்தில் நீங்காத இடம்பிடித்த தினமுரசே, நீ வாரா வாரம் சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது. ரசிகன் எழுதும் கண்ணே மதுமிதா மிகவும் பிரமாதம். ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள். வாழ்க தினமுரசு. வளர்க உன் சேவை.

சபீனா சித்தீக்-அல்லைநகர்-07.

•




அன்பின் முரசே,

நீ என் கரங்களில் வந்ததும் உன்னை முழுமையாக ரசித்து சுவைப்பவன்நான் தேன்கிண்ணம் பகுதியில் என்னை ஆழ்த்தக்கூடிய புத்தம் புதிய கவிதைகளை தாங்கிவரும் ஓட்டமாவடி அரபாத் ஆகியோர்களுக்கு எனது வாழ்த்துக்கள். உன் சேவை வளரட்டும் வாழ்க.

எம்.ஐ.எம்.ஐ.பர்-ஓட்டமாவடி-03.

•

முரசு தன்னையும் அழகு செய்து, எம்மையும் அழகு செய்யும் ஒரு களஞ்சியமாகவுள்ளது. ரசிகனின் இலக்கிய நயம் இலக்கியத்துடன் எம்மையும் இரசிக்க வைக்கின்றது. உண்மைகளை கூறுவதில் முதலிடத்தையும் பெற்றுவிட்டது. உன் பணிவளர எம் பணி உண்டு தினமும்.

செல்வி.அ-உவர்மலை.

•

இந்து சமயத்தின் மாபெரிய காவியமான மகாபாரதம் கதைத் தொடரை தமிழில் தருவதற்கு முரசு மேற்கொண்ட சிறப்புப் பணி பாராட்டுக்குரியது. இது அநேகரின் ஆவலைப் பூர்த்தி செய்திருக்கும்.

இரா.வசந்தி-மட்டக்களப்பு.

•

அன்பின் தினமுரசே,

உன் இதழ்களை வாரம் தோறும் பாராமல் என் விழிகள் ஓயாது. வாழ்க தினமுரசே, வளர்க உன் வரவு.

இ.ப.பிரதீசன்
திருகோணமலை.

•

என் அன்பின் தினமுரசே!

நீ கிழமைக்கு ஒரு முறை மலர்ந்தாலும், நீ தாங்கிவரும் ஒவ்வொரு அம்சமும் அருமையிலும் அருமை. என் இதய முரசே என்றும் வாழ என் இனிய வாழ்த்துக்கள் என் அன்பு மலரே!

எம்.பி.எம்.சாதிக்
புதிய காத்தான்குடி-03.

•

முரசே, உன்னை எவ்வாறு புகழ்வேன். நீ மறைக்காமல் தரும் விடயங்கள் அனைத்தும் வெரிகுட். உன்னைப் புகழ சொற்கள் நீயே கற்றுத்தர வேண்டும். உனது சேவை என்றென்றும் மலரட்டும்.

பர்வின்சிபா-பொல்கஹவெல.

•

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தொடர்யுத்தத்தால் பெரும்பான்மை இன கல்விமான்கள் வெறுப்பு!

## படையினரை உற்சாகப்படுத்த இராணுவத் தளபதி முயற்சி!

## வடபகுதி முகாம்களுக்கு அடிக்கடி விஜயம்!!

தொடர் யுத்தம் தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் பொறுமை இழக்கச் செய்துள்ளது.

லங்காதீப போன்ற பத்திரிகைகள் புலிகளை போரில் வெல்லுவது சாத்தியமில்லை என்ற ரீதியில் கருத்து வெளியிடுகின்றன.

'ராவய' பத்திரிகை யுத்தத்திற்கு எதிரான ஒரு இயக்கத்தை நடத்த முன்வந்துள்ளது.

இதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கல்விமான்கள் பலரும் யுத்தம் நீடிப்பதை விரும்பவில்லை. தமது கருத்துக்களை இப்போது அவர்கள் பத்திரிகைகள் மூலமாக வெளியிட ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் டி.சில்வா தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து ராவய பத்திரிகைக்குப் பேட்டியளித்துள்ளார்.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் தொடர்பான விசாரணைக்குழு அறிக்கை வெளியான பின்னர் பாதுகாப்புப்படை முன்னாள் அதிகாரிகள் சிலரும் புலிகளது தாக்குதல் நடவடிக்கைகளின் சிறப்புப் பற்றி பாராட்டுகின்றனர்.

"ஆயுதக் கொள்வனவும் யுத்தமும் இனப்பிரச்சனைக்கு தீர்வாக அமையாது. பலத்தை மட்டும் அதிகரித்தால் போதாது. திறமையையும் அதிகரிக்க வேண்டும். ஆயுதக் கொள்வனவில் மட்டுமல்ல ஏனைய விடயங்களில் திறமையாக இருக்க வேண்டும். இல்லாவிடின் எதிரிகளுக்கு ஆயுதங்களை அன்பளிப்பாக வழங்கிக்கொண்டிருப்போம்" என்று முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் கட்டுரை ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இராணுவத் தளபதி ஜெரி டிசில்வா இராணுவத்தினரின் மன உறுதியை வளர்க்கும் முயற்சிகளில் தீவிரம் காட்டுகிறார்.

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு படையினரை உற்சாகப்படுத்தி வருகிறார்.

நவீன ஆயுதங்களும், கடுமையான பயிற்சியும் யுத்தத்தில் படையினரின் கை மேலோங்க அவசியத் தேவைகள் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இராணுவத்தினருக்கு புதிய பயிற்சிகள் வழங்கப்படவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காட்டுப்பகுதிகளில் போரிடக்கூடிய புதிய தீவிரப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை இலங்கை விமானப்படைத் தளபதி அடுத்தமாதம் ஓய்வு பெறப்போவதாகவும், வெளிநாடு ஒன்றுக்கு சென்று குடியேற விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குண்டுவீச்சுக்கள் ஒருபுறம்—மரண தண்டனைகள் மறுபுறம்!

# இலண்டன் பத்திரிகையாளரின் யாழ் அனுபவம்!!

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் சர்வதேச ரீதியாக அந்த அமைப்பின் உள் கட்டமைப்பு சம்பந்தமான வெறுப்புணர்வுகளை தோற்றுவித்துள்ளன.

இராணுவ ரீதியில் தமது திறமையை வெளிப்படுத்திக் காட்டுவது ஒன்றே போதுமானது என்று புலிகள் அமைப்பினர் நினைத்துக்கொண்டிருப்பதனால் அரசியல் ரீதியில் தமக்கு ஏற்பட்டுவரும் இழப்புக்கள் பற்றி கவலைப்படாதிருக்கின்றனர் என்று சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

வெற்றிகரமான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் தம் பிற நடவடிக்கைகள் மீது எற்படும் உடன்பாடற்ற கருத்துக்கள் மறைந்துவிடும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

தற்போது பரவலாகப் பேசப்படும் மாத்தையா விவகாரம் முன் எப்போதும் இல்லாதவாறு புலிகள் அமைப்பினருக்கு நெருக்குதலை ஏற்படுத்தியிருப்பதாக கருத இடமுண்டு.

வெளிநாட்டுப் பத்திரிகைகளில் சிறந்த கெரில்லா இயக்கமாக கூறப்பட்டுவந்த புலிகள் அமைப்பினர் தற்போது விமர்சனங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தனது பிரதான சகாவை பிரபாகரன் கொன்றுவிட்டார் என்று அப்பத்திரிகைகள் எழுதத்தொடங்கியிருப்பது புலிகள் அமைப்பினரை மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கான கோரிக்கைகளின் நியாயத்தையும் பலவீனப்படுத்தும் என்றே பொதுவாக கருதப்படுகிறது.

இலண்டனில் இருந்து வெளிவரும் "இண்டிபென்டன்ட்" பத்திரிகை தனது நிருபர் யாழ் சென்று அங்குள்ள நிலமைகளைக் கண்டறிந்து எழுதியுள்ள கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் முக்கிய பகுதிகள் கீழே தரப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான மக்களை இரு பயங்கர உணர்வுகள் ஆட்கொண்டிருந்தன. ஒரு நபர் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்ட காட்சியினை அவர்கள் காண நேர்ந்தது. அதே வேளை அந்த மாலை வேளையில் எந்த நிமிடத்தில் இலங்கை விமானப்படை விமானம் வானில் தோன்றி குண்டு வீசுமோ என்ற பயமும் அவர்களைப் பீடித்திருந்தது.


இலங்கையின் வட பகுதியிலுள்ள பிரதேசத்தில் குண்டு வீச்சும், பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதும் சர்வசாதாரணமான நிகழ்வுகளாகிவிட்டன.

வதந்திகள், இரகசியங்கள் மற்றும் வீர மரணங்கள் ஆகியவற்றை சந்தித்த வண்ணம் அந்தச் சமுதாயம் காணப்படுகிறது.

சைனைட் குப்பிகளை தங்கள் கழுத்துகளில் அணிந்தவண்ணம் இராணுவப் பையன்கள் காணப்படுகின்றனர்.

கெரில்லாத் தலைவரான பிரபாகரனால் வழிநடத்தப்படும் இந்த ஆட்சியில் அரசுப் படைகளிடம் கைதாவதை விட தற்கொலை சிறந்தது என்ற நம்பிக்கை பொதுவாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. வீரர்கள் என்று போற்றப்படும் ஒருவர் மறுநாள் துரோகி யாவதும் சகஜம்.

எதிரிகளின் குண்டுவிழுந்து வெடிக்கும்! மரணதண்டனைகள் தொடரும்!!வதந்திகள் பரவும்!! இதேவேளை இவை புலித் தலைமையினால் வெளியிடப்படாத அந்தரங்கமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில்தான் அமையும்.



FRIDAY 21 JANUARY 1994

**'Pol Pot' turns Tigers' heroes into traitors**

The martyr's death of a popular Tamil commander has unleashed a purge among the guerrillas, writes Tim McGirk in Jaffna

TWO contrary forces were tugging the hundreds of Tamils who had massed at a Jaffna political rally: the macabre fascination of witnessing a man being executed, and the fear that, any second, a plane from the Sri Lankan air force would appear out of the tropical sunset and drop a bomb on them.

Bombings and public executions are becoming commonplace in the "liberated" zone known as Tamil Eelam, on the northern tip of Sri Lanka. It is a society run on rumour, secrecy and the cult of martyrdom. Boy soldiers wear talismans around their necks containing a cyanide capsule. In this regime, led by Prabakharan, the elusive guerrilla chief, suicide is preferable to capture, fanaticism to common sense. And, overnight, heroes can turn to traitors.

As it happened, the enemy artillery shells fell wide, and the executions — rumours, again — either had taken place secretly or the Tiger command were adding to the charges against the victims.

The rally was to mark the death on 16 January last year of a commander, Kittu. The fishing boat carrying Kittu and seven Tamil guerrillas fell under Indian navy surveillance as soon as it sailed from Singapore. According to one reliable version, Kittu radioed Prabakharan for orders and was told to die rather than surrender. This Kittu did by blowing up the boat, himself and the crew. It was a good martyr's death.

A bright man with an easy laugh, who often toured the guerrilla units with a small monkey perched on his shoulder, Kittu was also Prabakharan's close friend and most trusted adviser. Rumours spread that Kittu had been betrayed to the Indians, and by last July Prabakharan had placed his two most senior commanders, Yogi and Mahattya, under arrest.

spiralled into a purge of more than 100 top cadres. Even the movement's ideologist, Anton Balasingham, is reportedly suspect.

In an atmosphere where bombs and shells pelt down regularly, and where the 800,000 Tamils on the Jaffna peninsula are besieged by an economic and military blockade, conditions are ideal for producing legions of boys and girls willing to die for their chief. Prabakharan is often compared to the Khmer Rouge leader, Pol Pot, for his ruthlessness. But he also runs his force like a fanatical cult. His child soldiers, often as young as 13, are banned from drinking, sex and singing non-revolutionary songs.

In schools, children are shown a recruitment video for the Black Tigers — the Tamil squad of suicide killers, widely held responsible for the deaths of the Sri Lankan president, Ranasinghe Premadasa, last May and of the former Indian prime minister, Rajiv Gandhi, in 1991. In the video, a boy leaps jubilantly in



கடந்த வருடம் ஜனவரி 16ல் மரணமடைந்த கிட்டுவின் மறைவையொட்டிய நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது. சிங்கப்பூரிலிருந்து ஒரு மீன்பிடிப் படகில் வந்த கிட்டுவும் மற்றும் 7 கெரில்லாக்களும் இந்திய கடற்படை வலையத்துள் சிக்கினர்.

கிட்டு உடனடியாக பிரபாகரனுடன் வானொலி மூலம் தொடர்பு கொண்டதில், கைதாவதைவிட மரணமடைவதே நல்லது என்று அவர் கூறியதாக நம்பகரமான செய்தி ஒன்று கூறுகிறது. இதனால் கிட்டு படகுக்குத் தீமூட்டி தனது ஏழு சகாக்களுடன் மறைந்தார். இது உண்மையில் ஒரு வீர மரணம்தான்.

எப்போதும் சிரித்த முகத்துடன் தன் தோளில் ஒரு சிறு குரங்கினை வைத்துக்கொண்டு அடிக்கடி கெரில்லா முகாம்களைச் சுற்றி வரும் கிட்டு, பிரபாகரனின் நெருங்கிய நண்பர்.

இந்தியாவிடம் கிட்டு காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டார் என்று வதந்தியும் பரவியிருக்கிறது.

கடந்த ஜூலையில் பிரபாகரன் மாத்தையாவை கைதுசெய்து விட்டார்.

இருவரும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர்கள். வட கிழக்குப் பிராந்தியத்துக்கு கூடுதலான அதிகாரங்களைப் பெற்றுத் தரத்தக்க ஓர் ஏற்பாட்டினை வடிவமைக்கும் நோக்குடன் இலங்கை அரசுடன் இவர்கள் பேச்சு வார்த்தைகளை நடத்தி, 10 வருடங்களாக நீடித்து பல்லாயிரக்கணக்கானோரை பலிகொண்டு, ஐந்து இலட்சம் பேரை அகதிகளாக்கிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தவர்கள்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

## வெள்ளப் பாதிப்புக்கு போதிய நிவாரணம் இல்லை!

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர் குறை!!

கடும் மழையும் வெள்ளமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் சேதங்களை விளைவித்திருக்கின்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

அரசாங்கத்தால் வெள்ளப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்கப்பட்டபோதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய அளவில் அவை போய்ச்சேரவில்லை என்று புகார்கள் எழுந்துள்ளன.

மட்டக்களப்பில் உள்ள முக்கியமான பணியாளர் ஒருவர்மீது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

நிவாரணங்கள் விடயத்தில் அவரது நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்றே சொல்லப்படுகிறது.

இது தொடர்பாக மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உரிய பயன்கிட்டவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

சில பகுதிகளில் ஒரு தடவை நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் வேறு சில பகுதிகள் பாராமுகமாய் விடப்பட்டதாகவும் புகார்கள் கூறப்படுகின்றன.

அரசியல் கட்சி இரண்டின் செல்வாக்கு தனக்கு இருப்பதாகக் காட்டிக்கொண்டு தனது சொந்த வெறுப்பு விருப்புகளுக்கு ஏற்ப அவர் நடந்துகொள்வதாகவும் சம்பந்தப்பட்ட பணியாளர் மீது குறைகள் கூறப்படுகின்றன.

குருவே தவறு செய்யக் கூடாது.

### நகர் ரவுண்டப்

-ஒற்றன்-

# நில்லடி-நில்லடி என்று கல்லோடு துரத்திய கணவன்!

நீண்டநாள் ஓய்வு. உடனே சோம்பல் முறித்துக்கொண்டு திருமலை செல்க என்று உத்தரவு.

உள்ளூராட்சித்தேர்தல் சூடுபிடித்திருப்பதால் சுவையான தகவல்கள் மாட்டக்கூடும் என்பது எதிர்பார்ப்பு.

புறப்பட்டோம். கொழும்பில் இருந்து திருமலைக்கு ரயில் பயணம்.

திருமலையில் நண்பர் ஒருவர் வீட்டில் ஒட்டிக்கொண்டோம்.

அவரே நிறையச் செய்திகள் கைவசம் வைத்திருந்தார். தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட்டு தேர்தலில் நிற்கவேண்டும் என்பதே திருமலை வாழ் தமிழர்களது பொது அபிப்பிராயம். வாக்குகள் சிதறாமல் இருந்தால் நல்லது என்ற எண்ணம்.

மக்கள் கருத்தை மதிப்பது யார்? வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கடைசி நேரம் வரை மூன்று தமிழ் அமைப்புக்கள் ரீ குடித்துக் கொண்டு விவாதித்து களைத்துப் போயின.

இரண்டு தமிழ் அமைப்புக்கள் தயார் நிலையில் இருக்க ஒரு அமைப்பு மட்டும் ஒத்துவர மறுத்ததாம்.

புளொட் அமைப்பும், ஈ.பி.டி.பியும் குறிப்பிட்ட அமைப்பு மீது நிறைய குற்றங்கள் சொல்லுகின்றன.

குறிப்பிட்ட அமைப்பும் தனது நிலைக்கு பல காரணங்கள் சொல்லுகின்றது.

எப்படியோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட ஒன்றுபட முடியாமல் தமிழ் அமைப்புக்கள் தங்கள் விரிசல்களை வெளிப்படுத்திவிட்டன.

வாக்குக் கேட்டு வீட்டுக்கதவைத் தட்டும் குழுக்களிடம் "ஒன்றுபட்டு ஏன் கேட்கவில்லை" என்று வாக்காளர்கள் துளைக்கிறார்கள்.

உடனே ஒரு பிரசங்கமே நடத்தி முடிக்கிறார்கள். பிரசங்கத்தின் கருப்பொருள் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டுதல்.

நண்பர் இன்னொரு விடயத்தையும் சொன்னார். இயக்கங்களில் இருந்து விலகி, அந்த இயக்கங்களை விமர்சித்தவர்களும் இப்போது அதே இயக்கங்களால் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பட்டியல்தயாரிக்கும் அவசரத்தில் வடிகட்ட மறந்து கல்லு மண் எல்லாம் கலந்து விட்டார்களோ என்று நினைத்தோம்.

அரசியல் என்றால் நாலு விதமாகத்தான் இருக்கும். குண்டுமணியும் இருக்கும். குப்பையும் இருக்கும் என்று நம் தமிழ் அமைப்புக்களும் நினைக்கத் தொடங்கிவிட்டமை "அரசியல் ஒரு சாக்கடை" என்று சொன்ன அண்ணாத்துரைக்கு சபாஷ் சொல்லத் தூண்டுகிறது.

தமிழர்களது அரசியல் தரம் தாழ்ந்து வருவதை எண்ணி நண்பர் பெருமூச்சு விட நமது மூச்சும் அதில் கலந்தது. வேறென்ன செய்வது?

நண்பர் எங்கு போகப் போகிறார். அவர் வசம் உள்ள தகவல்களை பின்னர் திரட்டிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் வெளியே ஒரு ரவுண்டப் போக நினைத்தோம்.

பேச்சுத் துணைக்கு நண்பரையும் அழைத்தோம். ஒட்டிக்கொண்டார்.

கொழும்பு நிலவரம் பற்றி நண்பர் விசாரிக்க, அவருக்கு மட்டுமே கேட்கக்கூடியதாக பதில் சொல்லிக்கொண்டு நடந்தோம். சேர்ஸ் ஸ்ரீட் புகுந்தபோது நண்பர் கேட்டார்.

"காமினி யூ.என்.பியோடு சேருவாரோ?"

"அரசியலில் எதுவும் நடக்கலாம். நேற்றைய நண்பன் இன்றைய எதிரி. இன்றைய நண்பன்..."

நாம் சொல்லி முடிக்கவில்லை. முடிக்க முடியவில்லை. காரணம் எதிரே தெரிந்த காட்சி.

ஒரு பெண்-நடுத்தர வயதுப் பெண் எதிரே ஓடிவந்துகொண்டிருந்தார்.

"படுபாவி. நீயும் ஒரு மனுசனோ" என்று புலம்பியபடி ஓடி வர,

அவர் பின்னால் ஒரு நடுத்தர வயதுக்காரர் கல்லை தூக்கிக்கொண்டு துரத்தியபடி,

"நில்லடி...நில்லடி..."

என்று உரத்துக்கூவியபடி ஓடி வந்தார்.

சிலர் நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஒருவர் தலையில் அடித்துக்கொண்டார்.

யாரும் தடுக்க முயன்றதாகத் தெரியவில்லை. இதென்ன அநியாயம். நாலு சாத்து சாத்தலாம் போல் இருந்தது. குறுக்கே புகுந்து நாம் மறிக்க நினைத்து முன்னேற நண்பர் நம்கையை பிடித்து நிறுத்தினார்.

"இது வழக்கமான திருவிளையாடல். பழக்கமான விசயம்."

"அவர் யார்?"

"அல்பேட்."

"சரி இருக்கட்டும். அந்தப் பெண்மணி?"

நண்பர் ஒரு நகசல் சிரிப்போடு சொன்னார்,

"அவரது மனைவி."

"குடும்பப் பிரச்சனையோ?"

இது நாம்.

"இல்லை. உந்த மனுசன் வீட்டுக்குக் காசு கொடுக்கிறது கிடையாது. கிடைக்கிற காசில ஃபுல்லாப் போட்டிட்டு போய் படுத்திடும். மனுசி வந்து காசு கேட்கும். குறைந்த பட்சம் கள்ளடிக்கக்கூட காசு இல்லாத ஆத்திரம் மனுசி மேலே பாய மனுசன் கல்லு எடுத்து எறிஞ்சு துரத்தும்."

"நல்ல சீவன்தான். ஆள் என்ன வேலை செய்யிறார்?"

நாம் மெல்லத் துருவினோம்.

"அண்ணர் முன்னாள் நகர சபை உறுப்பினர்."

"அடி சக்கை அப்ப அரசியல்வாதி!"

"அதே! நகர சபை உறுப்பினராய் இல்லாட்டிலும் உந்த நூலகத்திற்கு முன்னால் நின்று தெரிஞ்ச அறிஞ்ச ஆட்களைக் கண்டா தனியக் கூட்டிக்கொண்டு போவார்."

"தீவிரமான கொள்கை விளக்கமாக்கும்."

நண்பர் நம்மை ஒரு மாதிரியாய் பார்த்துச் சிரித்தார்.

"நீர் ஒரு பக்கம். அவர் அழைப்பது பத்து ரூபாய் கேட்க. ஆகக் குறைந்தது ஐந்துரூபாய். பண்டிக்கைக்காலங்களில் முதல் ஆளாய் நின்று வாழ்த்துச் சொல்லி அதற்கென்று தனியே எதிர்பார்ப்பார்."

நமக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இப்போது அண்ணர் என்ன செய்கிறார்?"

"சொன்னால் ஆச்சரியமோ ஆத்திரமோ படக்கூடாது."

"நாம் அதையெல்லாம் பட்டுத்தான் என்ன செய்யுறது. சும்மா சொல்லுங்கோ."

"அண்ணரும் எலக்சன் கேட்கிறார்."

நமக்கு பொறி கலங்கியது.

"என்ன எலெக்சன் கேட்கிறாரோ?"

"உதென்ன பெரிய விசயம்? உவர் மாதிரி இன்னும் சிலரும் கேட்கினம் ஐசே!"

"எந்தச் சின்னம் அண்ணருக்கு?"

"வெளிச்ச வீடு."

வீடே இருட்டிலை கிடக்க,

அண்ணர் தண்ணி போட்டுக்கொண்டு யாருக்கு வெளிச்சம் காட்டுவது?

முதலில் தனக்குள்ளே அண்ணர் ஒரு வெளிச்சத்தை பெற்றுவிட்டு பின்னர் ஊருக்கு வெளிச்சம் போடலாமே என்று நினைத்தோம்.

இவ்வாறானவர்களையும் தேர்தலில் நிறுத்தியிருப்பது யாராக இருந்தாலும் சரி அவர்கள் அரசியலுக்கு சேறு பூசுகிறார்கள்.

இதையெல்லாம் சொன்னால் சிலருக்கு கோபம் வரும். நீ யாருக்கு ஆதரவு என்று ஏறிவிழுவார்கள்.

ஏற்கனவே உயர் சபை பிரதிநிதியாய் ஒருவரை போட்டு அவருக்கு பைத்தியம் பிடிக்க வைத்த கதையை மறக்காமல் இருப்பது நல்லது.

உள்ளதையும் கெடுத்த கதையான நிலமைகள் மாறுவதை எண்ணி வேதனை சுமந்து நண்பரின் வீடு திரும்பினோம்.

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

**எமது புதிய முகவரி**

| | |
|---|---|
| வினோத் இன் | Vinnoth Inn |
| இல.33, மூன்றாவது மாடி | No.33, 3rd Floor |
| குணானந்த மாவத்தை | Gunanantha Mawatha |
| கொட்டாஞ்சேனை. | Kotahena |
| கொழும்பு-13. | Colombo-13. |

*போன்: 431845*

மேலுள்ள விலாசத்திற்கு இடம் மாறியுள்ளோம்.

***இப்புதிய இடம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலும், குணானந்த மாவத்தை தபால் கந்தோருக்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது.***

தலைநகர பஸ் மார்க்கம்
இல. 112, 102, 168, 115, 176, 145.

**வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்**


# போராட்டமும் அல்ல; பொதுக்கூட்டமுமல்ல

(தமிழக நிருபர் ஏழுமலை)



இத்தனை பெருந்தொகையாய் பெண்கள் திரண்டிருப்பது எதற்காக? பொதுக்கூட்டமும் நடக்கவில்லை. போராட்டமும் நடக்கவில்லை. பின் எதற்காக? இலவச சேலை விநியோகத்தை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மேற்கொண்டுவருகிறார். இலவச சேலை பெற திரண்டுவந்து காத்திருப்போரில் ஒரு பகுதியினரே படத்தில் உள்ளனர். "இலவச சேலை வேண்டாம், வேலை கொடு என்று கேளுங்கள். நாமே சேலை வாங்கிக்கொள்ளலாம்." என்றொரு வசனம் 'வள்ளி' படத்தில் வருகிறது. வசனம் கேட்டு கைதட்டியவர்களும் வறுமை காரணமாக கியூவில் வந்து காத்திருக்கிறார்கள்.

## பாதைகள் யாவும் படு மோசம்! புகார் சொல்கின்றனர் புத்தளம் நகர் மக்கள்!!

*(புத்தளம் நிருபர்)*

புத்தளம் நகரிலுள்ள அனைத்து பாதைகளும் மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட பெரு மழையைத் தொடர்ந்து இப்பாதைகள் பள்ளமும், படுகுழிகளும் நிறைந்ததாய் காட்சி தருகின்றன.

குறிப்பாக வான் வீதி, கடுமையான் குள வீதி, குடுமையான் குள வவுண், நியூ செட்டில்மன்ட் வீதி என்பன பாதசாரிகள் கூட நடக்க முடியாதவாறு படு மோசமாய் உள்ளன.

இப்பகுதிகளில் வாழ்வோர் இரவு நேரங்களில் வெளியே வந்து நடமாடமுடியாத அளவுக்கு பாதைகள் சீர்கேடாய் உள்ளன.

புத்தளம் நகர சபையும் மாகாண சபை உறுப்பினர்களும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இதுவிடயத்தில் கூடிய கவனமெடுத்து உடனடியாக இப்பாதைகளை செப்பனிடவேண்டுமென பொதுமக்கள் "தினமுரசு"க்கு தெரிவித்தனர்.


**நரைமயிர் கறுப்பாகிறது**
**புதுமை ஆனால் உண்மை**

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.

மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=

நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

***கிடைக்குமிடங்கள்:***

UVA MEDICALS , UDAPUSSELLAWA.
CITY DRUGS, NO. 93, OLCOTT MAWATHA, (OPPOSITE RAILWAY STATION) PETTAH
SISIRA MEDICAL- KANDY ROAD, KIRIBATHGODA.
PRAME MEDICAL, 46- PERADENIYA ROAD, KANDY.
LANKA MEDICALS, MAIN STREET, RATNAPURA.
GOMES PHARMACY, BALANGODA
ARAVINDA TRADING CO., 47, STATION ROAD, GAMPOLA
ROYAL TRADE CENTRE, NUWARAELIYA.
UVA PHARMACY, BANDARAWELA.
RENUZA, WELIMADA
LANKA CHEMIST, EDIRIWEERA STORES, STATION ROAD, BADULLA.
HAPUTALE PHARMACY, HAPUTALE.
SERENDIB PHARMACY, 400, MAIN STREET, PANADURA.
METROY PHARMACY, 66, MAIN STREET, PELMADULLA.
WIJEMANNA GROCERIES, NO.43, PANADURA ROAD, HORANA.
SHIHAB ENTERPRISES, 69, TALAWAKELLE.
CENTRAL MEDICAL STORES, 74, MAIN STREET, HATTON.
LOYED PHARMACY, MEDAGODA, MATARA.
SILVA DRUGS, HAVELOCK ROAD, GALLE.
THE NEW PHARMACY, PERAKUMBA ST, KURUNAGALA.
SUHADA PHARMACY, COLOMBO RD, CHILAW.

*காலவர்ண ஒயில் அன்ட் கேஷாலேப்ப (UP ஃபோமியுலா)*


## பள்ளம் நிறைந்த வீதி! நோயாளர்கள் அவதி!! பழுது திருத்தாமல் பாராமுகம் ஏனோ?

(நிந்தவூர் நிருபர்)



கல்முனை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியின் அவல நிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்!

சாய்ந்தமருது பகுதியின் முக்கிய வீதிகளுள் ஒன்றான இந்த வீதி பள்ளமும், படுகுழிகளும்- நிறைந்து காணப்படுவதால், இந்த வீதியால் செல்லும் பொதுமக்கள் -குறிப்பாக சாய்ந்தமருது அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். ஒரு சிறு மழை பெய்தால்கூட இந்த வீதியிலுள்ள பள்ளம், படுகுழிகள் நீர் நிறைந்து, போக்குவரத்திற்கு லாயக்கற்றதாக இந்த வீதி மாறிவிடுகின்றது.

இந்த வீதியால் செல்லும் வாகனங்கள் சிலசமயம், 'கராஜை' நாடவேண்டிய நிலையும் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

பல வருடகாலமாகப் பாராமுகமாக விடப்பட்டிருக்கும் இந்த வீதியைப் புனரமைத்து மக்கள் குறை தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் முன்வரவேண்டுமெனக் கோரப்படுகின்றது.

கோரிக்கை நிறைவேறுமா? அல்லது நிலமை தொடர்கதைதானா?


பெண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் தைப்பதற்குப் பயிற்சிபெற்ற பெண் டெயிலர்கள் தேவை. நேரில் வரவும். வேலைக்கேற்ற சம்பளம் தரப்படும்.

| | |
|---|---|
| ERIN DRESS DEN | எரின் ட்ரெஸ் டென் |
| NO.9, LORRIS ROAD, | இல.9, லோறிஸ் றோட், |
| BAMBALAPITIYA. | பம்பலப்பிட்டிய. |
| **PHONE: 583354** | **போன்: 583354** |

**நடிக-நடிகைகள், வாத்தியங்கள் இசைக்கக்கூடிய கலைஞர்கள் தேவை**

அனுபவம், அனுபவமற்ற நடிக-நடிகைகள், பாடகர்கள், பாடகிகள், திறமைமிக்க வாத்தியங்கள் இசைக்கக்கூடிய இசைக்கலைஞர்கள் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் எதிர்வரும் 1994 பெப்ரவரி 28ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பவும்.

அண்மையில் எடுக்கப்போகும் **"சிறகுகள்"** என்னும் தொலைக்காட்சி நாடகத்திற்காக நடிக-நடிகைகள் தங்கள் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

முகவரி- *TELE STAGE*
17/7, STATION PASSAGE,
COLOMBO-2.


## சொல்லியும் செய்வதாக இல்லை!

பதுளை மாவட்டத்திலுள்ள நமுனுகுல நகரத்தில் ஒரு மலசலகூடம் இன்றி பிரயாணிகள் பெரும் அவதிப் படுகின்றார்கள். இந்நகரத்தில் இருந்த இரண்டு மலசலக் கூடமும் உடைந்து எவரும் காலடிவைக்க முடியாத அசுத்த நிலையில் உள்ளன. உடைந்ததை சீர்திருத்துவதாகவும் இல்லை. வேறு மலசலகூடம் அமைத்துக் கொடுப்பதாகவும் இல்லை.

அத்தோடு வீதி ஓரங்களில் குப்பை கூளங்கள் (கடைகளுக்கு முன்) வாகனங்கள் செல்லவும் தடையாகவுள்ளது. தேர்தல் காலங்களில் நகருக்கு வரும் அரசியல்வாதிகளே எங்கள் நகரை பார்த்தவுடன் அவதிப்பட போகின்றீர்கள்!

செல்வி.எஸ்.பவானி
நமுனுகுல.

## புகார் பெட்டி

### மீளாத் துயரில் மீள் குடியேற்றப் பாடசாலை

1990 யூலை வன்செயல்கள் காரணமாக அகதிகளாக்கப்பட்ட 4ம் கிராம மக்கள் 1993 ஒக்டோபர் மாதத்திலிருந்து அவர்களது சொந்த இடமான 4ம் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர். இதன் காரணமாக கல்முனையில் அகதிப்பாடசாலையாக இயங்கி வந்த கமு/வேப்படித்தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அவசர அவசரமாக 4ம் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பாடசாலையின் திருத்த வேலைகள் அம்பாறை கச்சேரியினரால் ஆமை வேகத்தில் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை பாடசாலையின் மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. மழைகாலங்களில் பாடசாலையின் கூரையிலிருந்து ஒழுகும் மழைநீரால் பாடசாலை நனைந்துவிடுகின்றது. பாடசாலைத் தளபாடங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. கதிரைகள் மேசைகள் இல்லாமல் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். உருக்கு அலுமாரிகள் இல்லாமையால் பாடசாலை ஆவணங்களை எலி, கறையான், வெளவால், பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பது பாடசாலை நிருவாகத்தினருக்கு பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. பாடசாலையின் வேலியை அமைப்பதற்கு முட்கம்பிகள் வழங்கப்படாமையினால் பாடசாலைக் கட்டிடம் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் இரவு நேரங்களிலும், மழைகாலங்களிலும் மாடுகள் தங்குமிடமாக பாடசாலை காணப்படுகின்றது. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி குறைபாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குடியேற்றவாசிகள் எதிர்பார்க்கின்றனர்.

இ.பூபாலபிள்ளை-பாடசாலை அபிவிருத்தி சபை, கல்முனை.

### வெள்ளம் மூடும் பாலம்!

அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அழுத்கம பிரதான வீதி வழியே அமைக்கப்பட்ட பாலம் பெரும் கவலைக்குரிய பாலமாக இருக்கின்றது. தொடர்ந்து மழை பெய்தால் அப் பாலத்தை மூடி மூன்று நான்கடி நீர் பாலத்தின் மேல் செல்கின்றது.

இதனால் வாகனங்கள் செல்ல முடியாமல் தடைபடுகின்றது. அவசரத் தேவைக்கு அனுராதபுரம் செல்வதாக இருந்தால் செல்ல முடியாமல் மக்கள் தவிக்கின்றார்கள். இப் பாலத்தை இன்னும் ஐந்தடி மட்டும் உயர்த்தி பாலத்தை சீர்திருத்தும்படி ஊர் மக்களின் சார்பில் மிகவும் பணிவாய் வேண்டுகின்றேன்.

எஸ்.ஐ. நிலாம்தீன்
கட்டுக்கெலியாவ.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மாத்தையா விவகாரத்தின் மர்மம் என்ன?

புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்ட உள்பிரச்சனையானது இப்போது சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களது கவனத்திற்கு சென்றுள்ளது.

மாத்தையாவுக்கு பிரச்சனை என்பதை வதந்தி என்று சொன்னவர்கள்கூட இப்போது மாத்தையா உயிரோடு இருக்கிறாரா? அல்லது ஏற்கனவே கொல்லப்பட்டுவிட்டாரா என்று அறியத் துடிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் மௌனமாக இருக்கின்றனர்.

மாத்தையா பிரச்சனை பற்றி இதுவரை வாயே திறக்கவில்லை.

இருக்கும் மக்கள் செய்திகளை அறியவேண்டும், பிரதான பிரச்சனைகள் பற்றிய விபரங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று புலிகள் நினைக்கவில்லை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள மக்களை தமக்கெதிரான அபிப்பிராயம் தெரிவிக்காமல் கட்டுப்படுத்திவிடலாம்; வெளிநாடுகளில் உள்ள வர்களுக்கு மட்டும் அதிருப்திகள் எழாமல் பார்த்துக்கொண்டால் போதும் என்று புலிகள் கருதுகிறார்களோ தெரியவில்லை.

முன்னர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக வதந்தி பரவியபோது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புலிகள் அமைப்பினர் உடனடியாக மறுப்புத் தெரிவித்தனர்.

மேலோட்டமானவையாகவே இருந்தன.

மனம் உடைந்துபோன மாத்தையா கிழக்குக்குச் சென்றார்.

அதேசமயம் வன்னியில் மாத்தையாவின் விசுவாசிகளுக்கும், பிரபா விசுவாசிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அதுபற்றிய செய்திகள் வெளிவந்தபோது அவையும் வதந்திகள் என்றே கருதப்பட்டன.

கிழக்கில் இருந்தபோதும் பிரச்சனைகளை எதிர்கொண்ட மாத்தையா மீண்டும் வடக்கே திரும்பினார்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஈழநாதம் பத்திரிகை மாத்தையாவின் பொறுப்பில் இருந்தது. மாத்தையாவின் தீவிர விசுவாசியான அழகன்

இரகசியமான இயக்கத்தில் யார் என்ன பொறுப்பில் இருக்கிறார்கள் என்பதும்கூட இரகசியமானதாக இருக்கலாம்.

பிரபாகரனும், ஏனைய முக்கிய தலைவர்களும் எங்கே இருக்கிறார்கள் என்பதையும் இரகசியமாக வைத்திருக்கலாம்.

ஆனால், முக்கிய தலைவர் என்று தம்மால் வெளிப்படுத்தப்பட்ட ஒருவர் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்திவரும்போது அது உண்மையா? பொய்யா என்று விளக்கிச் சொல்வது இரகசியங்களைப் பாதிக்கும் விசயமல்ல.

புலிகள் அமைப்பு மக்களை விட்டு விலகி, எங்கோ கண்காணாத இடத்தில் இருந்து

விமர்சனத்தை முன்வைத்திருக்கிறார்.

மனித உரிமைகளுக்கான சர்வதேச வழக்கறிஞர் சங்கமும் மாத்தையாவை விடுதலை செய்யவேண்டும் என்கிறது.

சர்வதேச மன்னிப்புச்சபை மாத்தையா பற்றி பேசியிருக்கிறது.

இலண்டனிலிருந்து வெளிவரும் 'இண்டிப் பென்டன்' பத்திரிகை நிருபர் யாழ்ப்பாணம் சென்று திரும்பி இலண்டன் போய் 'புலிகளின் தலைவர் பிரபாகரன் "பொல் பொட்" போன்றவர்' என்று கூறுகிறார்.

கம்பூச்சியாவில் தனது இன மக்களைக் கொன்று குவித்த "பொல் பொட்"டோடு அந்த நிருபர் பிரபாகரனை ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

# பதில் சொல்லவேண்டும் பிரபாகரன்!

ஆனால், புலிகள் அமைப்பின் வெளிநாட்டு பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் மாத்தையாவை ஒரு தேசத்துரோகி என்று சித்தரிக்கத் தொடங்கி விட்டன.

புலிகள் அமைப்பினரின் நடைமுறைகள் பற்றித் தெரிந்தவர்கள் அவர்களது வழக்கமான பிரச்சாரத் தந்திரமே இது என்று சொல்லு கின்றனர்.

உத்தியோகபூர்வமாக முதலில் உரிமை கோராமல், மக்களது மனநிலை பற்றி அறிந்து கொள்வது. தம்மால் தண்டனைக்குள்ளாக்கப் பட்டவர் பற்றிய மக்களது அபிப்பிராயங்களை நாடிபிடித்துப் பார்ப்பது. அல்லது முதலில் ஒரு நபர் பற்றிய காரசாரமான கருத்துக்களை வாய்மூலமும், தமக்கு ஆதரவான பிரச்சார சாதனங்கள் மூலமும் பரப்பிவிடுவது. அதன்மூல மாக சம்பந்தப்பட்டவர் கொல்லப்படவேண்டி யவரே என்ற கருத்தை மறைமுகமாக வலியுறுத்தும்

பிரபாகரன் தான் உயிரோடு இருப்பதை வெளிப்படுத்த ஒரு வீடியோ காட்சியிலும் தோன்றியிருந்தார்.

அப்போதும் உயிரோடு இருப்பது உண்மை யான பிரபாகரனா என்று சதந்தேகம் எழுப்பப்பட்டது. இந்தியப்படை வெளியேறிய பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு நடத்திய பிரபாகரன் தன்னோடு மாத்தையாவையும் அருகில் வைத்திருந்தார்.

பின்னர் சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிலும் பிரபாகரன் கலந்து கொண்டு தான் உயிரோடு இருப்பதை வெளிப் படுத்தினார்.

ஆனால் மாத்தையாவுக்கு இயக்கத்தில் பிரச்சனை என்ற செய்தி பரவத்தொடங்கிய பின் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அதனை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தன.

மாத்தையா என்பது சிங்களப் பெயர் என்று

பத்திரிகை நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

ஈழநாதம் பத்திரிகை பொறுப்பும் மாத்தையாவிடம் இருந்து எடுக்கப்பட்டது.

படிப்படியாக மாத்தையா தனிமைப் படுத்தப்பட்டு வந்த சூழலில் திடீரென்று காணாமல் போனார்.

பொட்டம்மான் உத்தரவுப்படி மாத்தையா கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக இப்போது புலிகளது வெளிநாட்டு பத்திரிகைகள் சொல்லுகின்றன.

இத்தனை நடந்தும், இப்போது மாத்தையா பிரச்சனை சர்வதேச ரீதியாக அறியப்பட்ட பிரச்சனையாக மாறிய பின்னரும் தமிழ் மக்களுக்கு புலிகள் உத்தியோகபூர்வமாக எதுவும் சொல்லவில்லை.

இந்த விவகாரம் புலிகள் இயக்க இரகசியம் சம்பந்தப்பட்டதல்ல. முக்கியமான இராணுவ இரகசியம். அதனால் வெளியே தெரியக்கூடாது

செயற்படும் அமைப்பல்ல.

அந்த அமைப்பின் ஒவ்வொரு செயற்பாடும்- அது சரியானதோ அல்லது தவறானதோ- மக்களிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இன்னும் சொல்லப்போனால் புலிகள் அமைப்பினரை விட, புலிகள் அமைப்பினரின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் ராஜீவ் கொலை செய்யப் பட்டதால் அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கினார்கள்.

இலங்கையில் பூநகரி முகாம் புலிகளால் தாக்கப்பட்டதால் படையினரின் பதிலடி நடவடிக்கையில் புலிகளைவிட பொதுமக்களே பாதிப்படைகிறார்கள்.

நிச்சயமற்ற வாழ்க்கை, போக்குவரத்துக் கஷ்டங்கள், உயிர்-உடமை இழப்புக்கள், பசி-பட்டினி, நோய்-நொடிகள் என்று தமிழ் மக்கள் பட்டுவரும் துயர்கள் தொடர்கதையாக

இதுவரை ஏனைய தமிழ் அமைப்புக்கள்தான் பிரபாகரனை சர்வாதிகாரப் போக்குடையவர், பொல் பொட் போன்றவர் என்று கூறிவந்தன.

இப்போது வெளிநாட்டுப் பத்திரிகைகளே அவ்வாறு எழுதும் நிலையை மாத்தையா விவகாரம் உருவாக்கியிருக்கிறது.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீதான புலிகளது இராணுவரீதியிலான வெற்றியை வீரம் என்று பாராட்டியவர்கள் கூட மாத்தையா விவகாரத்தின் பின், பிரபாகரனது பதவி ஆசைதான் அவரது பலவீனம் என்று பேசும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தனை இழப்புக்களும், துயரங்களும் - உள்சண்டைகளாலும், போட்டிகளாலும் விரயமாகி விழலுக்கு இறைத்த நீராகிவிடப் போகிறதே என்று புலிகளது ஆதரவாளர்களே வருத்தப்படுகிறார்கள்.

இயக்க கட்டுப்பாடு விடயத்திலும், எடுத்த முடிவை செயற்படுத்துகின்ற உறுதியிலும்




## எக்ஸ்ரே ரிப்போர்ட் — நாரதர்

இவ்வாறான தந்திரங்களைப் புலிகள் இதுவரை வெளியே தான் கடைபிடித்தனர்.

இப்போது அதே தந்திர முறையைத் தமது இயக்கத்தின் முக்கிய தலைவர் விடயத்திலும் புலிகள் கடைப்பிடிக்கின்றனர்.

இதுவரை பிரபாகரன் பகிரங்கமாக மாத்தையா மீது குற்றம்சாட்டவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் புலிகளது வெளியீடுகளிலும் மாத்தையா விவகாரம் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் பிரபாகரனுக்கு அனுப்பிய செய்திகளுக்குக்கூட இதுவரை பதில் சொல்லப்படவில்லை.

புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நெதர்லாந்து வானொலி நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் மாத்தையா-யோகி ஆகியோரைத் தாம் வெளியேற்றிவிட்டதாகக் கூறியுள்ளார்.

அதுகூட வெளிநாட்டு வானொலி சேவைக்கு அளித்தபேட்டிதான். உள்நாட்டு பத்திரிகைகள் எதற்கும் திரு. பாலசிங்கம் கூட மாத்தையாவின் நிலை பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில்

கூறிய பிரபா அந்தப் பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறினார். அதன்பின்னர் கோபாலசாமி மகேந்திரராஜா என்ற அவரது சொந்தப் பெயரிலேயே அவர் சம்பந்தப்பட்ட செய்திகள் யாழ் பத்திரிகைகளில் இடம்பெற்றன.

மாத்தையா தலைவராக இருந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலைக்கப்பட்டது. யுத்த காலத்தில் அரசியல் கட்சி தேவையில்லை என்று காரணம் சொல்லப்பட்டது.

இராணுவம் யாழ் நகருக்குள் வந்தால் அரசியல் கட்சி பிரமுகர்கள் தொல்லைப்பட வேண்டி வரும் என்றும் கூறப்பட்டது.

புலிகளது அரசியல் கட்சியில் இல்லாது போனாலும் புலிகளது ஆதரவாளர்களாக இருப்பவர்கள், இராணுவம் உள்ளே போனால் பிரச்சனைகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாத விசயம்.

கட்சியைக் கலைப்பதால் புலிகளது ஆதரவாளர்கள் யார் என்பது தெரியாமல் போகாது. ஆக, சொல்லப்பட்ட காரணங்கள்

என்று சாக்குப் போக்குச் சொல்லக்கூடிய விசயமும் அல்ல.

தாமே தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்று சொல்லுகிற புலிகள் அமைப்பினர் அந்த மக்களிடம் தமது முக்கிய தலைவர் பற்றிய விவகாரத்தை மூடி மறைப்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

பொதுமக்கள் மத்தியில் அறியப்பட்டவர். அந்த அமைப்பின் இரண்டாவது தலைவராகக் கருதப்பட்டவர். அவ்வாறான ஒருவர் இன்று எங்கே என்று தெரிந்துகொள்ள மக்களுக்கு உரிமை இருக்கிறது.

மக்களைக் குழப்பத்திலும், ஊகங்களிலும் சிக்கவைத்துக்கொண்டு மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துவதாகக் கூறுவது அர்த்தமற்றது என்பதை பிரபாக்ரன் உணரவேண்டும்.

எந்த முகாமை எப்போது தாக்குவது என்பது இரக்சியமான விசயமாக இருக்கலாம்.

இயக்கத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எத்தனை ஆயுதங்கள் இருக்கின்றன என்பதும் இரகசியமான விசயமாக இருக்கலாம்.

இருக்கின்றன.

'இழப்புக்கள் இன்றி விமோசனம் இல்லை', என்று புலிகள் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

அதுவும் சரிதான் என்று ஏற்றுக்கொள்ளும் மக்களும் இருக்கிறார்கள். இது தேவையற்ற யுத்தம் என்று கருதுகின்ற மக்களும் இருக்கிறார்கள்.

ஆனால், இப்போது தமது பிரதித் தலைவரையே ஒழித்துக்கட்டியவர்கள் புலிகள் என்ற கருத்தானது கஷ்டங்களையும், துன்பங்களையும் பல்லைக் கடித்துக்கொண்டு தாங்கிக் கொண்டிருந்தவர்களையும் தளர்வடைய வைத்திருக்கிறது.

ஏனைய இயக்கங்களது உறுப்பினர்களை புலிகள் அமைப்பினர் ஒழித்துக்கட்டியபோது மௌனமாக இருந்தவர்கள் கூட மாத்தையா விவகாரத்தில் வாய் திறந்திருக்கிறார்கள்.

இலண்டன் பி.பி.சி. வானொலிச்சேவை மாத்தையாவின் விதி பற்றி புலிகள் தமிழர்களுக்குச் சொல்லவேண்டும் என்கிறது. அதுவும் புலிகளுக்கு சார்பானவர் என்று ஏனைய அமைப்புக்களால் கூறப்படும் பி.பி.சி. ஆனந்தியே அவ்வாறான ஒரு

வெளிப்படுகின்ற பிரபாகரனது பலம், தனக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் மீது சந்தேகப் படுகின்ற நடைமுறையால் பலவீனமானதாக மாறிவிடுகிறது.

ஏனைய தமிழ் அமைப்புக்களையும் பலவீனமாக்கிவிட்டு இப்போது தாமும் மக்களது நம்பிக்கையீனங்களுக்கு உள்ளாகிக்கொண்டிருப்பது புலிகளுக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கான போராட்டத்தையும் மேலும் பின்தள்ளிவிடும்.

மாத்தையா விவகாரத்தின் மர்மம் என்னவென்பதை மக்கள் அறியவேண்டும்.

மாத்தையா மீது நடவடிக்கை எடுப்பது புலிகளது உள் அமைப்பு விதிகளைப் பொறுத்த விசயம்தான்.

ஆனால்- மாத்தையாவுக்கு என்ன நடந்தது? அவரது தவறுகள் என்ன, குற்றம் என்ன? என்பதை அறியும் உரிமை மக்களுக்கில்லை என்று பிரபாகரன் நினைக்கக்கூடாது.

மக்கள் பேசாமல் இருப்பது அச்சத்தினால். அதனை தமக்கரிய சாதகமாக நினைத்து புலிகள் செயற்பட்டால் சகல நம்பிக்கைகளையும் மக்கள் இழக்கவேண்டி ஏற்படும். ■



## அதிரடி அய்யாத்துரை

கிழக்கிலை பச்சைக் கட்சியிலை கேட்கிறதுக்கு எக்கச்சக்கமான பேர் விண்ணப்பம் போட்டவையாம். அதிகாரம் இருக்கிறதாலை அங்கை போகினம் எண்டு சொல்லப்பட்டது. எண்டாலும் தமிழ் அமைப்புக்களைவிட பச்சைக்கட்சிக்கு தைரியம்தான். கிட்டத்தட்ட முழு சபைகளிலையும் எல்லோ கேட்டிருக்கினம்!

ரெண்டு எழுத்தார் தங்கட பிரதியாரை விகாரமான மனுசனாய்க் காட்டுகிறதிலை ஒற்றைக்காலிலை நிக்கினம். உப்பிடியே தொடர்ந்தா அடுத்தது யார் பொட்டரோ எண்டு சனம் கதைக்கத்தொடங்கிப் போட்டுது. மெல்லத்தான் கதைக்கினம். உரத்துக் கதைச்சா நடக்கிறதே வேறையல்லோ பாருங்கோ.

பாரிசிலை பத்திரிகைக் காரியாலயத்திற்கு குண்டு போட்டவை ஆசிரியரையும் மிரட்டியிருக்கினமாம். பாவம் மனுசன். இஞ்சை இருந்து பத்திரிகை நடத்தப் பயந்து அங்கை போனவர். இப்ப அங்கையும் பிரச்சனை. ரெண்டு எழுத்துப் பிரமுகர் போய் அனுதாபம் தெரிவிச்சவராம். அவையே ரெண்டாப் பிரிஞ்சு நிக்கிறதாலைதானே பிரச்சனையே வந்தது.

ஈனடா பேப்பர் ஒண்டு, ரெண்டு எழுத்து பிரதியாரை அஜித் வடேகர் எண்டு முந்தி ஊரிலை நக்கலடிக்கிறவை எண்டு எழுதியிருக்கு. அவரும் தாயும் வடை சுட்டு வித்தவையாம். அதுதான் இந்திய கிரிக்கெட் வீரர் பெயரிலை நக்கலடிக்கிறதாம். அப்பிடிக் கஸ்ரப்பட்டு வளர்ந்தவர் எண்டபடியாத்தான் முன்னாள் ஜனாதிபதியோடை நெருக்கம் வந்ததாம். இதே பத்திரிகைதான் முந்தி ரெண்டு எழுத்து தலைவரும்-பிரதியாரும் இரட்டையர்கள் மாதிரி, நரநாராயணர்கள் மாதிரி எண்டு புகழ்ந்து எழுதினது. இதுதானுங்கோ காலம். அதிகாரத்திலை இருக்கும் வரைக்கும் ஆலவட்டம். பிறகு அதே ஆளை மட்டம் தட்டுறது. பனையேறி விழுந்தவனை மாடேறி மிதிச்ச கதையாய்க் கிடக்கு.

வேலியே பயிரை மேய்கிற காலம். திருமலை அகதிமுகாம் ஒண்டிலை காவலர் ஒருவர் பாலியல் பலாத்காரம் காட்டியிருக்கிறார். நடவடிக்கை எடுத்து அடையாள அணிவகுப்பும் நடந்து இப்ப வழக்கு நீதிமன்றத்திலை நடக்குது. வழக்கை நடத்துறது சர்வதேச நிறுவனம் ஒண்டாம். இந்த அநியாயத்தை கேட்கவே சர்வதேச நிறுவனம் தலையிட வேண்டிக்கிடக்கு பார்த்தியளோ?

வேண்டாம் இயக்கம் எண்டு விலகிப்போய் இருந்தவையைக் கூப்பிட்டு கையெழுத்துப் போடவைச்ச எலெக்சன் கேட்க வெச்சிருக்கினம். "என்ன தம்பி எலெக்சன் கேட்கிறீரோ?" எண்டு கேட்டா "எனக்கு ஒண்டும் தெரியாது அண்ணை. கையெழுத்துப் போடச் சொல்லிச்சினம் போட்டன்." எண்டு சொல்லுகினம் சிலர்.

திருமலை நகரிலை மட்டும் தேர்தல் விதிகளை காவல்துறை அதிகாரி கடுமையாய் கடைப்பிடிக்கிறாராம். கொடி கட்டக்கூடாது. போஸ்டர் ஒட்டக்கூடாது. வீடு தேடிப்போய் கும்பிடு போடக்கூடாது. இப்படிப் பல கட்டுப்பாடுகள். கையோடை விதிப் புத்தகத்தை வைச்சிருக்கிறார். ஆனால் பாருங்கோ நகருக்கு வெளியே பச்சை, நீலக் கொடிகள் பறக்குதாம். விதி அங்கையும் பாய்ஞ்சால் என்ன? ரூல்ஸ் எண்டா ரூல்ஸ்தானே!

மனம் தான் விரும்பின இடத்திலைதான் போய் நிக்கும். கட்டுப்படுத்தி இழுத்துவாறது கஷ்டமான விசயம். வேதநாயகம் பிள்ளை இதை முந்தியே இப்படிப் பாடியிருக்கிறார்.

"நேர் வந்து நின்னைக் கண்டு நேற்று இராத் திரியே மீண்டேன்;
ஊர் வந்து சேர்ந்தேன் என்றன் உளம்வந்து சேரக் காணேன்;
ஆர் வந்து சொல்லினும் கேளேன்; அதனை இங்கு அனுப்புவாயே!"

எளிமையான சொற்களில் உள்ளத்தை அள்ளுற வித்தை தெரிஞ்சவர் வேதநாயகம்பிள்ளை. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கலைஞரை கண்டிப்பதை புலிகள் நிறுத்தவேண்டும்! பொதுக்குழுத் தீர்மானங்கள் புலிகளை நோக்கி!!



தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியை விமர்சித்து புலிகள் அமைப்பினரின் வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதி வருவதை அக்கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தி.மு.க பொதுக்குழு கூடி எடுக்கப்பட்ட கண்டனத் தீர்மானம் வெளிநாடுகளில் உள்ள புலிகள் அமைப்பினரின் பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பவற்றுக்கு இப்போது அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பொதுக்குழு தீர்மானத்தின் விபரம்:

'இன வெறியர்களின் அராஜகத்தைக் கண்டித்து 1956ம் ஆண்டிலேயே கழகப் பொதுக்குழுவில் தீர்மானத்தை முன்மொழிந்தவரும் அதற்காகவே இலங்கையிலிருந்து திரும்பி வந்த இந்திய இராணுவத்தை- முதலமைச்சராக இருந்தும்- வரவேற்றிடச் செல்லாதவருமானவர் தலைவர் கருணாநிதி. விடுதலைப்புலிகளின் உட்கட்சிப் பிரச்சனையில் எந்த நாளிலும் தலையிட்டு எந்த விமர்சனமும் செய்யாத நிலையில் வெளிநாடுகளிலிருந்து வெளியிடப்படும் விடுதலைப்புலிகளின் ஆதரவு ஏடுகளில், 'தி.மு.க தலைவர்' தமிழ்த் தேசிய உணர்வை முன்னெடுத்துச் செல்லும் தீவிரவாதியல்ல. எனவே, தமிழ்த் தேசிய தலைமைக்குரிய தகுதி அவருக்கில்லை என்றும், 'இந்திய அரசின் பிரசார சாதனங்கள் ஈழத்தமிழர்கள் உரிமைக்கு எதிராக செய்ய வேண்டிய வேலையை கருணாநிதி செய்கிறார்' என்றும், 'தனித் தமிழ் ஈழத்தினை எதிர்க்கிறார்' என்றும், இந்திய உளவுத்துறையின் கைப்பொம்மையாகத் தமிழனையே காட்டிக்கொடுப்பவராகி விட்டார், என்ற உண்மையில்லாத குற்றச் சாட்டுக்களைக் கூறிக் கருணாநிதியின் தொண்டினைக் கேலி செய்வது தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தி வருவதால் அத்தகைய பத்திரிகையின் தவறான போக்கையும், நோக்கத்தையும் இந்தப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கருணாநிதியின் அரசியல் தலைமைக்கு முடிவு கட்டுவதில் ஆர்வம் காட்டும் விடுதலைப்புலிச் சார்பினரின் எண்ணம், ஜனநாயக நெறியில் இயங்கி வரும் தி.மு.க உள்ளிட்ட அரசியல் கட்சிகள் செயற்படும் தமிழ் மண்ணில் வன்முறை கால்கொள்ள வழி செய்வதாகும் என்று இப்பொதுக்குழு கவலை தெரிவிக்கிறது. எனவே அப்படிப்பட்ட பிரச்சாரத்தில் ஈடுபடுவதையும், தி.மு.க.வின் உள்கட்சி விவகாரங்களில் தலையிடுவதையும் விடுதலைப்புலிகளின் சார்பு ஏடுகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இந்தப் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தி.மு.க.வின் பொதுக்குழு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

# கொலைப்பட்டியலில் பெயர் இல்லை! அதனால் வந்தது யோகிக்கு தொல்லை!!

சென்றவாரத் தொடர்ச்சி

### யோகியின் நிலை

மக்கள் முன்னணிச் செயலாளர் யோகியின் நிலைமையும் இங்கு கவனத்தை ஈர்க்கும் ஒன்றாகும். மக்கள் முன்னணிக் கலைப்புடன் யோகியின் வாராந்த புலிகளின் குரல் வானொலிப்பேச்சு நின்றது. பத்திரிகைகள் பேட்டிகளும் நின்றன. மக்கள் முன்னணி கலைக்கப்பட்ட பின்னர் சிறு சிறு குழுக்களாகப் பொதுமக்கள், ஆதரவாளர்களைச் சந்தித்து இரகசிய உரையாடல்கள் நடத்தினார் என்ற சந்தேகம் யோகியின் வீழ்ச்சிக்கு வழி கோலியது. ஆனாலும் மாத்தையாவைப் போலல்லாது அவ்வப்போது பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். ஆனால் அண்மையில் யோகி புனர்வாழ்வு பெற்று உயர் கல்வித் துறையில் சில பொறுப்புக்களையும் பெற்றார்.

ஆனால் இந்தியச் சதி விவகாரத்தையடுத்து மாத்தையாவுடன் நெருக்கமான பழைய மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். யோகியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் வேறுபல முன்னாள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் தம்மைக் குற்றமற்றவர் என்று நிரூபித்து விட்டனர். ஆனால் யோகியின் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று ஒரு தகவல் தெரிவிக்கிறது. அழிக்கப்பட வேண்டிய தலைமைத்துவப் பட்டியலில் யோகியின் பெயர் இல்லாததும் அவர் மக்கள் முன்னணி ஆதரவாளர்களுடன் கூட்டங்கள் நடத்தினார் என்ற பழைய குற்றச்சாட்டும் அவருக்கு இன்னும் பாபு விமோசனம் அளிக்கவில்லை என்றே கூறப்படுகிறது.

யோகி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் ஓர் உறுதிப்படாத தகவல் உண்டு.



புலிகள் இயக்க உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மான் மனைவி, குழந்தையுடன்.

### அடுத்தது என்ன?

ஏற்கனவே குறிப்பிட்டது போல் மாத்தையா மீதான விசாரணையை ஒரு நீதி மன்ற விசாரணை போலவே கருதி அது பூரணமடையும் வரை கருத்துக்கூறுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த விசாரணையின் இறுதி முடிவு விடுதலைப்புலிகளால் பகிரங்கப்படுத்தப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசாரணையில் மாத்தையா குற்றமற்றவராகக் காணப்பட்டால் கூட மீண்டும் பழையபடி இயங்குவார் என்று கருதிவிட முடியாது. ஏனெனில் மாத்தையாவைச் சதிக்கு உடந்தையாக்க வெறும் முயற்சிதான் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியக் கூறும் உண்டு. மாத்தையா குற்றமற்றவரென்று காணப்பட்டாலும் பிரபாகரன் மாத்தையாவுக்கிடையில் பிளவு என்றே கூறவேண்டும். ஆனால் உண்மையில் பிரபாகரன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் முன்னரே சதி முறியடிக்கப்பட்டது, தலைக்குவந்தது தலைப்பாகையுடன் போன நிலைதான்.

ஏனெனில் இன்றைய யதார்த்த நிலை என்னவென்றால் பிரபாகரன் ஒரு இயக்கத்தின் தலைவர் மாத்திரமல்ல. தமிழ்தேசிய எழுச்சியின் வடிவம். விடுதலைப்போரின் சின்னம்.

இன்றைய கால கட்டத்தில் அவரது தலைமைத்துவம் ஈழத் தமிழினத்துக்கு இன்றியமையாததாகி விட்டது. பாரதி பாடல் வரியின்படி "ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்னே வாராது போல் வந்த மாமணியைத் தோற்க முடியாது."

"தனிமனிதர்கள் அழியலாம். ஆனால் தத்துவம் அழியாது" என்ற வாசகம் சித்தாந்த ரீதியாகச் சரியாகத்தான் ஒலிக்கின்றது. ஆனால் பிரபாகரன் என்ற தனிமனிதன் போன பின்னர் தமிழ் ஈழ இலட்சியம் பலமாகப் பன்னெடுங்காலம் நிலைக்கும் என்று நினைப்பவாக்ள தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவர்கள். அதற்கு மாத்தையாவும் விதிவிலக்கல்ல.

கனடா 'செந்தாமரை' மஞ்சரியில் புலிகளது உள்பிரச்சனை தொடர்பாக வெளிவந்த தகவல்களை இதுவரை முரசு வெளியிட்டது.

மாத்தையா மீதான புலிகளது குற்றச் சாட்டுக்கள் என்று செந்தாமரை மஞ்சரி குறிப்பிட்டுள்ளவற்றில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

கிட்டு மீதான கொலை முயற்சி வேறு தமிழ் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டதாகவே முன்பு புலிகள் அமைப்பினரால் கூறப்பட்டது.

பிரபாகரனது நெருங்கிய கூட்டாளியாகவும், புலிகளது இரண்டாவது முக்கிய தலைவராகவும் இருந்தவர் எவ்வாறு துரோகியாக மாறினார் என்பது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கவே செய்கிறது.

புலிகள் அமைப்பினர் உடனடியாக நிலமையை தெளிவுபடுத்த வேண்டும். அதுவே மக்கள் உண்மைகளை கண்டறிய வழிவகை செய்யும்.

புலிகள் அமைப்பின் உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் பொட்டம்மானின் மேற்பார்வையில் மாத்தையா மீது விசாரணைகள் நடைபெறுவதாக ஒரு செய்தியும், மாத்தையா ஏற்கனவே கொல்லப் பட்டுவிட்டார் என்று இன்னொரு செய்தியும் வெளியாகியிருக்கின்றன. எது உண்மை என்பது பிரபாகரனுக்கும் அவரது நம்பகமானவர்களுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம். ●

3ம் பக்கத் தொடர்ச்சி

யோகியும் மாத்தையாவும் இருபதாவது வயதுகளில், போதுமான பயிற்சி பெறாத இராணுவ வீரர்களாத ஆக்கப்பட்டவர்கள், சிறந்த திட்டங்களை வகுக்கும் திறமைவாய்ந்த 39 வயதான பிரபாகரனுடைய நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்கள் என்பதும் சில போர் முனைகளில் வீரம் காட்டியவர்கள் என்பதுமே இவர் களுடைய தகுதிகளாகும். 8,000பேரே இருந்த போதும் 90,000 சிறப்பான பயிற்சி பெற்ற இலங்கை அரசுப் படைகளையே தூர நிற்க வைத்த சிறப்பினைக் கொண்டது பிரபாகரனின் படை.



புலிகளில் 17வயதுக்கு மேற்பட்டவர்களைக் காணமுடியவில்லை!

முப்பது இலட்சம் மக்களைக் கொண்டதொரு சமுதாயத்துக்கு விடுதலையினை வாங்கித் தரப்போகிறார்கள் என்று நம்பிக்கையுடனிருந்த மக்களில் பெரும்பாலானோர், இன்று புலிகள் தங்களைத் தாங்களே விழுங்கிக் கொண்டுவிடுவார்களோ என்று எண்ணத் தலைப்பட்டுவிட்டனர்.

"காட்டிக்கொடுத்தவர்கள்" என்ற குற்றச்சாட்டுடன் கடந்த சில வாரங்களில் ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிட்டுவின் மரணம் பற்றிய விசாரணைகள் நூற்றுக்கும் அதிகமான போராளிகளை இப்பொழுது கலங்க வைத்துள்ளது.

இயக்கத்தின் பிரபலமான ஆலோசகரான திரு.அன்ரன் பாலசிங்கம் மீதும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

சுமார் 8 இலட்சம் தமிழர்கள் சதா குண்டுவீச்சு அபாயங்களினாலும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினாலும் நெருக்கப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் ஆண்களும் பெண்களுமான பிள்ளைகள் பட்டாளம் ஒன்றினை அமைப்பதற்கேற்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

கம்போடியாவில் "க்மொர் றோக்" இயக்கத் தலைவராக விளங்கிய, பல கொடுமைகளை விளைவித்த பொல்பொட்டுக்கு நிகரானவர் பிரபாகரன் என்று ஒப்பிடப் படுகிறார்.

ஒரு பைத்தியகாரத்தனமான நம்பிக்கையினை ஏற்படுத்தி தனது படைகளை பிரபாகரன் வளர்த்து வருகிறார்.

13 வயதுடையவர்களும் அவரது படையிலுள்ளனர்.

கரும்புலிகள் படைகளில் சேரும்படி தூண்டும் வீடியோ படங்கள் பள்ளிகளில் காண்பிக்கப்படுகின்றன.


கடந்த மேயில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும், அதற்கு முன்னர் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் படுகொலை செய்யப்படுவதற்கு புலிகளது கரும்புலிகள் பிரிவே காரணம் என்று பரவலான நம்பிக்கை நிலவுகிறது.

## கரும்புலிகளில் சேருமாறு வீடியோ படங்கள்! பள்ளிகள்தோறும் புலிகளால் காண்பிக்கப்படுகின்றன!!

காட்டப்படும் வீடியோ படத்தில், ஒரு செயற்திட்டத்துக்காக தன்னுடைய பெயரைக் குறிப்பிட்டு அழைத்ததும் அந்தப் பையன் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியினைத் தெரிவிப்பதாகக் காட்டப்படுகிறது. தனது கூடாரத்தைக் கூட்டிப் பெருக்கும் பணியினைப் புரியும் அந்தப் பையன் பின்னர் வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட ஒரு மோட்டாருக்குள் புகுந்து சுக்கு நூறாக சிதறும் காட்சி படமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறு பையன்கள் பிரபாகரனால் த்லை சிறந்த வீரர்கள் என்று போற்றப்படுவதுதான் கண்ட பலன்.

கடந்த நவம்பரில் பூநகரியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த பல வீரர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். இத்தாக்குதலில் இலங்கை அரசுப் படைகள் 1200 பேர் வரை கொல்லப்பட்டனர். காயம்பட்ட போராளிகளில் 17 வயதுக்கு மேலான எவரையும் காண முடியவில்லை. பலருக்கு 14 வயதுதானாகிறது.

துப்பாக்கிகளைத் தூரவைத்துவிட்டு, கழிக்கப்பட்ட பிளாஸ்ரிக் மருத்துவ போத்தல்கள் போன்றவற்றில் மீன் வடிவங்களை அமைத்து சிறுபிள்ளைகளாக அவர்கள் விளையாட ஆரம்பித்துள்ளனர். அவர்களுடைய கழுத்தில் தொங்கும் சைனைட் குப்பிகளே அவர்களும் போர் வீரர்கள் என்பதனை அடையாளங் காட்டுகின்றன.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புலம்பெயர்ந்த விஷமிகளின் பொல்லாத விஷமத் தனங்கள்!

## அலசுவது – இராஜதந்திரி




இலங்கையில் இனப்பிரச்னை நிலவுகின்றது என்பது உலகறிந்தவிடயம்.

இப்பிரச்னை இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தற்போது ஒரு யுத்தமாக வெடித்துள்ளது என்பதும் அனைவரும் அறிந்ததே.

இருந்தபோதிலும் இலங்கை ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க "இலங்கையில் இனப்பிரச்னை எதுவுமில்லை. பயங்கர வாதமே நிலவுகின்றது," என்று கூறி வருகின்றார்.

அத்துடன் இலங்கையின் இனப் பிரச்னைக்கு இலங்கை அரசினாலேயே தீர்வொன்றினைக் காணமுடியும். வெளி நாட்டுத் தலையீடுகள் எதுவும் தேவையில்லை என்பதே இலங்கையின் ஆட்சியாளர்களின் நிலைப்பாடாக இருந்துவருகின்றது.

இந்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்கு வாழ் பிரதேச மக்கள் தமது நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதிலும், தமது பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாத்து ஒரு கௌரவமான அரசியல் தீர்வொன்றை எட்டுவது தொடர்பிலும் கணிசமானளவு அரசியல் பங்களிப்பைச் செய்யவேண்டியவர்களாக உள்ளார்கள்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்னை எதுவுமில்லை. பயங்கரவாதமே நிலவுகின்றது என்று கூறிவருவதை மறுதலித்து தமது நியாயமான உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டை ஒரு நடுநிலையான அரங்கில் முன் வைக்க வேண்டும். அந்த அரங்கின் நீதியான தீர்ப்பு தமக்குக் கிடைக்க வேண்டுமென்பதே வடக்கு-கிழக்கில் வாழும் ஒவ்வொரு சராசரித் தமிழ் பேசும் குடிமகனதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

கடந்த பத்து வருடகாலத்தில் இலங்கையில் மோசமடைந்துள்ள இனத்தகராறானது உலகில் அனைவரது கவனத்தையும் விரிவானவகையில் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

1983ம் ஆண்டு ஜூலையில் இலங்கையில் வெடித்திருந்த இனக்கலவரமும், அதனைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக இடம்பெற்ற மாற்றங்களும், வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் கல்வி,சமூக, பொருளாதாரத் துறைகளில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

உடமைகளைப் பறிகொடுத்தோர், உரிமைகளை இழந்தோர், பாதுகாப்பற்றோர் என்ற அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் இலங்கையிலிருந்தும் புலம்பெயரலானார்கள்.

அயல் நாடான இந்தியாவுக்கு மட்டுமல்ல, முற்றிலும் அந்நியமான சமூக, அரசியல், பொருளாதாரத் தன்மைகளைக் கொண்ட மேற்குத்தேய நாடுகளுக்கும் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் படையெடுத்திருந்தனர்.

அல்லலுற்ற மக்கள், அகதிகளாகி யிருப்பவர்கள் என்ற ரீதியில் அடிப்படை மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் மேற்குத்தேய நாடுகள், இலங்கைத் தமிழர்களுக்கு அபயக்கரம் நீட்டி அவர்களது பாதுகாப்பை, உறுதி செய்வதில் முன்னின்றிருந்தன.

இதனையடுத்து சங்க காலப் புலவர் கனியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற மேம்பட்ட கூற்றினை நிஜமாக்குவது போல விதவிதமான சமூக, கலாசார வேறுபாடுகளைக் கொண்ட வெவ்வேறு நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் அடைக்கலம் புகலானார்கள்.

இவ்வாறு அகதிகளாகவும், நாதியற்றவர்களாகவும், இலங்கையில் நிலவும் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க முடியாதவர்களாகவும் இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் பூகோளத்தின் அனைத்துப் பாகங்களுக்கும் பறந்து சென்றிருந்தனர்.

இத்தகைய தமிழ் மக்களில் அநேகர் மேற்குத்தேய நாடுகளில் இன்று தமது கடின உழைப்பினாலும், விடா முயற்சியினாலும், அகதிகள் என்ற வட்டத்திற்குள்ளிருந்தும் தம்மை விடுபடச் செய்வதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றனர்.

இரவு, பகல் பாராது சீதோஷ்ண நிலைமைகளின் சவால்களை சமாளித்தவர்களாகவும், வயது வேறுபாடின்றியும், ஆண்,பெண் என்ற வித்தியாசமின்றியும், எத்தகைய தொழிலையும், எந்த நேரத்திலும் செய்பவர்களாகவே மேற்குத்தேய நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் காணப்படுகின்றனர்.


மேற்குத்தேய நாடுகளில் இருந்துவரும் தமிழ்பேசும் மக்களின் உழைப்பை எதிர்பார்த்தவர்களாகவே இன்று பெருமளவிலான வடக்கு-கிழக்கு, குறிப்பாக வடபகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் பண உதவிகள் மூலமே வடபகுதியில் இருப்போர், அங்குள்ள விலை உயர்வு, மற்றும் ஏனைய பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிக்கக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர்.

ஆனால் அண்மைக்காலங்களில் மேற்குத்தேய நாடுகளில் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்கள் அருவருக்கத் தக்கனவாகக் காணப்படுகின்றன.

அத்துடன் இலங்கையில் நிலவும் அரசியல், இராணுவ நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் புலம் பெயர்ந்த மக்கள் மீது மேற்குத்தேய மக்கள் காட்டிய பரிவு, மற்றும் அவர்கள் வழங்கிய பாதுகாப்பு என்பவற்றை இழக்கச் செய்வதாகவும் இலங்கைத் தமிழர்களின் அடாவடித்தனங்கள் காணப்படுகின்றன.

அண்மையில் பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் மாநகரில் இயங்கிவந்த 'ஈழநாடு-பாரிஸ்' பத்திரிகைக் காரியாலயம் வன்முறைக் கும்பல் ஒன்றினால் குண்டுவீசித் தாக்கப்பட்டிருந்தது.



பிரான்ஸ் நாட்டில் ஒரு செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டு 'ஈழநாடு-பாரிஸ்' வெளிவருகின்றது.

எந்தவொரு மொழியையும், எந்தவொரு அரசியல் கண்ணோட்டத்தையும் ஏற்றுக்கொள்ளும் பிரெஞ்சுக்காரர்களின் தாராளப் போக்கின் காரணமாக எதுவித இடையூறுமின்றி பாரிஸ் நகரிலிருந்தும் ஈழநாடு வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையிலிருந்தும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல், இலக்கிய, சமய, கலை, கலாசார துறை சார்ந்த படைப்புக்களுக்கும், கண்ணோட்டங்களுக்கும் களம் அமைப்பதாகவே ஈழநாடு-பாரிஸின் பணி விளங்கியிருக்கிறது.

புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் இந்திய சுதந்திரப்போராட்ட காலத்தில் தீவிரமாக இயங்கியிருந்தார். அவரது சுதந்திர வேட்கைப்பாடல்கள் கேட்போரைச்சுண்டி இழுப்பனவாகவும், தமிழ்நாட்டினருக்கு சுதந்திர உணர்வை ஊட்டுவனவாகவும் விளங்கியிருந்தன.

எனவே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரையும் தமது விரோதியாகக் கருதலானார்கள். இதனையடுத்து பிரிட்டிஷாரிடமிருந்தும் தப்பும்வகையில் மகாகவி பாரதியார் தென்னிந்தியாவின் பிரெஞ்சுக்காலனித்துவப் பகுதியாகவிருந்த பாண்டிச்சேரியினுள் தஞ்சம் புகுந்திருந்தார்.


பாண்டிச்சேரியின் பிரெஞ்சுக் காலனித்துவ அரசாங்கம், மகாகவி பாரதிக்கு தஞ்சம் வழங்கி அவரது சுதந்திர உணர்வுக்கும், இலக்கியப் பசிக்கும் வடிகாலமைத்திருந்தது.

மகாகவி பாரதியார் கூட பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்றவராக விளங்கியிருந்தார்.

இவ்வாறு ஒரு பரஸ்பர புரிந்துணர்வுக்கு மகாகவி பாரதியாரின் காலத்தில் வழியமைத்தது போலவே இன்று ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கும் பிரான்ஸில் கல்வி, தொழில், வாய்ப்புக்களைப் பெறுவதில் பிரெஞ்சு அரசாங்கம் கெடுபிடிகளைத் தளர்த்தியிருக்கக் காணப்படுகின்றது.

இதனடிப்படையிலேயே 'ஈழநாடு-பாரிஸ்' பத்திரிகையும் பிரான்ஸில் வெற்றிகரமாக இயங்கி வரக் காணப்படுகின்றது.

பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சுக்காரர்களே மதிப்பளித்த நிலையில் இயங்கிவரும் ஈழநாடு காரியாலயம் மீது தமிழ் பேசும் விஷமக் கும்பலொன்று தாக்குதல்நடத்தியுள்ளமை மிகவும் அதிர்ச்சிதரும் ஒரு செயலாகவே விளங்குகின்றது.



1981ம் ஆண்டு யாழ்குடாநாட்டில், யாழ்ப்பாணம் பொதுசன நூலக நிலையத்துக்கும், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயத்துக்கும் காடையர் கும்பலொன்றினால் தீ வைக்கப்பட்டிருந்தது.

யாழ் குடாநாட்டு மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் ஒரு படுபாதகமாகவே இந்த இரு தீவைப்புச் சம்பவங்களும் விளங்கியிருந்தன.

ஆயிரக்கணக்கான நூல்கள் பெரும் சாம்பல் குவியலாக மாறிய நிலையில் யாழ்பொதுசன நூலக நிலையம் சிதைவுற்றிருந்தது.

ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் அதன் அச்சு இயந்திரம், அச்சுக்கூட உபகரணங்கள், மற்றும் காரியாலயக் கட்டிடம் என்பன சேதமுற்ற நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

யாழ் பொதுசன நூலகம், யாழ்ப்பாணம் ஈழநாடு காரியாலயம் ஆகியன தீயிடப்பட்டமை இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் பெரும்பாதிப்புக்குள்ளாக விருப்பதையே முன்னறிவிப்புச் செய்வதாக இருந்தது.

யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையின் பாணியைத் தழுவியதாகவும், அப்பத்திரிகை நிலை நிறுத்த முயன்ற தமிழ்பேசும் மக்களின் விழுமியங்களைப் பறைசாற்றும் பாங்குடனேயே பாரிஸ் ஈழநாடு விளங்கியிருந்தது.

ஆனால் இப்பத்திரிகை மீது தற்போது பாரிஸ் நகரில் நடத்தப்பட்டுள்ள தாக்குதலானது, கடல்கடந்த நாடுகளிலும் தமிழ் பேசும் விஷமக் கும்பல்கள் வம்பை விலை கொடுத்து வாங்குவதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

அத்துடன் இலங்கையில் இனப்பிரச்னை எதுவும் இல்லை; பயங்கரவாதமே நிலவுகின்றது என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கூறிவருவதையும் வெளிநாடுகளில் நியாயப்படுத்துவதாகவும் பாரிஸ் ஈழநாடு தாக்குதல் சம்பவம் விளக்கி நிற்கின்றது.

## பிரபாகரனுக்கு அரசு விடுக்கும் அழைப்பு
## அழுத்தமும், அர்த்தமும் நிறைந்ததாக இருக்கவேண்டும்

இதேவேளை இலங்கையின் இளம் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்ட பின்னர் புலிகளை பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி விடுத்துள்ள இரண்டாவது நேரடி அழைப்பாக இது விளங்குகின்றது.

கடந்த ஆண்டு பாரிஸ் நகரில் இடம்பெற்ற, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் திரு.ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட பின்னர் நாடு திரும்பும் வழியில் இந்தியா சென்றிருந்தபோது அங்கிருந்தும் திரு.விக்கிரமசிங்க தமது முதலாவது அழைப்பை விடுத்திருந்தார்.

கடந்தவாரம் தென்னிலங்கையின் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற ஒரு பொது வைபவத்தில் கலந்து கொண்டபோது அவர் தமது இரண்டாவது அழைப்பை புலிகளை நோக்கி விடுத்திருந்தார்.

இந்த இரு அழைப்புக்களும் உத்தியோக பூர்வமாற்ற சாதாரண அழைப்புக்களாகவே விளங்கியிருந்தன. ஆனால் மறுபுறத்தே புலிகளுடனான பேச்சுக்களில் பங்கு பற்றுவதில் அரசு தொடர்ந்து ஆர்வங்கொண்டிருப்பதையே புலப்படுத்துவனவாக இந்த அழைப்புக்கள் விளங்கியிருந்தன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் புலிகள் இயக்கத்தினரின் மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகள் இயக்கத்தலைவர் திரு.வே. பிரபாகரன் செய்தியொன்றை விடுத்திருந்தார்.

அச்செய்தியில் அவர் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதில் இலங்கை அரசு அக்கறையற்றிருக்கின்றதென்றே குறிப்பிட்டிருந்தார்.

கூடவே பூட்டானின் தலைநகரான திம்பு நகர் முதற்கொண்டு இலங்கையின் தலைநகரான கொழும்பு நகர்வரை பல்வேறு பேச்சுவார்த்தைகளில் புலிகள் ஈடுபட்டனர் என்றும், ஆனால் அப்பேச்சுக்கள் எதுவித பலனையும் தரவில்லை எனவும் திரு.பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

எனவே புலிகள் தலைவர் திரு.வே.பிரபாகரன் மாவீரர் தினத்தை முன்னிட்டுத் தெரிவித்திருந்தவற்றுக்குப் பதிலளிப்பதாகவே திரு.ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அழைப்பு விளங்கியிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமக்கு பேச்சு வார்த்தைகளில் ஆர்வமிருப்பதை வெறுமனே வாய்ப்பேச்சளவில் மட்டுமே அவ்வப்போது கூறிவருகின்றனரே தவிர உரிய வகையில் தமது ஆர்வத்தை அரசியல் ரீதியாக முன்னெடுப்பவர்களாகக் காணப்படவில்லை.

திரு.ரணில் விக்கிரமசிங்க தற்போது அரசியலமைப்பை சீரமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்கமிட்டி என்ற புதிய அமைப்பின் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

எனவே புலிகளை அவர்களது சமரச யோசனைகள், மற்றும் கோரிக்கைகளை இப்புதிய பாராளுமன்ற தெரிவுக் கமிட்டியிடம் சமர்ப்பிக்கும்படியும் திரு.ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் ரீதியாக புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி தீர்வொன்றைக் காண்பதில் அரசு ஆர்வமாக இருப்பதைத் தெரிவிக்கும் விதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கலாம்.

ஆனால் இன்று புலிகளை பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதற்கு வரும்படி விடுக்கும் அழைப்பானது மேலும் அழுத்தம் நிறைந்ததாகவே இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

அரச தரப்பினருக்கும் புலிகளுக்கு மிடையே நேருக்கு-நேரான, ஒளிவு-மறைவற்ற நேரடிப் பேச்சுக்கள் இடம்பெறுவதே இன்று அவசியமானதாக இருக்கின்றது.

வட்ட மேசை மகாநாடுகள், தெரிவுக்குழு நடவடிக்கைகள், மற்றும் இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்கள் என்பன கடந்த காலங்களில் நடத்தப்பட்டிருந்தன.

ஆனால் அவையாவும் எதுவித பலனையும் தந்திருக்கவில்லை. இதனையே திரு.பிரபாகரனும் திம்பு முதல் கொழும்புவரை நடத்திய பேச்சுக்களில் பயன் எதுவும் கிட்டவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் புதிய பேச்சுக்களை புலிகளுடன் ஆரம்பிப்பதில் அரசு உண்மையிலேயே ஆர்வங்கொண்டிருந்தால், அப்பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி புலிகளுக்கு விடுக்கும் அழைப்பு, மற்றும் பேச்சுவார்த்தை குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் கூடுதல் அழுத்தத்தையும், அர்த்தத்தையும் வழங்கவேண்டியவர்களாகவே ஆளுங்கட்சியினர் காணப்படுகின்றனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

லேடீஸ் ஸ்பெசல்



## பத்து யோசனைகள்

# பத்து நாட்கள் போதும் பத்து வயது குறையும்!



பத்தே நாட்களில் உங்கள் தோற்றத்தில் 10 வயது குறைந்த தோற்றத்தைப் பெற முடியும். அதற்கான எளிய பயிற்சி முறைகள் சிலவற்றை இத்தாலியைச் சேர்ந்த அழகியல் நிபுணரான சொஃபியா மாட்டினெலி தருகிறார்.

அளவான உணவு, போதுமான ஓய்வு அத்துடன் திடமான எண்ணங்களைத் தரும் நல்ல சிந்தனை ஆகியவை உங்கள் உடலின் பொலிவுக்கு இன்றியமையாத சாதனங்கள்.

அத்துடன் அளவான-தேவைக்கேற்ற ஒப்பனையும் சேர்ந்தால் உங்கள் தோற்றம் சிறப்படையும் என்பது திண்ணம். இன்றைய திரையுலக முன்னணி நட்சத்திரங்கள், மொடல் அழகிகள் ஆகியோரின் அழகினையும் மாறா இளமையினையும் பார்த்து வேறு பெண்கள் பொறாமைப்படுவதற்குக் காரணம், இவர்கள் தங்கள் வசீகரத் தோற்றத்தினைப் பேணிப் பாதுகாப்பதில் அதிக நாட்டம் காட்டுவதேயாகும்.

செல்வி மாட்டினெலி தரும் பயிற்சி முறைகளைப் பார்ப்போம்.

### 1. ஒப்பனை

பெண்களானாலும் ஆண்களானாலும் ஓரளவாவது ஒப்பனை தேவை. ஒப்பனைக்கான சாதனங்கள் புதிது புதிதாக சந்தையில் வந்து குவிகின்றன. நீங்கள் இப்பொழுது பயன்படுத்தும் சாதனங்கள் காலங்கடந்தவையாக இருக்கலாம். ஆகவே புதியவற்றை-உங்கள் முகத்துக்குப் பொருத்தமானவற்றை மட்டும் தெரிவு செய்துகொள்ளுங்கள்.

இவற்றில் போலித் தயாரிப்புகள் மலிவு விலையில் கிடைக்கலாம். அவற்றில் மயங்கிவிடாமல் எச்சரிக்கை தேவை. இத்தகைய பொருட்களை வாங்கிப் 'பரீட்சித்துப் பார்த்து விடலாமே' என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

உங்களுடைய இயற்கை எழிலினை சற்று மெருகூட்டுவதாகவே உங்கள் ஒப்பனை அமைதல் வேண்டும். உங்களுடைய இயல்பான தோற்றத்தை மாற்றி அமைக்கும் ஒப்பனை எதிர்பார்த்த பலனைத் தராமல் உங்களை விகாரமாக்கிவிடவும் கூடும்.

### 2. ஆடை அலங்காரம்

புதுப்புது மோஸ்தர்களில் ஆடை அணிகள் வந்து அன்றாடம் குவிகின்றன. அவை எல்லாவற்றின் மீதும் உங்கள் கவனம் செல்லலாகாது. உங்களுடைய உடல்வாகுவுக்கு ஏற்ற அணிமணிகளை மட்டும் தேர்ந்தெடுங்கள். குறிப்பாக, உங்கள் வயதினை மிகைப் படுத்தாமல், சற்றுக் குறைத்துக்கணக்கிடத்தக்க உடைகளைத் தேர்ந்தெடுங்கள். (அதற்காக சாதாரணமாக சாறி உடுத்திக்கொண்டு திரியும் ஒருவர் 'மினி கௌண்' அணிய வேண்டுமென்பதல்ல.)

### 3. உணர்வார்வம்

தேகப்பயிற்சி, போதுமான ஓய்வு, உணவு முறை ஆகியவற்றுடன் உணர்வு பூர்வமான ஆர்வமும் இருந்தால் நினைத்ததை சாதிக்க முடியும்.

உடலில் ஏற்படும் சோர்வினை அகற்றி அழுத்தத்தைக் குறைத்து புத்தூக்கத்தைத் தரவல்ல சாதனம் உடற்பயிற்சி.

உங்கள் உடல்- உள இறுக்கத்தை தளர்த்துவதனால் அவசியமான போது சக்தியினைப் பிரயோகிக்க வேண்டிய வேளையில் மட்டும் பயன்படுத்தக்கூடிய தன்மையினைப் பெறுவீர்கள்.

ஒழுங்கான உணவு முறை அழுத்தத்தை குறைக்க உதவும். இளமைத் தோற்றத்தைத் தரத்தக்கதும் சீரான நிலையில் உங்கள் உடலையும் உள்ளத்தையும் வைத்திருக்கவும் நல்வளத்தைத் தரவும் உணவே உதவுகிறது. சரியான அளவுப் பிரமாணத்துடன் உணவு உட்கொள்ளும் பழக்கம், தேவையற்ற சதை-தசை வளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, வயதினை மீறிய தோற்றத்தை நிறுத்தவல்லது.

### 4. எடையில் கவனம்

உடலின் எடை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வயதையும் உயரத்தையும் அளவிட்டு, அதற்கேற்ப உடல் எடையினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுதல் அவசியம். எடை கூடும்போது உடல் பெருப்பதுடன் வயது அதிகரித்ததாகவும் காட்டும் தோற்றத்தினையே பெறுவீர்கள்.

### 5. தலை அலங்காரம்

சிகை அலங்காரம் பெண்களுக்கு மிகவும் பிரதானமானது. ஒவ்வொருவருடைய முக அமைப்புக்குமேற்ற சிகை அலங்காரம் உண்டு. உங்களுடைய முகத்துக்கேற்ற சிகை அலங்காரத்தைப் பின்பற்றுவது நல்லது. அவ்வப்போது அலங்காரத்தினை மாற்ற நேர்ந்தாலும் உங்கள் தோற்றத்துக்கு ஏற்காத அலங்காரம் அழகினையே கெடுத்து விடக்கூடும்.

### 6. நடமாட்டம்

சாதாரணமாக நடக்கும்போதோ அல்லது அலுவலகங்களில் பணி புரியும் போதோ நேரிய பார்வையும் நிமிர்ந்த நடையும் அவசியம். உள்ளத்தில் ஏராளம் பிரச்சனைகள் எழுந்தாலும் வெளியே அவற்றைக் காட்டிக் கொள்ளாமல் திடமாக நடமாடப் பழகிக் கொள்ள வேண்டும். சோர்வினை முகத்திலோ அல்லது நடையிலோ காட்டினால் உங்கள் வயதில் பல வருடங்கள் அதிகரித்து விட்ட தோற்றத்தினையே பெறுவீர்கள்.

பெண்களின் தோற்றத்தில் தொய்வினை ஏற்படுத்துவது பொதுவாக வயிறின் அளவுதான். இதற்காகத் தொந்தியைக் குறைக்கக் கூடிய தேகப் பயிற்சிகள் கை கொடுக்கும். யோகப் பயிற்சி முறை இதற்கு இன்றியமையாதது. நிமிர்ந்த நடை உங்களுக்கு இளமைத் தோற்றத்தைத் தரும்.

### 7. அழுத்தம் அகற்றல்

அன்றாடப் பிரச்சனைகள் மனதுக்கும் உடலுக்கும் அழுத்தத்தையும் அமுக்கத்தையும் தருகின்றன. ஏக்கம் மற்றும் மன உழைச்சல் உடல் நிலையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவல்லன. இதனால் சக்தி விரையமாகிவிடும். இத்தகைய நிலையில் உடலின் சில பகுதிகளில் நோ அல்லது பிடிப்புப் போன்ற தாக்கங்கள் உண்டாகலாம். இதனை நீக்குவதற்கு உடல் இறுக்கம் தளர்த்தும் தியானம் நன்மை பயக்கும். மனத்தையும் ஏனைய புலன்களையும் அலைய விடாமல் ஒரு நிலைப் படுத்தும் பயிற்சியினை முறையாகப் பயின்று வந்தால் வியக்கத்தக்க பலனை அடைய முடியும்.

### 8. சருமப் பராமரிப்பு

ஒருவரின் தோற்றத்தினை வசீகரமாகக் காட்டுவது சருமமாகும். சருமத்தில் தேவையற்ற பாதிப்புகள் தலைகாட்டாமல் பாதுகாப்பது அவசியம். தங்களுடைய சருமத்துக்கு ஏற்ற சாதனங்கள் எவை என்பதனை தங்கள் அனுபவத்திலேயே அறிந்து கொள்ளலாம். சிலவகை சவர்க்காரம் சிலருக்குப் பொருந்தலாம். பலருக்குப் பொருந்தாது. வேறு பலருக்கு சவர்க்காரமே பொருந்தாமலிருப்பதுமுண்டு. அடிக்கடி வெந்நீரில் உடலைக் கழுவிக்கொள்வதும் எண்ணை தடவுவதும் நல்லது. அதிகமாக மதியநேர வெய்யிலைத் தவிர்ப்பது நல்லது. 'மசாஜ்' எனும் உடல் பிடிப்பு முறையும் சருமத்தின் சிறப்புக்கு உதவும்.

### 9. உடல் இசைவிணக்கம்

எந்த வேளையிலும் உடல் எந்த வகையிலும் வளைந்து நெளிந்து கொடுக்கத் தக்க இசைவிணக்க நிலையில் இருத்தல் வேண்டும். உடற்பயிற்சி மூலம் உடலை வளைக்கக் கற்றுக்கொள்ளலாம். எப்போதும் இளம் சமுதாயத்தினருடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய சுறுசுறுப்பான தன்மையினை ஆய்ந்தறிந்து கொள்ளுங்கள். இதனால் உங்கள் உடலும் உள்ளமும் என்றும் இளமையுடன் காணப்படும். எத்தகைய சவாலையும் சமாளிக்கத்தக்க ஊக்கம் இளைஞர்களிடத்தில் காணப்படுவது உங்களுக்கும் நல்லுதாரணமாக இருக்கட்டும்.

### 10. வயதைப் பற்றிய உணர்வு

இறுதியாகத் தரப்படும் அறிவுரை மிக மிகப்பிரதானமானது.

வயதாவதைப் பற்றிய சிந்தனை மனதை விட்டு அறவே நீக்கப்பட்டுவிட வேண்டும். 40,50,60 வயதான பலர் இன்றும் நம் முன்னே இளைஞர்களைப் போன்று சுறுசுறுப்புடன் இயங்குவதைப் பார்க்கிறோம். உள்ளம் தான் உங்கள் உடலின் அழகினைக் காட்டும் கண்ணாடி. பெண்கள் ஆண்களை விட அழகானவர்கள் என்ற மன உறுதியை வளர்க்கிறார்கள். ஆகவே மனதைத் திடப்படுத்திக்கொண்டால் வெற்றி நிச்சயம். உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வு உடலையும் தாக்கவல்லது. நல்ல சிந்தனைகளுக்கு இடம் கொடுத்தால் உடல் வசீகரமும் பிரகாசமும் பெறுவது திண்ணம்.

எண்ணங்கள் இளமையானால் உங்கள் தோற்றமும் இளமை குன்றாமலிருக்கும் என்பதை மறக்க வேண்டாம்.

## நீங்களும் தைக்கலாம்

### இழையோட்டல் (Darning)

துணிகள் கிழிந்து போனால் பழுது பார்க்கும் முறைகளில் இழையோட்டல் முறை (Darning) ஒன்றாகும். அதைத் தையல் இயந்திரத்திலும் செய்யலாம், கையாலும் செய்யலாம். அதிகம் கிழிந்த பாகத்தை இழையோட்டிச் சரிப்படுத்த முடியாது. துணி நைந்து போன இடங்களிலும், குறுக்கே வெட்டுண்ட இடங்களிலும், ஆணியில் மாட்டி 'ட' வடிவமாகக் கிழிந்த இடங்களிலும் இழையோட்டல் செய்தால் கிழிந்த அடையாளம் தெரியாது.

**இழையோட்டலில் மூன்று விதம் உண்டு:**

1. சாதாரண இழையோட்டல் (Plain darning)
2. 'ட' அல்லது கோண வடிவக் கிழிச்சலுக்கு இழையோட்டல் (Hedge tear darning)
3. குறுக்கு வெட்டு இழையோட்டல் (Cross cut darning)

**இழையோட்டுமுன் கவனிக்க வேண்டியவை:**

1. உடையில் எப்பக்கம் கிழிச்சல் உள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.
2. துணியின் நிறத்திற்கேற்ற நிற நூல் தேவை.
3. இழையோட்டலுக்குத் துணியின் நூலுக்கேற்ற நூல் தேவை.

**சாதாரண இழையோட்டல் (Plain darning):** குறுக்கு வசம் அல்லது நிரப்பலுக்கு (Weft way or filling) உபயோகப்படும் நூல் மெல்லியதாய் (thinner) இருக்கும் நெசவுப் பாவு வசம் (Selvedge way) செல்லும் நூல் உறுதியாய் இருக்கும். நிரப்பல் அல்லது குறுக்கு வசம் (Weft way) செல்லும் நூல் மெல்லியதாய் இருப்பதால், நூல் சீக்கிரம் நைந்துவிடும். அவ்வாறு நைந்துபோன இடங்களில் சாதாரண (Plain) இழையோட்டல் (Darning) அவசியம்.


தைக்கும் விதம்: கிழிந்த பாகத்தைச் சுற்றிலும் 1/2 அங்குலம் விட்டு, ஒரு சதுர சட்டம் போடவேண்டும். பிறகு அதன் மேலே நூல் அல்லது இழையோட்ட வேண்டும். தைக்கும் பொழுது துணியும் நூலும் புதியனவாய் இருக்கும். நூலை இழுக்காமலும் துணியில் சுருக்கம் ஏற்படாமலும் இழையோட்ட (Darn) வேண்டும். ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் இடை இடம் விடவேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் கண் (Loop) விடவேண்டும்.

**'ட' வடிவக் கிழிச்சலுக்கு இழையோட்டல் (Hedge tear darning)** துணி முள்ளிலோ அல்லது ஆணியிலோ மாட்டிக் கிழிந்தால், அதைப் பிடித்துத் தைத்தால் பைபோலத் ஊதொய்யும். ஆகையால், இவ்விடங்களில் 'ட' வடிவக் கிழிச்சலுக்கேற்ற இழையோட்ட வேண்டும்.



முதலாவது, துணியை ஒன்று சேர்த்து, மீன் முள் (Her ving bone) தையல் இடவேண்டும். பிறகு 'ட' வடிவமாக இழையோட்ட வேண்டும். (Darn)

அதே ரகத் துணியைக் கிழிச்சலுக்கு அடியில் அமைத்துப் படத்தில் காணபித்த பிரகாரம் நான்கு புறமும் டக்குப் போட்டுக்கொண்டு தையல் இயந்திரத்தால் (Tuck) இழையோட்டுக.



இயந்திரத் தையலால் கிழிச்சலுக்கு இழை ஓட்டல் (Darning by Sewing Machine)

(மீதி அடுத்தவாரம்)

## சமைப்போம் சுவைப்போம்

### மசாலா முழு கோதுமை பக்கோடா



**தேவையானவை:**

கோதுமை மாவு-50கிராம்
பச்சை மிளகாய்- 1
நறுக்கிய வெங்காயம்- 2 மேசைக்கரண்டி
மிளகுத்தூள்- 1/4 தேக்கரண்டி
கடலை மாவு- 25 கிராம்
முழுக்கோதுமை- 50கிராம்
எண்ணெய்-தேவைக்கேற்ப
உப்பு- அளவாக
பால்- 3 மேசைக்கரண்டி

**செய்முறை:**

முழுக்கோதுமையை 12 மணிநேரம் நீரில் ஊறவைக்கவும். பின்னர் தண்ணீரை வடித்து, உப்பு கலந்து ஒரு பக்கமாக வைக்கவும். கோதுமை மாவு, கடலை மாவு, மிளகுத்தூள், உப்பு, வெங்காயம், பச்சை மிளகாய், பால் ஆகியவற்றை சேர்த்துக் கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். அதனுடன் ஊறவைத்த முழுக் கோதுமையைச் சேர்க்கவும். ஒரு மேசைக் கரண்டி அளவு பிசைந்த மாவை எடுத்து எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும். சூடாகத் தக்காளி சட்னி யுடன் அல்லது ஊறு காயுடன் பரிமாறவும். நால்வருக்குப் பரிமாறப் போதுமானது.

## சுயசோதனை

### பொருத்தமான துணைவரை கண்டுபிடிக்கக் கூடியவரா நீங்கள்?

பெண்களுக்கான சுயசோதனை இது! பெண்களே.. நீங்கள் கல்யாணம் ஆவதற்கு முன், உங்களுக்கு கணவராகப் போகிறவர் எப்படி, எப்படி இருக்க வேண்டும் என கனவு கண்டிருப்பீர்கள். இப்போது, உங்கள் கனவுக் கணவன்தான் அமைந்துள்ளாரா உங்களுக்கு என்பதை அறிந்து கொள்ள உதவும் சோதனை இது.

அதேபோல, கன்னிப் பெண்களும் எதிர்கால கணவர் குறித்து, கற்பனைகளும், கனவுகளும், நிறைய கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்கு பொருத்தமானவர் என்ன என்ன செய்யக்கூடாது என சில வரைமுறைகளை வைத்திருந்திருப்பீர்கள். எனினும், உங்களுக்கு பொருத்தமானவரை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா; முடிந்ததா?

இதோ ஒரு எளிய போட்டி. கீழே கொடுக்கப்பட்டுள்ள 11 கேள்விகளுக்கு 'ஆம்' அல்லது இல்லை என பதில் அளியுங்கள்.

1. மழையில் உற்சாகமாக நனைந்தபடி நடப்பது எனக்குப் பிடிக்கும். ஆனால், ஒரு ஆண் இப்படி செய்தால் அவரால் நல்ல கணவராக இருக்க முடியாது.

2. ஒரு ஆண் கவர்ச்சியாக தோன்ற வேண்டும் என்றால் அவர் சினிமா கதாநாயகன் போல இருக்க வேண்டும்.

3. ஆள்பாதி, ஆடை பாதி. ஒரு ஆண் பாதணியை அல்லது பனியனை கழற்றும் போது அதில் ஒட்டை இருந்தால்... ஐயோ அசிங்கம்.

4. ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்திற்கு வருவதாக கூறிவிட்டு வராமல் இருந்ததற்காக மட்டும் ஒருவரை நான் உதறித்தள்ளிவிடமாட்டேன்.

5. நாங்கள் பேசிக்கொண்டு இருக்கும் போது அவர் என்னை நேருக்கு நேர் பார்த்தால் எனக்கு கஷ்டமாக இருக்கலாம். ஆனால், ஆண்களின் குணமே அதுதானே!

6. எந்த ஆணிடமும் நான் கேட்கும் முதல் சூடான கேள்வி... 'இந்த உலகில் வாழ என்ன வழி வைத்துள்ளாய்?'

7. முதல் சந்திப்பில் என்னை திருப்திப்படுத்தாதவர் மீது எனக்கு வெறுப்புத்தான் வரும்.

8. பொது இடத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் மனிதன் உறுதியற்றவன்.

9. என் முகவரியை அவர் தெரிந்து வைத்திருந்தால் பரவாயில்லை... அவர் முகவரியை என்னிடம் தரும்வரை!

10. எனக்கு பிடிக்காதது அவருக்கு பிடித்திருந்தால் என்ன? எப்படியும் அவர் என் வழிக்குத்தானே வரவேண்டும்?

11. அவர்தன் பெற்றோர்களுக்கு மிகச்சிறந்த மகன் அல்லதான். எனினும், நான் அவரை வெறுக்கவில்லை.

மதிப்பெண்:

9-11 சரி: பெரிய பூதக்கண்ணாடி கூட உங்களுக்கு பயன்படாது. உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் ஆணை உங்களால் கண்டுபிடிக்கவே முடியாது. ஓரளவாவது உண்மையாக இருக்க பாருங்கள். அப்போது தான் உங்களை நேசிக்க கூடியவரை உங்களால் நேசிக்க முடியும்.

5-8 சரி: உங்களுக்கு பொருத்தமானவரை தேடி கண்டுபிடிக்கக்கூடிய தகுதிகள் ஓரளவுக்கு உங்களிடம் உள்ளது. அல்லது கண்டு கொண்டீர்கள்! எனினும், சில நேரங்களில் நீங்கள் பாதை மாறிவிடுவீர்கள். கன்னியர், தமது தேடும் வேட்டையில் இன்னும் கொஞ்சம் தீவிரம் காட்டினால் வெற்றிபெற முடியும்.

1-4 சரி: உங்களுக்கு பார்வை மிகச் சரியானது. ஒவ்வொருவரும் எப்படி செயல்படுவார்கள்... எப்படிப்பட்டவர்கள் என்பதை மிக துல்லியமாக கணிக்கும் திறமை உங்களுக்கு உண்டு. எனவே, எப்போதும் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்.

நன்றி-தினமலர்.


## வீட்டுக் குறிப்புகள்



எலுமிச்சம்பழச் சாற்றை தினமும் காலையில், வெறும் வயிற்றில் அருந்துவது நல்லது. வெறும் எலுமிச்சம பழச் சாறு அருந்த விருப்பப்படாதவர்கள், இளநீருடன் கலந்து, கொஞ்சமாக குளுக்கோஸ், தேன் கலந்து அருந்தலாம். கூடுதல் பலன் கிடைக்கும்.

•

எலுமிச்சை, மாங்காய் ஊறுகாய் செய்வதைப் போல பீட்ரூட்களிலும் ஊறுகாய் செய்யலாம். பீட்ரூட்டை, தேவையான அளவுக்கு துண்டு துண்டாக்கி உப்பு போட்டு வேக வைத்துக்கொள்ளவும். தண்ணீரை நன்றாக வடிகட்டி, ஒருநாள் முழுக்க வெய்யிலில் காயவைத்து, பிறகு வழக்கமாக ஊறுகாய் செய்வதைப் போல செய்யவும். சுவையாக இருக்கும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி


நகரமே கலங்குகிறது—றொக் இசையால்

## பாலகன் படைக்கும் சாதனை
## ஏறுகிறது எடை! கூடுகிறது புகழ்!!

றொட்றிகோ வஸ்கொன்சிலொஸ் 4 வயதேயான சிறுவன். ஆனால் அவனுடைய எடை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இப்பொழுது அவனுடைய எடை 257 இறாத்தல்.

றொட்றிகோவின் எடை கூடிக் கொண்டிருப்பது போல் அவனுடைய பெயரும் புகழும் அதிகரித்தவண்ணமே உள்ளன. அவன் றொக் இசையில் பல அரிய சாதனைகளைப் புரிந்துவருகிறான்.

கடந்த ஏப்ரல் மாதம் தான் இவனுடைய திறமையும் ஆற்றலும் வெளிப்பட்டன. இவனுடைய பாடசாலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பாடிக் கொண்டே ஆடினான். அவனுடைய தோற்றம் (மேடையில் தோன்றிய அதே காட்சியின் போது எடுக்கப்பட்ட படம்) பார்வையாளர்களுக்கு சிரிப்பூட்டியது.


கிண்டலும் கேலியும் அரங்கை நிறைத்தது. ஆனால் அது நீடிக்கவில்லை. இவற்றை றொட்றிகோ பொருட்படுத்தவில்லை. பாடினான். ஆடினான். குரலைக் கேட்டதும் அரங்கே அமைதியானது. ஒவ்வொரு கட்டத்திலும் கையொலியும் பாராட்டுகளும் குவிந்தன.

அன்றிலிருந்து றொட்றிகோவின் பெயரும் புகழும் காட்டுத்தீ போல் பிரேஸில் நாட்டிலுள்ள பெலோ ஹொறிஸோன்ரே நகரம் முழுவதும் பரவியது.

றொட்றிகோவின் றொக் இசை நிகழ்ச்சிகள் அந்நகரத்தைக் கடந்து பிரேஸிலின் ஏனைய நகரங்களிலும் நடைபெறலாயிற்று. இன்று அந்நாட்டின் முதந்தரப் பாடகர்களுக்கு இல்லாத மௌசு இந்தச் சின்னஞ்சிறு பாலகனுக்கு ஏற்படலாயிற்று.

அந்த நாட்டு தொலைக்காட்சிகளில் றொட்றிகோ தோன்றினான். இன்று உலகின் பல்வேறு நாடுகளும் றொட்றிகோவின் றொக் இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யப் போட்டி போட்டுக் கொண்டுள்ளன.

உலகின் பல செய்தி நிறுவனங்கள் இந்தச் சிறுவனின் பேட்டிகளையும் சிறப்புக் கட்டுரைகளையும் பிரசுரித்துக் கொண்டுள்ளன.



சாய்ந்து நிற்க வசதியான உயரம்

## இரண்டரை அடிப்பெண்ணும் அவளை மணந்த பெருந்தடி மனிதனும்

உலகிலேயே அதிக பருமனான மனிதன் மிகவும் சிறியவளான பெண்ணை கடந்த வருடம் மார்ச் மாதம்தான் திருமணம் செய்து கொண்டான். அவர்கள் இப்பொழுது பெற்றோராக ஆகும் நிலையில் மிக்க மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

மிச் ஜாக்சனுக்கு 39 வயதாகிறது. ஆனால் அவருடைய எடை 903 இறாத்தல். இவருடைய மனைவி நெல்லிக்கு வயது 35. உயரம் ஆக இரண்டரை அடி மட்டுமே. இவ்வருடம் ஜூன் மாதத்தில் இவர்களுக்கு குழந்தை கிடைக்க இருக்கிறது. இதனால் இத்தம்பதியினர் குதூகலத்துடன் காணப்படுகின்றனர்.

"என்னால் என்னயே நம்பமுடியாதிருக்கிறது. நான் கருத்தரிப்பேன் என்று கற்பனை கூடப் பண்ணியதில்லை. நாங்கள் இருவரும் இன்று போல் என்றும் மகிழ்ச்சியாக இருந்ததில்லை." என்கிறார் நெல்லி. "எங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை அப்பாவைப் போல் பருமனாக இருக்கக்கூடும். அல்லது என்னைப் போல சின்னஞ்சிறிசாகவும் பிறக்கலாம். எது எப்படி இருந்தபோதிலும் எங்கள் குழந்தையை நாங்கள் சிறப்பாக வளர்க்கப் போகிறோம். எப்படியும் எங்கள் குழந்தை எங்களுக்கு மகிழ்ச்சியினையே தரும் என்பதில் சந்தேகமில்லை" என்று மேலும் தெரிவித்தார்.




## நால்வரும் பிறந்தது ஒரே சூலில்!
## திருமணம் நடந்தது ஒரே நாளில்!!



மார்லன், கொன்ஸாலோ, காஸ்ரன் மற்றும் டார்வின் ஆகிய நால்வரும் ஒரே சூலில் பிறந்த சகோதரர்கள். ஈக்குவேடர் நாட்டைச் சேர்ந்த இவர்கள் இளமையிலேயே தங்களுக்குரிய காதலர்களைத் தேடிக்கொண்டார்கள்.

1992 ஏப்ரல் 20ம் திகதி -ஒரேநாளில் இவர்கள் முறையே அஞ்சலா, கிஸெமினா, மிரியான் மற்றும் மேர்சிடேஸ் ஆகியோரை அவசர அவசரமாக சட்டப்படி பதிவுத்திருமணம் செய்துகொண்டார்கள். இதன்பின்னர் பிரிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

இரண்டு வருடங்கள் இவர்கள் தனித்துப் பிரிந்தே வாழ்ந்தார்கள்.

நீற்ரோ சகோதரர்கள் தங்கள் நாட்டை விட்டு கனடா சென்று குடியேறியமையினால் இந்தப் பிரிவுத் துயரைத் தாங்க வேண்டியேற்பட்டது. இப்பொழுது கனடாவில் குடியுரிமை பெற்ற சகோதரர்கள் தங்களுடைய 'மனைவி'யரை கனடாவுக்கு குடியேற்ற அந்தஸ்து பெற்று, அழைத்து மறுமணம் செய்து கொண்டார்கள்.

எட்டுப்பேரும் பிரிவுத்துயர் நீங்கி, கோலாகலமான திருமண விழாவில் கலந்து கொண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ரொறொண்டோ நகரில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் திருமணம் நடைபெற்றது.

## தும்மினால் போச்சு!

உங்கள் மனைவியின் தந்தையோ உங்கள் கணவரின் தகப்பனாரோ பேசிக்கொண்டிருக்கும் போது நீங்கள் இருமவோ தும்மவோ கூடாது.
அவ்வாறு நீங்கள் இருமினால் அல்லது தும்மினால் ஒருவருடம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.
இந்த விசித்திரமான சட்டம் எங்கே அமுலில் இருக்கிறது தெரியுமா? ரியூனிசியா என்ற நாட்டில் எல்கஃப் என்ற மாநிலத்தில் இத்தகைய சட்டம் அமுலில் உள்ளது.
மாமனாருக்கு முன்னால் இருமினால் அல்லது தும்மினால் அவருக்கு இழிவு ஏற்படுத்துகிறீர்கள் என்று அர்த்தமாம்.

## வினோத இரட்டையரில் இவர்கள் இப்படி!

அன்ரன் மாக்ஸ் மற்றும் அவருடைய சகோதரி ஹெட்டி ஆகிய இருவரும் இரட்டையர்கள். தங்கள் 22வது பிறந்தநாள் விழாவினை அண்மையில் தென் ஆபிரிக்காவிலுள்ள பிராண்ட் - ஃபோட் நகரில் கொண்டாடினார்கள். நூற்றுக்கும் அதிகமான உறவினரும் நண்பர்களும் ஒன்றுகூடி சகோதரர்களை வாழ்த்தினார்கள்.

இரட்டையர்களில் பலவகை உண்டு. உடலின் சில பகுதிகள் ஒட்டப்பட்ட சயாமிஸ் இரட்டையர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களை வெட்டிப் பிரித்தும் உயிருடன் சிலர் வாழ்கின்றனர். ஒட்டிப்பிறந்து ஒன்றாகவே மடிவோரும் உளர்.

அன்ரன்-ஹெட்டி சகோதரர்கள் சற்று மாறுபட்டவர்கள். அன்ரன் 6 அடி உயரமாக இருக்கின்ற போது அவருடைய சகோதரி ஹெட்டி ஆக 3 1/2 அடி உயரமுடையவளாகக் காணப்படுகிறார். ஹெட்டி பிறக்கும் போதே 8 அவுன்ஸ் எடைதான் இருந்தாள். இன்று -22வது வயதில் அவளுடைய எடை ஆக 48 இறாத்தல். அன்ரன் இன்று 182 இறாத்தல் எடை கொண்ட முழு மனிதனாகக் காட்சி தருகிறான்.

ஹெட்டி பிறந்து 5வது மாதத்தில்தான், அவள் பரம்பரை வியாதியினால் பீடித்திருக்கிறாள் என்பதனை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். இருப்பினும் அவளுடைய உயரத்தை அதிகரிக்க எந்த மருத்துவமுறையும் பயன்படாது என்று கூறிவிட்டனர்.

## கடுகு சிறிது காரம் பெரிது!



இந்தியாவின் மிகவும் வயது குறைந்த இசையமைப்பாளர் இவர்தான்.

பெயர்-மாஸ்டர் ஆதித்ய புத்வால்.

வயது-9.

பம்பாயைச் சேர்ந்த பிரபல பாடகி அனுராதா புத்வாலின் மகன். தாயின் இசைப்புலமை சேமிடமும் வந்துவிட்டது.

இவனது திறமை கண்டு வியந்து தெலுங்கு படமொன்றுக்கு இசை அமைக்கக் கூப்பிட்டார்கள்.

சம்மதித்து இசையமைத்து எல்லோரையும் மூக்கின் மேல் விரலை வைக்கச் செய்துள்ளான்.

படத்தின் பெயர் "ஸ்ரீசாய் மகிமா"

## விரல் மெழுகுதிரி



இந்திய கேரளா மாநிலத்தில் திருவனந்தபுரம் பகுதியில் நெதர்லாந்து நாட்டவர் நடத்திய கண்காட்சியில் அனைவரையும் கவர்ந்த மெழுகுதிரியே படத்தில் இருக்கிறது. விரல்களின் நடுப்பகுதியில் திரியை வைத்து மெழுகினால் செய்யப்பட்டது.

www.padippakam.com

## "தாராளமாய் நடிப்பேன்"

இராவணன் படத்தில் மாறுபட்ட நடிப்பை காட்டியிருப்பதாகக் கூறுகிறார் அஹானா. மிகவும் தாராளமாக கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறேன். கவர்ச்சி தேவையான போது தயக்கம் காட்டாமல் நடிப்பேன். என்று பகிரங்கமாய் பேட்டியும் கொடுத்துள்ளார்.

இராவணன் படத்தை தனக்கு மிகவும் பிடித்துவிட்டதாகக் கூறும் அஹானா தற்போது நடித்துவரும் படங்கள் "சிலப்பேரி பாண்டி", "செவத்தபொண்ணு". சென்னையில் நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருக்கும் அஹானா பத்திரிகையாளர்களை சந்திக்கும் போதும் உடற்பயிற்சி உடைகளிலோ, அல்லது நீச்சல் உடைகளிலோதான் சந்திக்கிறார். கைகுலுக்கி வரவேற்கிறார்.







மன்சூர் அலிகான்-அஹானா
படம்-இராவணன்

## படத்தின் வெற்றியோடு திருமணமும்!

காதலில் சிக்கிய சங்கி பாண்டே தன் காதலி அனுவை ஏமாற்றிவிட்டார் என்று பேசப்பட்டது.

சென்ற ஆண்டின் மிகச் சிறந்த படமாக சங்கி பாண்டே நடித்த 'ஆங்கென்' வெற்றி நடைபோட்ட கையோடு சங்கி பாண்டே தன் காதலியை கைபிடித்துவிட்டார். காதும் காதும் வைத்தது போல் கல்யாணம் நடந்தது. இப்போது சங்கி பாண்டே அனு தம்பதியினர் மகிழ்ச்சியோடு இருக்கின்றனர். ◆



## கைகொடுக்கும் தேகம்

கதாநாயகனாக நடித்த ராகுல்ராய்க்கு 'கும்ரா' படத்தில் வில்லன் பாத்திரம். அதிலும் வெளுத்து வாங்கியதால் இந்தித் திரையுலகில் பேசப்படுகிறார்.

விளம்பர மொடலாக தொழில் செய்த ராகுலுக்கு அவரது திடகாத்திர தேகம் கைகொடுக்கிறது. ■



ஷில்பா சிரோத்கர்

## கலைஞரின் மகள் எழுதிய பாடல்

கலைஞர் கருணாநிதி திரைக்கதை-வசனம் எழுதியுள்ள படம் புதிய பராசக்தி.

நிதிப் பிரச்சனை காரணமாக இடையில் நின்ற படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

படத்தில் கலைஞரது மகள் கனிமொழி பாடல்களை எழுதியுள்ளார்.

அப்பா கதை எழுத, மகள் பாடல்கள் எழுதிய படம் என்ற பெருமையை புதிய பராசக்தி பெற்றுவிட்டது. ●

## ஷில்பாவின் ஆசை!

ஷில்பாவுக்கு ஒரு ஆசை. மாதுரி தீட்சித்தின் இடத்தை பிடிக்கவேண்டுமாம்.

கவர்ச்சி காட்டி தன் இடத்தை தக்கவைத்துக் கொள்ளும் ஷில்பா மாதுரியின் படத்தில் வருவது போன்ற பாடல் காட்சிகள் தனது படத்திலும் வரவேண்டும் என்று அடம்பிடிக்கிறார். ■

## மணி-ரத்னம் ஒருவரல்ல இருவர்

இயக்குநர் மணிரத்னம் எல்லோராலும் அறியப்பட்டவர்.

தமிழ் திரைப்படத்துறையில் உள்ள பெயர் பஞ்சம் காரணமாக அவரது பெயரை படத்தின் பெயராக வைத்துவிட்டார்கள்.

படத்தில் மணிரத்னம் என்பது இருவரது பெயர்களை குறிக்கிறது.

மணியாக ஆனந்தபாபுவும், ரத்னமாக நெப்போலியனும் நடிக்கின்றனர்.

திரைப்படக் கல்லூரி மாணவர் கே.ஜெயபாலன் கதை-திரைக்கதை-இயக்கம் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுள்ளார்.

பாடல்கள் வைரமுத்து. இசை-சிற்பி. கிராமத்து மக்களது பழக்க வழக்கங்களை சித்தரிக்கும் படமாக அமையுமாம். ◆

## பாடலின் தொடக்கம் பெயராகியது

திருடா திருடா படத்தில் வரும் ஒரு பாடல் 'வீரபாண்டிக் கோட்டையிலே' என்று ஆரம்பமாகும்.

இப்போது பாடலின் முதல் அடி படத்தலைப்பாகிவிட்டது.

சக்தி கதாநாயகனாக நடிக்க, கதாநாயகிகளாக ராஜஸ்ரீ, மனோரஞ்சனி ஆகியோர் நடிக்கின்றனர். இவர்கள் புது முகங்கள். இவர்களோடு ராஜீவ், மூர்த்தி, டெல்லி கணேஷ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசையமைப்பாளர் புதிய அறிமுகம். பெயர்-வசந்தன். பாடல்கள்-வாலி. ☆

## "நடிப்புக்கும்-குழந்தைக்கும் சம்பந்தம் இல்லை"

கிழக்குச் சீமையிலே படத்தில் ராதிகாவின் நடிப்பை பலரும் பாராட்டிப் பேசுவதால் ராதிகாவுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. அதனால் உடம்பில் தசை போட்டுவிட்டது.

"நான் தாயாகிவிட்டேன். இனி நடிக்க முடியாது என்று பலர் பேசிய பேச்சுக்களை கிழக்குச் சீமையிலே பொய்யாக்கிவிட்டது. 'சிவாஜி சாருக்கு முதல் மரியாதை மாதிரி உனக்கு இந்தப் படம்' என்று பாரதிராஜா சார் சொன்னதை நிரூபித்துவிட்டார். இனிமேல் பாத்திரங்களை தெரிவு செய்து நடிப்பேன்." என்கிறார் ராதிகா. ●

## விஜயகாந்த் பதவிப் பிரமாணம்

பூக்களைப் பறிக்காதீர்கள், என் தங்கச்சி படிச்சவ, வேலை கிடைச்சிடுச்சு, மறவன் போன்ற படங்களை தயாரித்த ஸ்ரீராஜகாளியம்மன் என்டர்பிரைசஸ் புதிய படமொன்றை தயாரிக்கவுள்ளது.

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கப் போகிறார். நாயகி தெரிவு நடைபெறுகிறது.

"பதவிப் பிரமாணம்" என்று படத்திற்கு பெயர் வைத்துள்ளனர். சினிமாஸ்கோப்பில் எடுக்க உத்தேசமாம்.



பிரபுதேவா-குஷ்பூ
படம் - இந்து

## சித்திரையில் ரஜனி படம்

வரப்போகும் சித்திரைப் புத்தாண்டில் ரஜனி ரசிகர்கள் ஏமாறத்தேவையில்லை.

தீபாவளிக்கும், புத்தாண்டுக்கும் ரஜனி படம் வரவில்லையே என்ற பெரும் குறையை சித்திரைப் புத்தாண்டில் 'வீரா' படம் தீர்த்துவைக்கும்.

'வீரா' படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. ரஜனியின் ஜோடிகளாக மீனா-ரோஜா ஆகியோர் நடிக்கின்றனர்.

முழுமூச்சாய் முயல்கிறார்கள். சித்திரைப் புத்தாண்டில் வெளியிட்டே தீருவது என்ற உறுதியோடு முழு யூனிட்டும் வேலைசெய்கிறது.

சித்திரையில் வீரா வசூலில் முத்திரை பதிக்கும். ●

## பாடமாக ஒரு படம்

"தைமாசம் பூவாசம்" படத்தில் அறிமுகமான சத்யானந்த் கதாநாயகனாக நடிக்க உருவாகி வருகிறது தேச பக்தன்.

நாகரிக மோகத்தில் சீரழியும் இளைஞர்களுக்கு பாடமாக அமையும் வகையில் படம் அமையுமாம். ■

## கவிதாஸ்ரீயின் இலட்சியம்

இலவ் இந்தியா படத்தில் அறிமுகமான கவிதாஸ்ரீ, அதைத் தொடர்ந்து சின்ன ஜமீன், புருஷலட்சணம் ஆகிய படங்களிலும் கவர்ச்சி நடனம் ஆடினார்.

சிந்துநதிப்பூ படத்திலும் ஒரு பாடல்.

கதாநாயகியாக வருவதெல்லாம் என் இலட்சியமல்ல. கவர்ச்சி நடனமாடுவதே என் இலட்சியம் என்கிறார் கவிதாஸ்ரீ. ◆

## ஒரே ஒரு ஆட்டம் வாங்கிய தொகை 4 1/2 இலட்சம்

இந்து படத்தில் குஷ்பூவும்-பிரபுதேவாவும் இணைந்து ஆடும் கவர்ச்சி நடனம் ஒன்றுக்காக மட்டுமே பணத்தை கொட்டியிருக்கிறார்கள்.

குஷ்பூ அந்த ஒரு நடனத்திற்கு மட்டும் வாங்கிய ஊதியம் 4 1/2இலட்சம். வாங்கியதற்கு ஏற்ப வஞ்சகம் செய்யாமல் கவர்ச்சியை வாரி வழங்கியிருக்கிறார். கதாநாயகியாக நடிப்பதைவிட ஒரு நடனக்காட்சியில் அசத்தியே சம்பாதிக்கலாம் என்றால் பல கதாநாயகிகள் நடனமாட ஓ.கே சொல்லிவிடுவார்கள்.

## செந்திலுக்கு மாலை!

புத்தாண்டு தினத்தில் நடிகர் செந்தில் வீட்டின் முன்பாக நரிக்குறவர்கள் திரண்டுவிட்டார்களாம். தகர டப்பாக்களை தட்டி ஒலி எழுப்பி ஒரே கொண்டாட்டம். செந்திலும் அவர்கள் போட்ட மாலைகளை மகிழ்ச்சியோடு கழுத்தில் வாங்கிக்கொண்டார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## வடிவேலுவின் தெய்வம்!

"மிகச் சிறந்த நகைச்சுவை நடிகனாக வரவேண்டும். விருதுகள் பெறவேண்டும். வாழ்நாள் முழுக்க நடித்துக் கொண்டே இருக்கவேண்டும்" என்பதே தனது ஆசை என்கிறார் வடிவேலு.

வடிவேலு தனது தெய்வம் என்று கூறுவது இயக்குநரும் நடிகருமான ராஜ்கிரணை. அவர்தான் வடிவேலுவை நகைச்சுவை வேலாக்கியவர்.

## தனிமையில் இனிமை

படப்பிடிப்பின்போது ஆரவாரமில்லாமல் அமைதியாக இருப்பவர் ரஜனி என்பது தெரியும்.

அவர்போலவே அமைதியாக தனியே உட்கார்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கும் நடிகை சித்தாரா.

தனிமையில் இனிமை காணும் சித்தாரா தனது வீட்டையும் சென்னையில் உள்ள மகாபலிபுரம் கடற்கரைப்பகுதிக்கு மாற்றிவிட்டார்.

தமிழ் படவுலகில் அதிக வாய்ப்புக்கள் இல்லை என்பதால் பிறமொழிப் படங்களில் வாய்ப்புவரும் என்று காத்திருக்கிறார்.

## கதாநாயகிகளை கலக்குபவர்

'காதலன்' படத்தில் 'நக்மா' படுகவர்ச்சியாக நடித்திருப்பது பல கதாநாயகிகளுக்கு பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியில் இருந்து தெலுங்குக்குச் சென்று இப்போது தமிழுக்கு வந்துள்ள நக்மா காதலன் படம் மூலம் தமிழ் திரையுலகை கைக்குள் போடும் நம்பிக்கையில் இருக்கிறார்.

பிரபுதேவாவின் ஜோடியாக காதலன் படத்தில் நக்மா நடிக்கிறார். ■



நக்மா

## காதோடு சொல்லுகிறோம்

★ நாலு காசு சம்பாதிச்ச இடத்திலை நாசம் பண்ணிப் போட்டார்கள் என்று 'அதிரடி அபி' கதாநாயகிகள் மீது கோபமாய் பேசுகிறாராம். ஆடும் வாய்ப்பை நாயகிகள் தட்டிக்கொள்வதால் கோபம் பாம்பாக படம் எடுத்தாடுகிறதாம்.

★ விலித நடிகை நடித்த படங்கள் ஓடுகிறதோ இல்லையோ ஐந்து இலட்சம் ஊதியம் கேட்கிறார். தயாரிப்பாளர்கள் ஆளைவிட்டால் போதும் என்று ஓடுகிறார்கள்.

★ 'சித்ரா' நடிகை தான் இன்னும் கொஞ்சம் உயரமாக இருந்திருந்தால் கோடம்பாக்கத்தை கலக்கியிருப்பேன் என்று புலம்புகிறார். தயாரிப்பாளர்களை சந்திக்கப் போகும் போது இறுக்கமான உடைகளோடு செல்கிறாராம்.

★ முன்னாள் பிரபல நாயகி ஜெயமாலா சிறப்பு நடிகை சொந்தப்படம் எடுத்து கையைச் சுட்டுக்கொண்டவர். ஆனாலும் ஆசை விடவில்லை. புதிய படம் ஒன்றுக்கு பூஜைபோட்டார். நண்பர் ஒருவர் பணம் போட்டார். பாவம் அவர் பணத்தையும் இழந்து எல்லாம் இழந்து இப்போது ஊரைவிட்டே ஓடிவிட்டார். ஜெயமாலா சித்ர நடிகை புதிதாக யாரும் மாட்டுவார்களோ என்று தேடுகிறார்.

★ பத்துத் தலையானின் பெயர் கொண்ட படத்தில் நடிக்கும் நாயகி எப்படி வேண்டுமானாலும் நடிக்கத்தயார் என்று பகிரங்க அறிக்கை விட்டுள்ளார். பத்துத்தலையான் பட நாயகனையும் புகழ்ந்து பேசுகிறார்.

★ ரவில் நடிகைக்கு மீண்டும் அரசியலில் குதிக்கும் ஆசை வந்துவிட்டதாம். குழந்தையை விட்டு எப்படி தீவிரமாய் இறங்கமுடியும். அதுதான் தள்ளிப்போட்டுக்கொண்டிருக்கிறாராம்.

★ தமிழ்நாட்டு நடிகைகளுக்கு தாய்க்குலங்கள் பாதுகாப்பு கொடுப்பது போல, பம்பாய் இறக்குமதி நட்சத்திரங்களுக்கு தந்தைக்குலங்கள் பாதுகாப்பு கொடுக்கின்றன. பார்த்தால் பயமாக இருக்கிறதாம்.

★ பூ நடிகைக்கும் வாசமான இயக்குநருக்கும் இடையே சச்சரவாம். தன் மார்க்கெட்டை மீண்டும் உயர்த்தித் தருமாறு கேட்டாராம். அவர் மறுத்துவிட்டதால் பூ நடிகைக்கு கெட்ட கோபமாம்.

★ கன்ன நடிகையின் தாய்க்குலம் இயக்குநர்களுக்கே ஐடியா கொடுக்கப் போக அவர்கள் படு கோபத்தில் இருக்கிறார்கள். தாய்க்குலத்தைக் கண்டாலே இயக்குநர்கள் முகம் சுளிக்கிறார்களாம்.

★ இந்தியில் கவர்ச்சி காட்டிய ரம்ப நடிகை தன்னை ஒரு ஹொலிவூட் நடிகையாக எண்ணிக்கொண்டு அடிக்கும் கூத்துக்கள் தாங்க முடியவில்லையாம். மார்க்கெட் சரியும் போது எல்லாம் புரியும் என்கிறார்கள்.

## ஸ்ரீதரின் உற்சாகம்!

கிழக்குச் சீமையிலே படத்தை பாரதிராஜா வெற்றிப்படமாக எடுத்துக்காட்டி விட்டதால் சில பெரிய இயக்குநர்களுக்கு புது உற்சாகம் வந்திருக்கிறதாம்.


அவர்களில் ஒருவர் இயக்குநர் ஸ்ரீதர். சித்ராலயா நிறுவனத்தின் சார்பில் அவர் ஒரு சொந்தப்படம் எடுக்கப் போகிறார்.

தனது பழைய பாணியில் இருந்து மாறுபட்ட படமாக அது இருக்கும் என்றும் சொல்லுகிறார்.

ஏ.ஆர். ரகுமான் இசையமைக்க சந்தோஷ்சிவன் ஒளிப்பதிவைக் கவனிக்க முற்றிலும் புதிய கோணத்தில் எடுக்கத் திட்டமிட்டுள்ளார். படப்பிடிப்பை வெளிநாட்டில் நடத்தும் எண்ணத்தில் இருக்கிறார்.

முகப்பில் இருப்பது சரத்குமார்

முல்லை மலர்
ஒன்று-
மலர்ந்ததிங்கே!
மொய்க்கும் வண்டுகளாய்
விழிகள்
மாறியதே!!



## மினிசினி

★ உழைப்பாளி, கருப்பு வெள்ளை போன்ற படங்களைத் தயாரித்த சந்தமாமா-விஜயா கம்பைன்ஸ் நிறுவனத்தினர் அடுத்து கமல், பிரபு, சத்தியராஜ் நடிக்க மூன்று படங்களைத் தயாரிக்கவுள்ளது.

★ ராஜ்கிரண் இயக்கித் தயாரிக்கும் எல்லாமே என் ராசாதான் படத்தில் கதாநாயகிகளாக நடிக்கவிருந்த குஷ்பூவையும் செண்பகத்தையும் ராஜ்கிரணையும் நீக்கியுள்ளார். தற்போது ராஜ்கிரண் புதுமுக வேட்டையில் இறங்கியுள்ளார்.

★ பல வெள்ளிவிழாப் படங்களில் நடித்தவர் மோகன். கடந்த மூன்று வருடங்களாக புதிய படமொன்றிலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தற்போது மகேசன் என்னும் புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ அசெம்பினிகு வெள்ளடா என்ற தெலுங்குப் படமொன்று தமிழில் முதலமைச்சர் என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது. நல்லது செய்வதையே இலட்சியமாகக் கொண்டு உழைத்த ஒரு பெண் முதலமைச்சர், சோதனைகளைச் சமாளித்து வெற்றி பெறுவதே படத்தின் கதை.

★ முரளி நடித்துள்ள அதர்மம் படத்தை இயக்கியவர் ரமேஷ் கிருஷ்ணா என்னும் திரைப்படக்கல்லூரி மாணவர். அதர்மம் படப்பிடிப்பு முடிவடைந்ததும் திருமணம் செய்த இவரை திருமண வரவேற்பின் போது இளையராஜா நேரில் சென்று வாழ்த்தியதைப் பெருமையாகக் கூறுகிறார்.

★ பல படங்களில் வில்லனாக நடித்த அருண் ரத்தினம் கண்ணா எந்தன் மன்னா படத்தின் மூலம் கதாநாயகனாகிறார். இப்படத்திற்கான படப்பிடிப்புக்கள் யாவும் வேலூரை அடுத்துள்ள அம்பூர் காடுகளில் படமாக்கப்படவுள்ளன.

★ மீனா நடித்துள்ள ராஜகுமாரன், சேதுபதி ஐபிஎஸ் ஆகிய இரண்டு படங்களும் முடிவடைந்து திரைக்கு வந்துள்ளன. அடுத்து இவர் தெலுங்குப் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ இந்திய-ரஷ்ய கூட்டுத்தயாரிப்பான இசைப்பயணம் படத்தில் முதற்கட்டப் படப்பிடிப்பை உஸ்பெகிஸ்தானில் நடத்தத் திட்டமிட்டு இருந்தார்கள். இப்போது அங்கு கடுமையான பனி பெய்வதால் இந்தியாவில் எடுக்க வேண்டிய காட்சிகளை முதலில் படமாக்கத் தீர்மானித்துள்ளனர்.

## ஏ.ஆர்.ரகுமான் பாடிய பாடல்

காதலன் படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் சொந்தக்குரலில் பாடியுள்ளார்.

"டேக் இட் ஈஸி" என்று தொடங்கும் அந்தப் பாடல் வித்தியாசமாக வரவேண்டும் என்பதற்காக ரகுமானே சொந்தக்குரலில் பாடியுள்ளார்.

93ல் ஜென்டில்மேன் படப்பாடல்கள் சூப்பர் ஹிட் ஆனதைப் போல் 94ல் காதலன் படப்பாடல்கள் சூப்பர் ஹிட் ஆகும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

படத்தில் டேக் இட் ஈஸி பாடல் காட்சி பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் எடுக்கப்பட்டு வருகிறது. 200 நடனக் கலைஞர்களோடு பிரபுதேவா-நக்மா ஆகியோர் நடனமாடியுள்ளனர். அதற்கென்றே ஃபைபர் கிளாஸில் செய்யப்பட்ட பிரத்தியோக பஸ் ஒன்றும் உருவாக்கப்பட்டு உள்ளே நடனக்காட்சி படமாக்கப்பட்டது. □



பாக்யராஜ்-பிரகதி
படம்-வீட்ல விசேஷங்க



## பாக்யராஜின் பெருமை!

தமிழ்ப்பட இயக்குநர்களில் பாக்யராஜ் இயக்கிய படங்கள்தான் அதிக அளவில் பிறமொழிகளில் படமாக்கப்பட்டுள்ளன. பாக்யராஜ் இயக்கிய தமிழ்ப்படங்கள் தெலுங்கு, இந்தி, மலையாளம் போன்ற மொழிகளில் படமாக்கப்பட்டுள்ளன.

93ம் ஆண்டு பாக்யராஜ் படங்கள் எதுவும் வரவில்லை. இப்போது பொங்கல் திருநாளுக்கு வந்த 'வீட்ல விசேஷங்க' தமிழகமெங்கும் ஓடிக்கொண்டிருக்கிறது. ▲

சினிவிசிட்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## பாப்பா முரசு சிறுகதை

# மனித மரம்

மரம், பேசுமா? நடக்குமா?

பேசாது, நடக்காது என்றுதான் அனைவரும் சொல்வார்கள். ஆனால், சாலிவனக் காட்டில் ஒரு மரம் பேசும், நடக்கும். இதை அந்த வட்டார மக்கள் அறிவர்.

இதென்ன அதிசயமாயிருக்கிறது என்று அந்த ஊருக்கு வேட்டைக்கு வந்த அரசன் சிம்மவர்மனுக்கு வியப்பு மேலிட்டது.

முதலில் அம்மரத்தை நேரில் பார்த்துப் பேச அரசர் சிம்மவர்மன் ஆசைப்பட்டான்.

ஊர்மக்கள் அந்த மரத்திடம் அரசரை அழைத்துச் சென்றார்கள். அரசர் மரத்தை நெருங்கியதும், "சிம்ம மாமன்னரே, வருக... வருக...சற்றே என் நிழலில் அமர்ந்து இளைப்பாறுக," என்று மரம் பேசியதைக் கண்டு சிம்மவர்மனுக்குத் திகைப்பும், வியப்பும் மேலிட்டது.

மரம் சொன்னபடியே அரசரும் மற்றவர்களும் நிலத்தில் அமர்ந்தனர். அரசரும் மரத்திடம் பேச ஆரம்பித்தார்.

"மரம் அவர்களே, தங்களால் எப்படிப் பேசமுடிகிறது? என் வருகையைப் புரிந்து கொண்டு தாங்கள் என்னை வரவேற்றீர்கள். அப்படியானால் தங்களுடைய கண் எங்கே உள்ளது? நான் சொல்வதைக் கேட்பதால் உங்களுக்குக் காதும் இருக்க வேண்டுமே. எங்கே அது?"

அரசர் சொன்னதைக் கேட்ட மரம் பகபகவெனச் சிரித்தது. அந்தச் சிரிப்பில் மரத்திலிருந்து இலைகளும், பூக்களும் உதிர்ந்தன. பிறகு மரம் பேச ஆரம்பித்தது.

"அரசே நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான். ஒரு சமயம் காட்டில் வேட்டையாட வந்தேன். புறாக்களைச் சுட்டு வீழ்த்துவது எனது பொழுது போக்கு. நிறையப் புறாக்களைத் துப்பாக்கியால் சுட்டேன். அப்படிச் சுடும்போது குண்டொன்று திசை தவறி இங்கே தவம் செய்துகொண்டிருந்த முனிவரின் மீது பாய்ந்து அவர் இறந்து போனார். அவர் இறப்பதற்கு முன்பு என்னை, 'நீ மரமாகப் போகக் கடவாய்,' எனச் சபித்துவிட்டார். நான் எனது தவறுக்கு வருந்தி முனிவரிடம் சாப விமோசனத்திற்கு மன்றாடினேன். பிறகு முனிவர், "உன்னை மனிதனாக மாற்றும் சக்தி என்னிடம் இல்லை. உனக்குப் பேசும் சக்தியைத் தருகிறேன். நடக்கும் சக்தியைத் தருகிறேன். இங்கு வந்து போகிறவர்களிடம் பேசிக்கொண்டிரு. ஆனால் யாரும் உனக்கு உதவ மாட்டார்கள்.

"மேற்குத் திசையிலிருந்து ஒரு அரசர் உன்னிடம் வருவார். அவரிடம் உன்னை மனிதனாக மாற்றும்படி மன்றாடு. அவர் ஒருவருக்குத்தான் உன்னை மனிதனாக மாற்றும் சக்தி உள்ளது, என்றார். நீங்கள் தான் அந்த மாமன்னர் என்பதை வரும்போதே உணர்ந்துகொண்டேன். என்னை எப்படியோ மீண்டும் மனிதனாக மாற்ற தாங்கள் உதவ வேண்டும்."

மரம் கிளைகளை அசைத்து மன்றாடியது. அரசருக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை.

"மரத்தை மனிதனாக மாற்றும் மந்திர சக்தியை நான் அறியேன். என்றாலும், நான் உங்களுக்கு எப்படியாவது உதவியே தீருவேன். இது சத்தியம்," என்றார் அரசர்.

அரசர் தன் நாட்டிற்குச் சென்று பல மந்திரவாதிகளை வரவழைத்து மரத்தை மனிதனாக மாற்ற முடியுமா என்று கேட்டுப் பார்த்தார். பலரும் அது இயலாத காரியம் என்று கூறிவிட்டார்கள்.

மன்னர் தனது மந்திரியின் ஆலோசனையைக் கேட்டார். மதியூக மந்திரி சற்று நேரம் யோசித்த பிறகு, "அரசே இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. நான்கு காவலர்களுடன் நாளை அந்த மனித மரத்திடம் போய் அறிந்து வருகிறேன்," என்றார்.

"அப்படியே அழைத்துப்போய் வாருங்கள்," என அரசர் அனுமதி அளித்தார்.

மறுநாள் மந்திரி நான்கு காவலாளிகளையும் கடப்பாரையுடன் வரச் சொன்னார். ஐவரும் புறப்பட்டு மனித மரம் இருக்கும் இடத்திற்குச் சென்றனர். மரம் அவர்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்தது.

"மன்னரின் மதியூக மந்திரியே, தங்களுடன் நான்கு காவலாளிகள் கடப்பாரைகளுடன் வந்திருக்கிறார்களே, அதைத் தூக்கி வீசச் சொல்லுங்கள்," என்றது.

மரம் இப்படிச் சொன்னதால் மந்திரியின் சந்தேகம் அதிகரித்தது.

"மரத்தைச் சுற்றிலும் தோண்டுங்கள்," என்றார். காவலாளிகள் நிலத்தைத் தோண்டலானார்கள்.

ஓரடி தோண்டியதும் கடப்பாரைக்கு ஏதோ தட்டுப்பட்டது. அதைத் தோண்டித் திறந்து பார்க்கும் போது மரம் மறுபடியும் பேச ஆரம்பித்தது.

"அதைத் தோண்டாதீர்கள். அது என்னைச் சபித்த முனிவரின் சமாதி. அதைத் தோண்டுவது அவரது சமாதியை இடித்த மாதிரியாகும்." என்றது.

மந்திரியின் சந்தேகம் வலுத்தது. மீண்டும், மீண்டும் தோண்டச் சொன்னார். மரத்தின் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை.

காவலர்கள் தோண்டி எடுத்தது ஒரு தகரப்பெட்டி. அது நிறையப் பணம். அதை வெளியே எடுத்த பிறகு மரத்தைச் சோதனை போட்டார்கள். என்ன அச்சரியம் மரம் வாய்திறக்கவில்லை. திடீரென்று யாரோ ஓடும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அரசர் நீண்ட நாட்களாகத் தேடிக் கொண்டிருந்த கள்வன் அவன். காவலர்கள் ஓடிப்போய் அவனைப் பிடித்தார்கள்.


"ஐயா, என்னை மன்னியுங்கள். திருடுவது தவிர எனக்கு வேறு தொழில் தெரியாது. என்னைப் பிடிக்க உங்கள் அரசர் முயன்றபோது நான் தான் சற்று தொலைவில் மறைந்திருந்து மரம் பேசுவது போல பேசினேன். மக்கள் என்னைத் தெய்வமாக மதித்து, பொன்னையும், பொருளையும் கொண்டு வந்து கொட்டினார்கள்.

நைவேத்தியம் வைத்த தின்பண்டங்களை அவர்கள் போனபிறகு நான் சாப்பிட்டுப் பசியைப் போக்கிக் கொண்டேன். பேசும் மரம் என்கின்ற வியப்போடு வரும் பக்தர்களின் குறையைக் கேட்டுக்காணிக்கையாகப் பணம் கேட்பேன். அவர்கள் காணிக்கையை மரப் பொந்தில் போட்டுச் செல்வார்கள். அவர்கள் போன பிறகு நான் அதை எடுத்துக்கொண்டு விடுவேன். அந்தப் பணம்தான் பெட்டியில் இருக்கிறது. தயவு செய்து மன்னித்து விடுங்கள்," என்றான்.

அரசர் அவனைச் சிறையிலடைத்தார். மக்களை மூடநம்பிக்கையிலிருந்து காப்பாற்ற வேண்டிய அரசனே அதை நம்பி ஏமாந்தது குறித்து அரசர் வெட்கப்பட்டார்.

மரத்தடியில் கிடைத்த பணத்தைக் கொண்டு, நாடெங்கும் மரம் நட்டார். மரங்களைப் பாதுகாக்கச் செலவிட்டார். சிறந்த மரத்தை வளர்ப்பவர்களுக்குப் பரிசளித்தார்.

பொதுமக்கள் அரசரையும் மதியூக மந்திரியையும் பாராட்டி விழா எடுத்தார்கள். அன்று, "மூட நம்பிக்கைகளைக் கேட்டு இனி ஏமாற மாட்டோம்," எனச் சபதம் எடுத்துக்கொண்டார்கள். ●



## அறிவோம் மனதில் பதிவோம்




உலகில் மிகப் பெரிய பாரம் தாங்கிக் கற்கள் எகிப்தில் உள்ளன. இவற்றின் உயரம் 69அடி. கி.மு.1270ம் ஆண்டு இரண்டாம் ராமேஸஸ் மன்னர் காலத்தில் இவை நிறுவப்பட்டன.



கணிதத்திற்கான மிகக் கடினமான தேர்வில் 'ஏ' லெவல் என்ற முதலிடத்தைப் பெற்ற சிறுவன் கணேஷ் சிற்றம்பலம். 1988ம் ஆண்டு தனது ஒன்பதாவது வயதில் இச்சாதனையைப் புரிந்தார். இலங்கையைச் சேர்ந்த இவர் தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார்.



உலகின் மிகப் பழமையான மரக் கட்டடம் 'ஹார்யூ' என்ற புத்தர் கோயில். ஜப்பானில் 'நாரா' என்ற இடத்தில் உள்ளது. 670ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோயில் ஆயிரம் ஆண்டுகள் முதிர்ந்த ஹினோகி என்ற மரங்களால் கட்டப்பட்டது. இன்றும் உறுதியாக நிலைத்து நிற்கிறது.



முதன் முதலில் மனிதர்கள் செலுத்தக்கூடிய விண்வெளி ஓடம் தயாரித்தவர், விண்கலத்தில் பறந்தவர் ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின். 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி இந்த ஓடத்தில் 108 நிமிடங்கள் பறந்தார்.




இங்கிலாந்தில் 1896ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி லண்டனில் உள்ள பிக்கடெலி கட்டடத்தில் முதன் முதலில் சினிமா திரையிடப்பட்டது. இந்த சினிமாவின் பெயர் 'அரெஸ்ட் ஒவ் எ பிக் பொக்கட்' (பிக்பொக்கட் அடித்தவன் கைது)

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 5.02.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 26
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 23

பரிசுக்குரியவர்:
கிருஷ்ணபிள்ளை தனரூபன்
மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

எம்.ஐ. முகம்மது முனாஸ்
புஹாரி வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை.

சீ. நிரஞ்சலா
சிவசக்தி வித்தியாலயம், குறுமண்வெளி.

எம்.ஏ. சுக்கி
ஸ்ரீகோணேஸ்வர இந்து வித்தியாலயம்
திருகோணமலை.

செம்பையா ராணி
மோபிறே கல்லூரி, கண்டி.

ஜீ. வரதராஜ்
சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

எஸ். செல்வபாரதி
கொழும்பு-4.

வில்வராஜா பிரஷாந்தன்
கோணேஸ்வர இந்துக் கல்லூரி,
திருகோணமலை.

எம். ரீ.எம். நஸீலா
கொட்டியாக்கும்புர.

பைஸல் ஹமீட்
போகஹகும்புர.

எம். மிப்ராஸ் நஸீர்
கண்டி.

ச.சோபனா
மண்டூர்.

பீ.எம்.எம். மாஜித்
மத்தியமகா வித்தியாலயம், மூதூர்.

## அழகு

தாயிற்கு சேயழகு
சேயிற்கு அறிவழகு
காயிற்கு கனியழகு
கனிகளுக்கு சுவையழகு

வானுக்கு நிலவழகு
நிலவுக்கு ஒளியழகு
வாழ்வுக்கு உழைப்பழகு
உழைப்புக்கு உயர்வழகு



மொழிகளில் தமிழழகு
தமிழுக்கு சொல்லழகு
விழிகளில் மானழகு
கவரிமானுக்கு மானம் அழகு.

எம்.எம். உவைஸ்
மத்தியமகாவித்தியாலயம், காத்தான்குடி-06.



## எறும்பு கடித்த கதை

குளக்கட்டே குளக்கட்டே!
ஏன் நீ வேகவில்லை?
புல் முளைத்தது நான் வேகவில்லை.
புல்லே புல்லே ஏன் முளைத்தாய்?
மாடு மேயவில்லை நான் முளைத்தேன்
மாடே மாடே ஏன் மேயவில்லை?
அவிழ்த்துவிடவில்லை, நான் மேயவில்லை.
மாட்டுப்பெண்ணே மாட்டுப்பெண்ணே
மாட்டை ஏன் அவிழ்த்துவிடவில்லை?
குழந்தை அழுதது, நான் அவிழ்த்து விடவில்லை.
குழந்தாய் குழந்தாய் ஏன் அழுதாய்?
எறும்பு கடித்தது நான் அழுதேன்.
எறும்பே எறும்பே ஏன் கடித்தாய்?
வாயில் விரல் வைத்தால் கடிப்பேன் தானே!

அஸ்ரபுன்நிஸா ஏ. ஹமீட்–அக்குறணை.

## விடுகதைகளும் விடைகளும்


1. மரத்தில் இலை வடிவம். அரைத்தால் கலை வடிவம். அது என்ன?
2. வாரி வழங்கும் செல்வம். வாழ வைக்கும் செல்வம். அது என்ன?
3. இரை எடுப்பான். உண்ணமாட்டான். அவன் யார்?
4. காது உண்டு ஆனால் கேட்காது. அது என்ன?
5. காற்றே வாகனம். காணுமிடமெல்லாம் இருப்பிடம். அவன் யார்?
6. காடு மேடு செல்வேன் நாடோடியும் அல்ல. வீடு வீடாகச் செல்வேன். பிச்சைக்காரனும் அல்ல. கம்பிக்குள் கட்டுப்படுவேன் கைதியும் அல்ல. தொட்டால் சீறிடுவேன் பாம்பும் அல்ல. நான் யார்?
7. நீண்டு இருக்கும் பாம்பு அல்ல. நெருப்பிலே விளையாடும் சிவனும் அல்ல. கார் மேகம் போல முழங்கும் இடியும் அல்ல. வாயால் தின்று வாயால் கக்கும் வௌவாலும் அல்ல. அது என்ன?
8. மலையில் ஏறும் மானுமல்ல. ஆற்றைக் கடக்கும் ஓடமும் அல்ல. ஊர்ந்து வரும் சாரையும் அல்ல. ஊளையிடும் நரியும் அல்ல. அது என்ன?
9. ஒற்றைக் காலில் நிற்பான் முனிவனும் அல்ல. ஒரக்கண்ணால் பார்ப்பான் குருடனும் அல்ல. தனியாக நிற்பான் அனாதையும் அல்ல. அவன் யார்?
10. எழுதுவதற்கு உதவும் பேனா அல்ல. படிப்பதற்கு பயன்படும் புத்தகமும் அல்ல. அது என்ன?

1. மருதாணி 2. கல்வி 3. அகப்பை
4. ஊசி 5. தூசி 6. மின்சாரம்
7. துப்பாக்கி 8. புகையிரதம்
9. கொக்கு 10. கரும்பலகை.

செல்வி. றிஸ்னா நளீம்–பேருவளை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கும்பிளேயின் குழப்பம்



இந்திய கிரிக்கெட் அணி பந்து வீச்சாளர்களில் முன்னணியில் இருக்கும் அனில் கும்பிளே முன்பெல்லாம் கண்ணாடி அணிந்து பந்துவீசி வந்தார். இதனால் சில சமயம் ஸ்டம்பைக் குறி வைத்துப் பந்து வீசுவதில் அவருக்குப் பிரச்சினை ஏற்பட்டது.

அவரிடம் யாரோ ஒருவர் கண்ணாடிக்குப் பதில் 'கன்டாக்ட் லென்ஸ்' (கண்ணின் கருமணியின் மீது பொருத்துவது) அணியுங்கள் என்று யோசனை கூறினாராம். உடனே கும்பிளே கண்ணாடியைத் தூக்கித் தூர வீசிவிட்டு கன்டாக்ட் லென்சுக்கு மாறிவிட்டார்.

கும்பிளே வாங்கி உள்ள கன்டாக்ட் லென்சுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை. தினமும் அவற்றைச் சுத்தமான தண்ணீரில் கழுவி கண்களில் அணிந்து கொள்ள வேண்டும். என்றாலும் சிரமத்தைப் பார்க்காமல் கும்பிளே கன்டாக்ட் லென்ஸ் அணிந்தார்.

கடந்த சில மாதங்களாக அவர் கன்டாக்ட் லென்ஸ் அணிந்து விளையாடி வருகிறார்.

## ஸ்போர்ட்ஸ்



அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

சமீபத்தில் நடந்த 5 நாடுகள் கிரிக்கெட் போட்டிகளின் போது அவர் சொற்ப ரன்களே கொடுத்து அதிக விக்கட்டுக்களை வீழ்த்தினார். இதனால் மகிழ்ச்சியில் மிதந்துகொண்டிருக்கும் அவர் செலவு அதிகமானாலும் பரவாயில்லை என்று தொடர்ந்து கன்டாக்ட் லென்ஸை அணியத் தீர்மானித்துள்ளார்.

ஆனால் டாக்டர்கள் அவரைப் பயங் காட்டியுள்ளனர். கன்டாக்ட் லென்ஸ்அணிவது அவ்வளவு நல்லதல்ல என்று கூறியுள்ளனர்.

இதனால் இனி என்ன செய்வதென்று கும்பிளே குழப்பத்தில் இருக்கிறார்.

# வயதானதால் சாதனை!

வரும், உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் கலந்து கொள்ளும் கமரூன் அணியில் ரோஜர் மில்லா இடம்பெற்றிருக்கிறார். இதன்மூலம் அவர் சாதனை ஒன்றும் படைக்க இருக்கிறார்.

அதாவது உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களில் அதிக வயதானவர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

ரோஜர் மில்லாவுக்கு தற்போது 42 வயதாகிறது.

# அமெரிக்காவிலும் கிரிக்கெட் மோகம்

எந்த நேரமும் 'பேஸ்' போலையும் கூடைப்பந்தையும் நினைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு இப்போது



கிரிக்கெட் மோகம் வந்திருக்கிறது.

அமெரிக்கர்கள் கிரிக்கெட்டில் சர்வதேச தரத்தை எட்டாதபோதும் தொலைக்காட்சிகளில் கிரிக்கெட்டை இரசிக்கிறார்கள். இரசிப்பு மோகமாகி இப்போது கிரிக்கெட் குழுக்களை உருவாக்கி வருகிறார்கள்.

கிரிக்கெட் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவை நடத்தும் போட்டிகளில் பல்லாயிரம் இரசிகர்கள் திரளுகிறார்கள்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 10 இலட்சம் மக்களும், மேற்கு இந்தியத்தீவுகளைச் சேர்ந்த 20 இலட்சம் மக்களும் அமெரிக்காவில் வாழுகிறார்கள். அவர்கள் கிரிக்கெட்டையும் வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

தற்போது அமெரிக்காவில் 300 கிரிக்கெட் சங்கங்கள் உள்ளன.

அமெரிக்க அணி ஒன்று இந்தியாவின் பம்பாய்க்கு வரப்போகிறது. சுழல்பந்து வீச்சில் அனுபவம் உள்ள அணியாக அது திகழ்கிறது. அதன் கப்டன் சமின் அமின்.

# தே ன் கி ண் ணம்





### தேன் தொட்டி நீ!

எழில் நிலவே தளிருடலே, இன்ப ஊற்றே!
ஏகாந்த வெளியுலவும் தென்றற் காற்றே!
பொழில் வழங்கும் இன்கனியே! வாசப்பூவே!
புலமைமிகு பாவலர்கள், புனைந்த பாவே!
நெளி கூந்தல் காரிகையே! இனிக்கும் தேனே!
நெருங்கிவளர் கானகத்தில் வதியும் மானே!
களிதந்தே என்னுள்ளம் ஈர்த்த சொத்தே!
கருங்கடலில் வாழ் சங்கம் ஈன்ற முத்தே!

சொற் கொண்டு தீட்டவொணா எழிலின் தேவி!
சொந்தமடி எந்தனுக்கு உந்தன் ஆவி!
கற்கண்டும், முக்கனியும் கலந்த சாறே!
கம்பனவன் இலக்கியமாய் புனைந்த பேறே!
வெற்றிலைபோல் மகத்துவங்கள் பெற்ற கோதை!
வேல்விழி நீ காட்டுவதே எந்தன் பாதை
சிற்றின்பச் சாகரமே! சீனிக் கட்டி!
சிற்றெறும்பு நான்; நீயோ "தேனின் தொட்டி!"

அ.கௌரிதாசன்-ஆலங்கேணி.



### அன்றும் இன்றும்

அன்று!
சுப்பையா அண்ணனும் சுல்தான் காக்காவும்!
அப்புஹாமி ஐயாவும்? அந்தோணி பிரதரும்!
நட்பு நாடி வாழ்ந்த போது நடுவில் நின்ற மனித நேயம்...
இன்று!
கம்பியூட்டரோடு கதை பேசி- ரோபோவோடு கை குலுக்குவதாய்-
தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நம்மவர் நட்பின்-
சம்பந்தம் வேண்டாமென தப்பித்துக்கொண்டது மனித நேயம்.
அன்று!
சத்தியம் வாழ்ந்தது..சந்தோஷம் மலர்ந்தது!
சுத்தமான மனித நேயம் சுதந்திரமாய் திரிந்தது.
இன்று!
யுத்தம் தொடர்கிறது..ரத்தம் சிந்துகிறது.
சோகமான மனித நேயம் துன்பம் கொள்கிறது!
அன்று!
கை நாட்டு மனிதரிடம் கலந்திருந்த மனிதநேயம்!
இன்று!
பொய் பேசும் மனிதரிடத்தில் போக மறுக்கிறது...
அன்று!
ஒற்றுமைத் தென்றல் வீசியது!
ஒட்டிக்கிடந்தது மனித நேயம்...
இன்று!
வேற்றுமைப் புயல் அடிக்கிறது!
வேறுபட்டுப் போனது மனித நேயம்.

ராகில் ஏ.காசிம்-மன்னார்.

### எனது தேசம்...



சுடு மணலில் போட்ட
மண்புழு ஆட்டம்
எனது தேசம் தவிக்குது..

துடிக்கத் துடிக்க
அடித்துப் போட்ட
மனித உடல்கள்
யார் யார் என்பதில்
அடி பிடி நடக்கும்!

ஏழை உடல்கள்
சாய்ந்து கிடக்கும்!
நேர்மையின் பிடரியை
பிடித்து முறித்து...
அரசியல் காரர்
ஆற அமர அறிக்கை விடுவர்!
ஏனெனில் நாளை
எழுந்து அவைகள்
'புள்ளடி' போடா...

இறந்த பிறகும்
இனத்தைப் பிணத்தில் பூசுவர்!
பூசி...அரசியல் பேசுவர்!

இனவாத இசையை
எங்கும் ஒலித்து..
உண்மையின் தலையில்
ஓங்கி அடித்து...
அடுத்த தடவையும்
கதிரையில் இருக்க
அடிபிடிப் படுவர்!

கதிரைச் சண்டையில்
காணாமல் போன
மனிதம் தேடி
தேசம் கொஞ்சம்
கீழே குனிய...
இன்னும்...இன்னும்

தேசத்தின் முதுகில்
சந்தர்ப்பக் குரங்குகள்
ஏறி இருந்து
சேதங்கள் செய்யும்!

இப்படி-
சுடுமணலில் போட்ட
மண்புழு ஆட்டத்தில்
எனது தேசம்
தொடர்ந்தும் தவிக்கும்.

எஸ்.புஸ்பானந்தன்.

### தூது

என்
உதிரத்தில்
ஓராயிரம்
உதிர்வுகள்...
உள்ளத்தின்
எமது
உச்சரிப்புக்கள்...

சரித்திரமாய்

இருந்தவன் நான்.
உன்
சந்திப்புக்குப் பின்னர்தான்
சமாதியாகிவிட்டேன்.

என்
பிரபஞ்ச ஸ்நேகமெல்லாம்
பிரிவு ரேகைகள்...
நினைவு வரிகளில் கூட
நிசப்த அலைகள்...
என்
கனவுகளிலும்
காதலை விதைத்து
விட்டு-

நீ
மட்டும்
எங்கோ
நிசப்தமாகிவிட்டாய்!

அ.சுதாசேகர்
பொத்துவில்.






### சதியும்—யுகமும்

இந்த யுகம்
உதிர ஆடை
உடுத்துக் கொண்டது!

விஞ்ஞான மாத்திரையை
விழுங்கக் கொடுத்து
அறிவின் தேகத்தை
ஆரோக்கியமாக்கும்
ஏகாதிபத்தியத்தின்
ஏஜண்டுகளே!

நீங்கள்-
ஆயுதவிசத்தை
அருந்தக் கொடுத்து
சமாதானத்தையல்லவா
சாகடித்துவிட்டீர்கள்!

அமைதிக்கு
நிழல் கொடுக்க
ஐ.நா.சபையை
நட்டு வைத்துவிட்டு
ஆயுதப் பசளையை
அள்ளிக்கொட்டுகிறீர்களே..!
எப்படி-
அமைதி ஆறுதலடையும்?

ஏகாதிபத்தியப் படகில்
ஏறிப்போய்
முதலாளித்துவக் கடலுக்குள்
மூழ்கியவர்களே...!
நீங்களா-
யுத்த அலைகளிலே
தத்தளிக்கின்ற
உலக ஐக்கியத்தை
கரைசேர்க்க
உதவப் போகிறீர்கள்?

நீங்கள்-
மாநாடுகளில் மட்டும்தான்
சமாதானத்தை
சிறைமீட்க சிந்திக்கின்றீர்கள்;

ஆனால்-
அரசியல் தெருவிலே
செல்வாக்கு வெளிச்சம்
சேர்ப்பதற்காக
ஆயுத விறகுகளை
அள்ளிக்கொட்டி
நாடுகளுக்கிடையில்
பகைமைத் தீயை
பற்றவைத்து விடுகிறீர்கள்!

சமாதானத்தை
விழுங்கிக்கொண்டிருக்கும்
ஏகாதிபத்திய முதலைகளே...!
நீங்கள்-
அபிவிருத்தியடைந்திருப்பது
அறிவில் அல்ல;
மூட்டிவிடுவதிலேயே
முன்னேறியிருக்கிறீர்கள்!

இதனால்-
போர்க் கரங்கள்
உலக ஐக்கியத்தை
உரிந்துவிட
இந்த யுகம்
உதிர ஆடை
உடுத்துக்கொண்டது!

-காத்தான்குடி அனு-

# இந்த வாரம் உங்கள் பலன்

**(30.01.94 முதல் 05.02.94 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

மகரம் - சூரியன், சனி, வெள்ளி, செவ்வாய்
கும்பம் - புதன்
இடபம் - கேது
துலாம் - வியாழன்
விருட்சிகம் - இராகு

சந்திரன்-சிம்மம், கன்னி, துலாம், விருட்சிகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் இலாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, எதிர்பாரா நன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பூமியால் இலாபம். | பி.ப 1 மணி |
| புதன்- | உறவினர் இழப்பு, செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, நிலைப்பிரிவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | பணச்செலவு, கவலை, தேகசுகம் பாதிப்பு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவக்குறைவு, மனவேதனை. | பகல் 11 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியத்தடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் கலகம், ஊதாரித்தனம். | பகல் 12 மணி |
| புதன்- | முன்னேற்றம், உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| வியாழன்- | தூரஇடப் பயணம், கௌரவம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | குடும்பப் பிணக்கு, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, எதிர்பார்த்த நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- | பணச்செலவு, நிலைதடுமாற்றம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், கவலைகள் மறையும். | பகல் 11 மணி |
| புதன்- | பணத்தட்டுப்பாடு, கடன்படல். | பகல் 12 மணி |
| வியாழன்- | தேகசுக விருத்தி, நினைத்தகாரியம் தடை. | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, உயர்ச்சி. | பகல் 11 மணி |
| சனி- | வீண் செலவு, எதிர்பார்த்த நன்மை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயணங்களில் வெற்றி, பாராட்டு. | பகல் 11 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | வீண் குறைகேட்டல், கடவுள் வழிபாடு. | காலை 10 மணி |
| புதன்- | உயர்ந்தோர் நட்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வியாழன்- | குடும்ப சுகம், மனைவியால் கவலை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | பிள்ளைகள் உதவி, மனச்சந்தோஷம். | பகல் 11 மணி |
| சனி- | உறவினர் தொல்லை, திடீர் பயணம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வ தரிசனம், உயர்ச்சி. | காலை 11 மணி |
| புதன்- | வீண் வாக்குவாதம், புதிய முயற்சி. | காலை 10 மணி |
| வியாழன்- | கௌரவம், கீர்த்தி, மேன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பயணங்கள் தடை, பொருள் இழப்பு. | காலை 8 மணி |
| சனி- | நடைக்கஷ்டம், வீண் செலவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி மேன்மை, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள- | புதிய திட்டங்கள், கடின உழைப்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | மனத்தைரியம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- | பயணங்களில் இழப்பு, கவலை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | காணி பூமி கைமாறல், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| வெள்ளி- | தனலாபம், கரியசித்தி. | பி.ப 3 மணி |
| சனி- | புதிய முயற்சி, உழைப்பு முன்னேற்றம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | காரியத்தடை, தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | கௌரவக் குறைவு, குடும்பக் கலகம். | பி.ப 1 மணி |
| புதன்- | துயர் அதிகம், நிலைப்பிரிவு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, வீண் சந்தேகம். | காலை 10 மணி |
| வெள்ளி- | தைரியம் இழப்பு, மனக்கவலை. | காலை 8 மணி |
| சனி- | உறவினர் உதவி, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | கௌரவம், முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| புதன்- | குடும்ப மகிழ்ச்சி, பூமியால் இலாபம். | காலை 10 மணி |
| வியாழன்- | வெளியிட வாசம், உத்தியோக உயர்வு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வீண் முயற்சி, பழி சொல் கேட்டல். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணவரவுத்தடை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாசம், துயர் அதிகம். | காலை 8 மணி |
| திங்கள்- | தேகசுக நன்மை, வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | உயர்ச்சி, பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- | காரியசித்தி, புகழ், மேன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | அந்நியரால் உதவி, அதிகாரவிருத்தி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | அரச விரோதம், உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| சனி- | வெளியிடத்தால் நன்மை, மதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுகம் நன்மை. | காலை 10 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, மனச்சந்தோஷம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, உயர்வுத் தடை. | பகல் 11 மணி |
| புதன்- | தெய்வானுகூலம், தருமசிந்தை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், கடன்படல். | பகல் 11 மணி |
| வெள்ளி- | எடுத்தகருமம் வெற்றி, வெளியிடப் பயணம். | பி.ப 3 மணி |
| சனி- | குடும்ப சுகம், கௌரவத் தன்மை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொறுமையிழப்பு, கோபமிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் கவலை, குடும்பக்கலகம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, மனச்சந்தோசம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | செய்தொழில் இலாபம், ஆடம்பரச் செலவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | மனக்கிலேசம், கௌரவக் குறைவு. | பி.ப 1 மணி |
| சனி- | மனக்குழப்பம் தீரும், விருந்தினர் வருகை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கருமங்களில் வெற்றி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ச்சி, உறவினர் நெருக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தெய்வானுகூலம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், பணவரவு தடை. | காலை 9 மணி |
| வியாழன்- | தீயோர் நட்பு, பொருள் இழப்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | நினைத்தகாரியம் வெற்றி, உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5



# குழந்தையோடு பிறந்தது சிக்கல்!

## ஆணா? பெண்ணா? அறியமுடியாமல் அவதி!!

அலன்-அவுட்றே பாண்ஸ் தம்பதிக்கு ஆறாவது பிறந்த குழந்தை பெற்றாரை மட்டுமல்ல மருத்துவ நிபுணர்களையே திணறடித்தது. அக்குழந்தை ஆணா பெண்ணா என்று நிர்ணயிக்க முடியாதவாறு இருபால் உறுப்புகளையும் சமமாகக் கொண்டிருந்ததே அதற்குக் காரணமாகும்.

குழந்தை பிறப்பதற்கு முன்னர் 'ஸ்கானிங்' பரிசோதனையின் பின்னர், பிறக்கப்போவது பெண் குழந்தைதான் என்று நிச்சயமாக மருத்துவர்கள் கூறியிருந்தனர். இதனால் கிறிஸ்ரீன் என்ற பெண் பெயரை குடும்பத்தினர் தெரிவு செய்து வைத்திருந்தனர். ஆனால் பிறந்த குழந்தைக்கு சிறிய ஆண்குறியும் வளர்ந்து காணப்பட்டமை ஏமாற்றத்தையே கொடுத்தது. மருத்துவர்கள் பல பரிசோதனைகளையும் மேற்கொண்டபின்னர் இது பெண் குழந்தைதான் என்ற் முடிவுக்கு வந்தனர்.

இத்தகைய நிலை 10,000 குழந்தைகளில் ஏதாவது ஒரு குழந்தைக்கு ஏற்படுவது சகஜம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். பெண் குழந்தைகளாக இருந்தபோதிலும் அவற்றின் உள்ளுறுப்புக்கள் சுரக்கும் ஹோர்மோன்களில் சமதன்மை இல்லாமல் ஆண்களுக்கான ஹோர்மோன்கள் சற்று அளவுக்கு மீறிச்சுரக்க நேரிடும்.

இதனால் 'கிளிட்டோரிஸ்' எனப்படும் பெண்மைக்கந்து வழமையைவிடப் பருக்க நேரிடும். இது ஆண்குறியினைப் போல் காட்சி தரும். இதற்கு பிளாஸ்ரிக் அறுவைசிகிச்சை மேற்கொண்டால் சரியாகி விடும் என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

குழந்தை பிறந்த 7 நாட்களானதும் மருத்துவமனையிலிருந்து வெளியேற வேண்டிய நிலை அவுட்றேக்கு இருந்தது. ஆனால் அன்றையதினம் குழந்தை கிறிஸ்டீன் கடும் சுகயீனமுற்றமையினால் மருத்துவமனையில் மேலும் தங்க வேண்டிய தாயிற்று. இக்காலக் கெடுவுக்குள் குழந்தையின் பாலை நிர்ணயிக்கும் சகல பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். பரிசோதனைகளின்போது பயன்படுத்திய மருந்துகள் குழந்தையை ஓரளவு பாதிக்கவே செய்தது.

ஆணும் பெண்ணுமற்ற அலித்தன்மையும் இதே போன்றதொரு நோய்தான் என்று கூறிய மருத்துவர்கள், இத்தகைய பிறவிகளுக்கு இருபால் உறுப்புகளும் இல்லாது போய்விடும் என்றனர். ஆனால், கிறிஸ்ரீனைப் பொறுத்தவரை அவளுக்கு இருபால் உறுப்புகளுமே இருப்பது போன்ற அமைப்பு இருந்தது.

இந்நோயினை CONGENITAL ADRENAL HYPERPLASIA (CAH) என்று கூறுகிறார்கள். ஹோர்மோன் சுரப்பில் சமதன்மை அற்ற நிலை என்பதுதான் பொருள்.

கிறிஸ்ரீன் பிறந்து ஒன்பதாவது மாதத்தில் அவளுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இப்பொழுது பரிபூரணமான பெண் குழந்தையாக அவள் வளர்வது கண்டு பெற்றார் பூரிப்படைகின்றனர்.

## 36 நாளின் பின் மற்றொரு குழந்தை!

பேர்ட்ருங்காறோ தம்பதிக்கு குழந்தை இல்லை என்ற குறை நீண்டகாமாய் இருந்தது.

1987ல் அந்தக்குறையை தீர்க்க திருமதி பேர்ட்ருங்காறோ கர்ப்பமானார்.

1987 டிசம்பர் 22ம் திகதி தலைப்பிரசவம். டயானா என்னும் பெண்குழந்தை பிறந்தது.

தம்பதிக்கு சந்தோசம்தான். ஆனால் சந்தோசம் நீடிக்கவில்லை. தாய் வலியால் துடித்தார். மருத்துவர்கள் பரிசோதித்த போது இன்னொரு குழந்தை உள்ளே இருப்பது தெரிந்தது.

மருத்துவர்கள் கவலையடைந்தனர். தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டது.

முதற்குழந்தை டயானா பிறந்து சரியாக 36 நாட்கள் கழிந்து 1988 ஜனவரி 27ம் திகதி மற்றொரு குழந்தை பிறந்தது. அதன் பெயர் மோனிகா.

மருத்துவர்கள் வியந்தனர். தாயும் சேயும் பாதிப்பில்லாமல் இருந்ததால் நிம்மதிப் பெருமூச்சும் விட்டனர். இவ்வாறு 36 நாள் இடைவெளியில் மற்றொரு குழந்தை பிறந்தது மருத்துவ உலகம் இதுவரை காணாத சம்பவமாகும். அதனால் உலக சாதனைப் புத்தகமான கின்னஸிலும் அது இடம்பெற்றுள்ளது.

டயானாவும்-மோனிகாவும் எவ்வித குறையுமின்றி வளர்ந்து தமது தாயுடன் மலர்ந்த முகத்தோடு படத்தில் உள்ளனர்.



## பூண்டோ பூண்டு!

ஜப்பானில் முதியவர்கள் அதிகமாக பூண்டை உட்கொள்ளுகின்றனர். வயதானமையினால் ஏற்படக்கூடிய தளர்வினை நீக்கி, உறுதிபெற பூண்டு உதவுகிறது என்று நம்புகின்றனர்.

பூண்டு பொதுவாக வயிற்றில் ஏற்படும் பலதரப்பட்ட உபாதைகளையும் நீக்க வல்லது. அஜீரணத்தைப் போக்க உதவுகிறது. வயிற்றிலுள்ள புழுக்களையும் அழிக்கும் சக்தி பூண்டுக்குண்டு.

பொதுவான பல வேதனைகளையும் போக்வல்ல பூண்டினை விஞ்ஞானப் பகுப்பாய்வு செய்தவர்கள், பலதரப்பட்ட கிருமிகளையும் அழித்தொழிக்கும் கிருமி நாசினிகளுக்குரிய அம்சங்களை பூண்டு கொண்டிருப்பதாக கூறுகின்றனர்.

உலகெங்கணும் இதனை உணவுடன் சேர்த்து உண்ணுகின்றனர். பேய் பிசாசுகளையும் பூண்டு விரட்டிவிடும் என்று மேற்கத்தைய நாடுகளில் இன்றும் கருதுகின்றனர். வீட்டு வாயில்களிலும் யன்னல் நிலைகளிலும் பூண்டுக்கொத்தைக் கட்டித் தொங்கவிடுகிறார்கள்.

இந்தோநேஷியாவில் பூண்டு இறக்குமதிக்குத் தடை விதிக்கப் பட்டிருந்தது. இதனால் தாய்லாந்தின் கடத்தல்காரர்கள், 1991ல், 100 தொன் எடையுள்ள பூண்டை ஜாவாவுக்குக் கடத்திக் கொண்டு வந்தனர். ஜாவாக் கடற்கரையில் காவலுக்கிருந்த படையினருக்கும் கடத்தல் காரர்களுக்குமேற்பட்ட துப்பாக்கிச் சமரின் பின் அத்தனை பொதிகளையும் கரையோரமாகக் கடலில் வீசிவிட்டுச் சென்று விட்டனர்.


இதனை வெள்ளைப்பூடு, உள்ளி, வெள்ளை வெங்காயம் என்றும் அழைப்பார்கள். ■

## நறுமணமும் பெரும் கேடாகலாம்

துர்நாற்றத்தை பெரும்பாலும் எவரும் விரும்புவதில்லை. சிலர் நறுமணத்தை அனுபவிப்பதைவிட துர்நாற்றத்தினை சுவாசிப்பதில் அதிக நாட்டம் செலுத்துவார்கள்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்'சாகி விடுவது போல் நறுமணமே சிலருடைய உயிரையும் குடிக்கும் கூற்றாக இருந்துள்ளது. சாதாரண மணம் கூட சிலருக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்திய சம்பவங்கள் மருத்துவ வரலாறுகளில் காணப்படுகின்றன.

வத்திக்கானில் போப்பாண்டவருக்கு அடுத்த அந்தஸ்தில் இருந்த வண.ஒலிவர் கராஃபா என்பவர் சாதாரண ரோசா மலரின் நறுமணத்தைத் தாங்க முடியாமல் தவித்தாராம். ஐரோப்பிய மருத்துவ சஞ்சிகை ஒன்று இதனைக்குறிப்பிட்டதுடன் மற்றுமொரு பிஷப்பாண்டவர் ரோசாவின் மணம் தாங்க முடியாமல் இறந்துவிட்ட சம்பவத்தையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அவருடைய பெயரை வெளியிடவில்லை.



சில பழங்களின் மணம் கூட பலருக்கு ஒத்துப்போவதில்லை. வின்னாகிரி உணவுப் பதார்த்தங்களில் சேர்க்கப்படுவதுண்டு. இந்த மணமே சிலருக்கு நோயினை ஏற்படுத்தியதுண்டு. சாதாரண றொட்டி (பாண்)லிருந்து எழும் வாடையும் பிடிக்காதவர்கள் உண்டென்று தெரியவருகிறது.

நாய், பூனை போன்ற வீட்டு மிருகங்களை மடியில் வைத்து கொஞ்சி விளையாடுவார்கள். சிலர் இப்பிராணிகளிடமிருந்து எழும் வாடையால் அவதிப்படவும் நேரிடுகிறது.

போலாந்து நாட்டின் அரசனாகவிருந்த ஸ்ரனிஸ்லாஸ் என்பவர் பல யுத்தங்களில் எதிரிப்படைகளை விரட்டியடித்து வெற்றி கண்டுள்ளார். ஆனால் ஒரு தடவை பூனை ஒன்று அவர் அருகில் சென்ற போது, அதன் வாடை பிடிக்காமல் மூக்கினைப் பொத்திக்கொண்டு மதில் மீது தாவி ஏறிவிட்டாராம். ●

## நெஞ்செரிவைத் தடுப்பது எப்படி?

நாம் உண்ணும் உணவு வயிற்றை அடையும்போது சீரணிப்பதற்கான ஆயத்தங்களை சமிபாட்டு உறுப்புக்கள் செய்கின்றன. சுலபமாகச் சமிபாடு அடைய முடியாத உணவுப் பதார்த்தங்கள் செரிமான உறுப்பினைச் சென்றடையும்போது ஒருவகை வெப்ப ஆவி வெளியேறி உணவுக் குழாயைத் தாக்கும் போது நெஞ்செரிவு ஏற்படுகின்றது.

காப்பி, தேனீர், சொக்கலேட், குளிர்பானங்கள், எண்ணையில் பொரித்த உணவு, புளிச்சத்து அதிகமான பழங்கள், தக்காளி, கோஸ், அவரைவகை மற்றும் மதுபானம் போன்றவற்றை அளவுக்கு அதிகமாக உட்கொள்வதனால் நெஞ்செரிவு ஏற்படும். உணவு உட்கொள்ளும் கால இடைவெளியினை அதிகமாக்குவது அல்லது வழக்கமாக உண்ணும் உணவின் அளவினைக் குறைப்பது போன்ற பழக்கங்களைக் கைக்கொள்வதன் மூலம் நெஞ்செரிவைத் தடுக்கலாம்.

### உடலுக்கு வேலை:

சிறிய அளவிலான தேகப் பயிற்சியும் நெஞ்செரிவினை வரவிடாமல் தடுக்கவல்லது. தேகாப்பியாசம் செய்வதற்கு முன்னர் அதிக அளவில் உணவு உண்ணலாகாது. உடல் பருமனானவர்கள் எடையைக் குறைப்பதற்கு உணவுக்கட்டுப்பாட்டுடன் தேகப்பயிற்சியும் செய்வது நல்லது.

### படுக்கை:

உணவு கொண்டதும் படுக்கையில் விழுந்து விடாதீர்கள். உண்டதும் உறக்கம் தவிர்க்கப்படவேண்டும். மாலையில் உண்பதையும் படுக்கைக்குச் செல்லும் போது சிற்றுணவு கொறிப்பதையும் விட்டுவிடவேண்டும்.

படுக்கையில் தலைப்பாகத்தை சில அங்குலங்கள் உயர்த்துவதன் மூலம் நெஞ்செரிவினைத் தடுக்கலாம்.

### புகைத்தல்:

புகைப்பதனாலும் சிலருக்கு நெஞ்செரிவு ஏற்படுகிறது. இவர்கள் புகைப்பதை உடனடியாக நிறுத்துவது நல்லது. உடனடியாக இப்பழக்கத்தை விட்டுவிடமுடியாவிட்டால் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொள்ளலாம்.

## கண்ணிழந்த எஜமானியைக் காப்பாற்றிய நாய்!

'கத்தறினாவுக்கு பரிபூரணமாகக் குணமாகிவிட்டது' என்று டயனா மோச்சக் அறிவித்துள்ளார். கனடாவிலுள்ள ஒன்ராறியோ மாநிலத்தின் யோர்க் நகர வாசிகளுக்கு இத்தகவல் இனிப்பானதொரு செய்தி! கத்தரினா என்பது 15 வயதான ஒரு நாய். கண்பார்வையற்ற தனது எஜமானி டயனாவை இந்த நாய் காப்பாற்றியுள்ளது. இந்தச் செயலில் அந்த நாய் தன் உயிரையே துச்சமென மதித்து துணிகரமான முயற்சியிலீடுபட்டு சாதனை படைத்திருக்கிறது. 'இந்த வருடத்தின் சிறந்த நாய்' என்ற விருதினையும் கத்தரினா பெற்றுக் கொண்டது.

கத்தரினாவை அழைத்துக்கொண்டு பார்வையற்ற டயனா மோச்சக் உலாவச் சென்றுள்ளார்.



அப்போது முரட்டுக்காளை ஒன்று டயனாவை முட்டி மோதுவதற்குப் பாய்ந்து வந்திருக்கிறது. நொடிப்பொழுதில் கத்தறினா தனது எஜமானியை கீழே தள்ளி, அவர்மீது ஏறிக் கொண்டது. கீழே வீழ்ந்துவிட்ட டயனாவுக்கு எந்தத் தாக்குதலும் ஏற்படாவண்ணம் முரட்டுக்காளையின் தாக்குதலனைத்தையும் கத்தறினா தன் உடலில் வாங்கிக்கொண்டது. அந்தக்காளை அப்பால் சென்ற பின்னரே டயனாவின் உடலிலிருந்து கத்தறினா இறங்கியது. அதன் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்ட மையினால் இரத்தம் பெருக்கெடுத்தது. தொலைவில் நின்று அவதானித்தவர்கள் உதவிக்கு ஓடிவருவதற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

டயனா உண்மையினை அறியாமல் தான் வளர்த்த பிராணி தன்னைத்தள்ளி வீழ்த்தி விட்டது என்று திட்டிக்கொண்டிருந்தார். அங்கு வந்து சேர்ந்தவர்கள் மூலம் உண்மையை அறிந்துகொண்ட அம்மாது, நன்றியுடன் நடந்து கொண்ட அந்தப் பிராணியை அன்போடு அணைத்துக்கொண்டார்.


## கட்டியணைத்து காப்பாற்றியது

ஏழுவயதுச் சிறுவன் கடும் குளிரால் மாண்டு போகாமல் அவன் வளர்த்த 3 நாய்க்குட்டிகள் காப்பாற்றியுள்ளன.

கிறிஸ்ரோஃபர்ஸ் ரில்ற்னர் என்ற சிறுவன் தனது பெற்றாருடன் இழுவை இல்லத்தில், கென்ராக்கி மாநிலம் லெக்ஸிங்ரன் நகருக்கருகேயுள்ள வனப்பகுதியில் தங்கியிருந்தான். அவனுடைய செல்லப்பிராணிகளான பேப், றெக்ஸ், சாறோ ஆகிய நாய்க்குட்டிகளுடன் அந்த வனத்துள் புகுந்தான். திரும்பி வருவதற்கு வழிதெரியாமல் நாய்களுடன் காட்டில் அலைந்து களைத்துவிட்டான். மாலையாகியது. கடும்குளிர் வாட்டியது. மூன்று நாய்களும் ஒன்றோடொன்று அணைத்துக்கொண்டதுடன் சிறுவன் கிறிஸ்ரோஃபஸையும் இறுக்கமாகக் கட்டி அணைத்துக்கொண்டன.

அடுத்த நாள் பகல் வேளையில் கிறிஸ்ரோஃபஸையும் நாய்க்குட்டிகளையும் பெற்றார் கண்டுபிடித்தனர். அந்தச் சிறுவனை நாய்க்குட்டிகள் அணைத்துக்கொண்டிருந்தமையினால் ஏற்பட்ட வெப்பமே கடும் குளிரிலிருந்து கிறிஸ்ரோஃபஸைக் காப்பாற்றியது என்று இவர்களைத் தேடிக்கண்டுபிடித்தவர்கள் கூறுகின்றனர்.





புதுமைத் தொடர்

எழுதுவது ரசிகன்

# கண்ணே மதுமிதா

ரம்யாவைக் காணவில்லை என்றதும் அவளாகத் தப்பியிருக்க முடியுமா? முடியும் எனில் தப்பிச் செல்ல என்ன காரணம்? நம்பிக்கையானவள். தன் உயிர் தந்தும் நட்புக்காய் மரிக்கத் தயாராக இருந்தவள் என்றெல்லாம் குலாம்ஷா சொன்னது டி.ஐ.ஜி.டென்சிலின் நினைவில் வந்தது.

"ரம்யா கடத்தப்பட்டிருக்கக் கூடும் என்று நினைக்கிறீர்களா இன்ஸ்பெக்டர்?"

டி.ஐ.ஜி டென்சில் கேட்க மறுமுனையில் அரவிந்த் யோசிப்பது தெரிந்தது.

"சாத்தியம் குறைவு டி.ஐ.ஜி."

"எதற்கு,"

"கடத்திச் செல்லப்படுவதற்கு."

"ஏன்?"

"பொலிஸ் காவல் பலமாய் இருக்க அத்தனை துணிச்சலாய்..."

இடையில் புகுந்து மறித்து,

"எதிரிகளை குறைத்து மதிப்பிடுவது தான் தோல்வியின் முதல் அத்தியாயம் இன்ஸ்பெக்டர். தன் வலி என்ன, மாற்றான் வலி என்ன என்று அறியாதவன் போருக்கு தகுதியற்றவன்."

டி.ஐ.ஜி சீற மறுமுனையில் அரவிந்த் மௌனம் காத்தார். மீண்டும் டி.ஐ.ஜியின் குரல் சூடுமாறாமல்,

"எங்களைப்பற்றி நாங்கள் அதிகம் நினைத்துக்கொள்கிறோம். ஆனால் அடுத்தவர் எங்களைப் பற்றி அதிகம் நினைக்கக் கூடியதாய் நாம் நடக்க கற்க வில்லை இன்ஸ்பெக்டர்."

"மன்னித்துக்கொள்ளுங்கள் டி.ஐ.ஜி. தவறு நம் பக்கம்தான்."

"யார் அங்கு காவலுக்கு பொறுப்பாக இருந்தது?"

"இன்ஸ்பெக்டர் டேவிட்."

"முதல் வேலையாக அந்த புத்திசாலியை சஸ்பென்ட் செய்யவேண்டும். ரம்யாவை பற்றி பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்து அலேட் பண்ணுங்கள். நீங்களும் அடிக்கடி என்னோடு தொடர்பில் இருங்கள். ஓ.கே."

"ஓ.கே.சேர்."

■

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ், ரம்யா என்ற பெயரைக் கேட்டதும் உள்ளே ஒரு நொடி அதிர்ந்தான்.

எனினும் தான் கேள்விப்பட்ட ரம்யாவாக இருக்காது. அவள்தான் ஆஸ்பத்திரியில் இருக்கிறாளே. அபாய கட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்களே என்று நினைத்தான். எனவே இவள் வேறு ரம்யா என்று முடிவு செய்தான்.

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் புத்திசாலிதான். அந்தப் புத்திசாலியையும் ரம்யாவின் அழகு தடுமாறவைத்தது. அறிவை ஆசை மடக்கிப் போட்டது. சந்தேகப்பட்டு அழகான பெண்ணின் சமீபத்தை இழக்க விரும்பாத மனது கட்டறுத்த மாடுபோல் பாய்ந்தது.

ரம்யா அவன் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

நளினமாய் தலை திருப்பி முகத்தில் ஆளை வளைத்து கட்டிப்போடும் புன்னகை காட்டி,

"மிஸ் கரோலின் தான் என்னை இங்கு அனுப்பினாள்."

ரம்யாவின் மார்புகளை மயக்கமாய் பார்த்துக்கொண்டு,

"கரோலின் அனுப்பினாளா? அவள் ஏன் வரவில்லை?"

அவள் வராமல் இப்படியொரு தேவதையை இங்கு அனுப்பியதும் நல்லதுதான். இவள் அறிமுகம் அபூர்வம். என்று மனதில் நினைத்துக்கொண்டான்.

"வருத்தங்கள் சொல்லி வைத்துவிட்டு வருவதில்லை மிஸ்டர் ஜேம்ஸ்."

"வருத்தமா?"

"யெஸ். நெஞ்சு வலி. இப்போது ஓரளவு பரவாயில்லை. உங்களை அழைத்துவரச் சென்னாள்."

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் யோசித்தான். ஸ்கொச் விஸ்கியை கொஞ்சம் ருசி பார்த்தான். பின் ரம்யாவை பார்த்தான். ரம்யா புன்னகைக்க தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தன் கரம் நீட்டி அவள் தொடையில் தொட்டான். ரம்யா தடுக்காது இருக்க கொஞ்சம் சுதந்திரம் எடுத்துக்கொண்டான்.

"போகலாமா ஜேம்ஸ்."

என்றாள்.

"நீ அழைத்தால் நான் எங்கும் வருவேன் பெண்ணே. நரகத்திற்கு கூட."

என்றான் ரம்யாவின் உயர்ந்து எழுந்து துடிக்கும் மார்புகளை பார்த்தபடி.

ஸ்கொச் வீஸ்கியை சுத்தமாக காலி செய்துவிட்டு, ரம்யாவின் தோளில் தொட்டு

"போகலாம் டியர்."

ரம்யா எழுந்தாள். இறுக்கமான ஜீன்ஸ் பின்னழகுகளை பிரபலப்படுத்த ஜேம்ஸ் தடுமாறினான். அவசரப்படக்கூடாது. காரில் போகும்போது இவளை கவனித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டான். விஸ்கியின் உபயத்தில் தள்ளாடி எழுந்தான்.

ரம்யா தடுமாறியவனைத் தாங்கிக் கொண்டாள். தாங்கியபோது தன் மீது பட்ட அழகுகளால் ஸ்கொச் விஸ்கியின் போதையைவிட அதிக போதை உள்ளே ஏறுவதாய் உணர்ந்தான்.

இன்னும் தாங்கட்டும் என்று மேலும் தடுமாற ரம்யாவுக்கு அவன் புத்தி புரிந்தது. பலவீனம் தெரிந்தது. அவன் இடுப்பில் கைவைத்து தன்னோடு இணைத்து அழைத்துச்செல்ல சர்வர் வந்து பில் நீட்டினான். தூய ஆங்கிலத்தில் மன்னிப்புக் கேட்டு பொக்கற்றில் இருந்து கறுப்புநிற பேர்ஸ் எடுத்து இரண்டு பச்சை நோட்டுக்களை நீட்டினான். சர்வர் ரம்யாவைப் பார்த்து சிரித்து, விஷ் பண்ணி விலகினான்.

வெளியே இளம் சிவப்பு நிறத்தில் கார் காத்திருந்தது. றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் சாவி எடுக்க, ரம்யா தன்னிடம் தருமாறு கைநீட்டினாள்.

"ரைவிங் தெரியுமா டியர்?"

"பார்க்கத்தானே போகிறீர்கள் மிஸ்டர் ஜேம்ஸ்." என்று சொல்லி சாவி வாங்கி கதவு திறந்து அவனை முன்சீற்றில் இருக்கவைத்து ரைவிங் சீற்றில் வந்து அமர்ந்தாள்.

பார்க்கிங் வாட்ச்மேன் "குட்நைட்" மேடம் என்று முகம் எல்லாம் பல்லானான். அது என்னையும் கவனி என்று அர்த்தம். புரிந்து பத்துரூபாய் தாள் நீட்ட உலகத்து நன்றி எல்லாம் ஒட்டுமொத்தமாக முகத்தில் காட்டி சல்யூட் ஒன்று தந்தான்.

வாகன நெரிசலில் புகுந்து தெகிவளை வரை வாகன நெரிசலில் மித வேகத்தில் சென்று, பின்னர் உச்ச வேகத்தில் விரைந்தது கார்.

இலாவகமாய் ரம்யா காரைச் செலுத்த றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் அவள் மார்புகள் குலுங்குவதை இரசித்தான்.

"உன்னைப் பற்றி நீ சொல்லவே இல்லையே?"

என்றபடி அவளையே பார்த்தான்.

"முதலில் உங்களைப்பற்றிச் சொல்லுங்கள் மிஸ்டர் ஜேம்ஸ்."

"என்னைப்பற்றியா?"

"என்னைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?"

ரம்யா அவனை திரும்பிப்பார்த்துச் சிரித்தாள். பின் தெருவில் பார்வை செலுத்திக்கொண்டு,

"ஏன் சொல்லமுடியாது மிஸ்டர்? சர்வதேச மாபியா கொள்ளை மற்றும் சதிக்கூட்டத்தின் முக்கியமான நபர் நீங்கள். உங்களைப்பற்றிச் சொல்ல எத்தனை விஷயங்கள் இருக்கும்."

அவன் திகைத்து தடுமாற, ரம்யா அதை கடைக்கண்ணால் கவனித்தாள்.

றொபேட் ஜேம்ஸ் பீரிசுக்கு இப்போது போதை போன இடம் தெரியவில்லை. ஒருவேளை கரோலின் சொல்லியிருப்பாளோ? யாரிடமும் சொல்லக்கூடாத இரகசியம் என்னும் விதியை அவள் எப்படி மீறியிருக்கமுடியும்? யார் இவள்? ஒருவேளை அந்த ரம்யாதானோ? கேள்விக்கு மேல் கேள்விகள் உள்ளே ஓட்டப்பந்தயம். நடத்த, முதன் முதலாக ரம்யாவை சந்தேகப் பார்வையால் நோக்கினான்.

"யார் நீ?"

பதில் சொல்லாமல் அவனை பார்த்துச் சிரித்து கண் சிமிட்டினாள்.

"காரை நிறுத்து."

"எதற்கு?"

"உன்னோடு பேச வேண்டும்."

"போய்க்கொண்டே பேசலாமே. கரோலின் அங்கு காத்திருப்பாள்."

அவனுக்குள் கோபம் துள்ள,

"இப்போது நிறுத்தப்போகிறாயா அல்லது நிறுத்த வைக்கட்டுமா?"

ரம்யா வாய்விட்டுச் சிரித்தாள். சிரிப்பில் துணிச்சல் தெரிந்தது."உன்னால் என்ன செய்ய முடியும்?" என்ற தொனி இருந்தது.

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் ஒரு முடிவோடு தன் சட்டை விலக்கி, இடுப்பில் தன் பிஸ்டலைத் தேடினான்.

"நோ யூஸ்."

சொல்லிக்கொண்டே காரின் வேகம் குறைத்து, ஓரமாக்கி நிறுத்தினாள்.



"சரியாய் பாருங்கள் மிஸ்டர் ஜேம்ஸ். இதுதானே உங்கள் பிஸ்டல்."

விழி உயர்த்தி அழகான இதழ்களில் புன்னகை நிரப்பியபடி கேட்க, ஜேம்ஸ் கோழிக்குஞ்சுபோல் ஒடுங்கினான்.

"பயப்படாதே ஜேம்ஸ். உன் பிரிய கரோலினா தன் விடுதியில் பத்திரமாய் கட்டப்பட்டுக்கிடக்கிறாள். அவள் மூலம்தகவல் பெற்று நீ எங்கேயிருப்பாய் என்று அறிந்து, உன்னை சந்தேகம் வராமல் அழைத்துவந்து உடனே சுட்டுவிட்டால் இதுவரை செய்த முயற்சி எல்லாம் என்னாவது? அதனால் சுடமாட்டேன். ஆனால் என் கேள்விகளுக்கு நீ அரிச்சந்திரன் மாதிரி உண்மை பேசாவிட்டால் சுடாமல் விடமாட்டேன்."

சொல்லி நிறுத்தி முகத்தில் கடுமை காட்டினாள்.

"ஓ.கே.சுடாதே. உனக்கு என்ன தெரியவேண்டும்?"

"உண்மைகள்."

"எந்த உண்மைகள்?"

சொன்னாள்.

கேள்விகள் வீசினாள். எந்த நேரத்திலும் அவள் சுடலாம் என்று பயந்து அவனும் பதில் சொன்னான்.

■

ரேப் ரெக்கோடர் பேசத்தொடங்கியது. றொபேட் ஜேம்ஸ் பீரிஸின் குரல் ரெக்கோடர் வழியே வெளியே கேட்டது. சுத்தமான ஆங்கிலத்தில், தெளிவாய் குரல் ஒலித்தது.

"டியர் பிரண்ட்ஸ், உங்கள் முன்பாக இப்போது நின்றுகொண்டிருப்பது இன்ஸ்பெக்டர் குலாம்ஷா என்று பயந்தீர்களானால் நீங்கள் தலைச்சிறந்த முட்டாள்கள். டியர்-டாக்டர்! எங்களிடம் உள்ள பிளாஸ்ரிக் சேர்ஜரி மூலம் முகத்தை மாற்றும் திறமையுள்ளவர் நீங்கள் மட்டுமே என்று நினைத்தால் அதுவும் அளவுக்கு மீறிய தற்பெருமையான மடத்தனம்."

நந்தகோபாலின் முகம் இருண்டது. லால் ரெக்கோடர் பேசுவதை உன்னிப்பாய் கவனித்துக்கொண்டிருந்தான். குலாம்ஷா அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"அதனால் உங்கள் முட்டாள்தனங்களையும், தற்பெருமைகளையும் மூட்டைகட்டி ஒரு குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு இப்போது குலாம்ஷா சொல்வது போல் செய்யுங்கள். அவர் உங்கள் நண்பர். இன்னொரு விசயம் நண்பர்களே! உங்களால் முடிக்க முடியாத கிரைம்புலி குலாம்ஷாவை நானே நேரில் கவனித்து, எம்மிடத்திற்கு அழைத்துவந்து இறுதி அஞ்சலி செலுத்தி விட்டேன்."

ரெக்கோடர் வழியே சிரித்தான்.

நந்தகோபாலும், லாலும் இப்போது குலாம்ஷாவை நட்போடு பார்த்தனர். ரெக்கோடரை நிறுத்திவிட்டு இப்போது நம்புகிறீர்களா என்பது போலப் பார்த்தார் குலாம்ஷா.

"என்ன, இப்போது நாம் கைகுலுக்கிக் கொள்ளலாம் அல்லவா?"

இருவரும் ஒன்றாய் எழுந்து கரம் நீட்ட பற்றிக்குலுக்கினார்.

"அடுத்தது என்ன...உங்களை எப்படி அழைப்பது மிஸ்டர்.."

லால் கேட்க, "குலாம்ஷா என்றே அழையுங்கள். வேசம் போட்டால் பொருத்தமாய் நடிக்கவும் வேண்டும்."

"நாய் வேசம் போட்டால் குரைக்கத் தெரிய வேண்டும். அது முக்கியம்"

என்று சொல்லி நந்தகோபால் உரத்துச் சிரிக்க, லாலும், ஷாவும் தம் பங்குக்கு சேர்ந்து சிரித்தனர்.

"ஓ.கே. அடுத்தது என்னவென்று கேட்டீர்கள் அல்லவா லால்? நாம் நேராக மேலிடத்தின் இரகசிய இடத்திற்கு செல்லவேண்டும். டாக்டருக்கு அந்த இடம் தெரியும் என்பதால் லாலுடன் அங்கு செல்ல வேண்டும்."

"ஏன் நீங்கள்...?"

"உங்களோடு வரப்போவதில்லை. வேறு ஒரு வேலை இருக்கிறது. முதலில் நீங்கள் தப்பிக்கொள்ள வேண்டும்."

"நாங்கள் தப்பினால் உங்கள் மீது சந்தேகம் வராதா குலாம்ஷா?"

"வராது. ஏன் என்றால் நீங்கள் இருவரும் என்னைத் தாக்கிவிட்டு, கட்டிப்போட்டுவிட்டு தப்பிக்கப் போகிறீர்கள்."

புரிந்து இருவரும் தலையாட்ட, "நீங்கள் பின்புறமாய் சென்றால் அங்கு ஒரு நீல நிற வான் ஒன்று காத்திருக்கும். சாரதி புதியவன். அதனால் டாக்டரே வழி காட்டவேண்டும். அங்கு போன பின்னர் மீண்டும் நாம் சந்திக்கலாம்."

கட்டை விரல் உயர்த்திக் காட்டிவிட்டு,

"என்னைக் கட்டிப் போடுங்கள் லால்."

கட்டிப்போட்டான். நந்தகோபாலின் பிரத்தியேக அறையின் பின்புறவழியாக இருவரும் வெளியேறிச்செல்ல நீலவான் காத்திருந்தது.

நந்தகோபால் முன் சீற்றில் ஏறிக் கொண்டார். லால் பின்கதவு திறந்து ஏறிக்கொண்டான்.

நீலவான் வேகம் கொண்டு கிளம்பிச் செல்ல, அதுவரை மறைவில் நின்றுகொண்டிருந்த கறுப்புக்காரில் ஓடிவந்து ஏறிக்கொண்டார் குலாம்ஷா.

நீலவானின் பின்னே சந்தேகம் வராத தூரத்தில் தொடர்ந்து கொண்டிருந்தது கறுப்புக்கார்.

குலாம்ஷா தன் பிஸ்டலை எடுத்து சரிபார்த்துக்கொண்டார்.

உள்ளே பின் சீற்றில் இரண்டுபேர் இருந்தார்கள். கடும்பச்சை நிற யூனிபோர்மில் இருந்தார்கள். ஏ.கே. 47 கரங்களில் தயாராய் இருக்க, குலாம்ஷாவின் கட்டளைக்காக காத்திருந்தார்கள்.

காரின் உள்ளே இருந்த வோக்கிடோக்கி சத்தம் போட்டது.

எடுத்து "ஷா ஹியர்... ஓவர்"

எதிர்முனையில் டி.ஐ.ஜி. டென்சிலின் குரல் கேட்டது.

"தொடர்பில்லாமல் செயற்படுவது பெரிய தவறு ஷா."




"தொடர்புகொள்ளக்கூடிய...."

"சூழல் இல்லை என்று பொய்சொல்ல வேண்டாம் ஷா. ஏற்கனவே ஐ.ஜி.படு கோபத்தில் இருக்கிறார்."

"தெரியும்."

"எப்படி?"

"வழக்கம்தானே. மயிலே மயிலே இறகுபோடு என்று கேட்டால் மயிலே போடாது. இவர்கள் நரிகள். கேட்டுப்பெற முடியுமா? அதுதான்!!"

"வேட்டுவைக்கிறீர்களாக்கும். இப்போது எந்தளவில் இருக்கிறது?"

"கோட்டையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்."

"உதவி தேவையா?"

"தேவை எனில் அறிவிக்கிறேன் டி.ஐ.ஜி."

"விபரீத விளையாட்டு வேண்டாம். ரிஸ்க் எடுக்காமல் நிலமையை ஆராய்ந்து முடிவுகளை செய்யவேண்டும்."

"ஓ.கே. டி.ஐ.ஜி. ஓவர்."

காத்திருக்கும் அபாயம் புரியாமல் நீலவானின் பின்னே விரைந்து கொண்டிருந்தது கறுப்புக்கார்.

(அடுத்தவாரம் நிறைவுபெறும்)

**முரசு 38ல் புதிய தொடர்!**

**-இளமை துள்ளும் இனிய நடையில்-**

**ரசிகன் எழுதும்**

**கொலை விழும் நேரம்**

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஆ.சிவபாலன்
முகவரி: 534, காலி வீதி, கொழும்பு-3.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள், மற்றும் புகைப்படம் எடுத்தல்.



பெயர்: செல்வி.தம்பிராசா கலைச்செல்வி.
வயது: 22
முகவரி: விபுலானந்த வீதி, புதுக் குடியிருப்பு, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: எம்.எஸ்.ஹாசீம்டீன்
வயது: 24
முகவரி: AL JAMMAZ BUILDING CENTRE, P.O.BOX. 7014, RIYADH-11462. K.S.A.
பொழுதுபோக்கு: உதைபந்து மற்றும் கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எஸ். றபீக்
முகவரி: 124 A, மாவடிவீதி, பெரிய நீலாவணை-3, கல்முனை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை படித்தல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: நிரஞ்சன்
வயது: 20
முகவரி: 416/12, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு-5.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எஸ். எம். ஜுனைட்
வயது: 20
முகவரி: 44, தேஸ்டன் வீதி, கொழும்பு-3.
பொழுதுபோக்கு: கவிதை, கட்டுரை வரைதல்.

பெயர்: த. குமுதா
வயது: 23
முகவரி: சேனைக்குடியிருப்பு-1 கல்முனை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்:செல்வி. எஸ். சபியா அலி
முகவரி: 76/8, பாடசாலை வீதி, தொட்டவத்தை, பாணந்துறை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

சிறுகதை

# காதல் மயக்கம்

என். உதயமாரீ.



சந்துருவிற்கு புரியவில்லை. இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் விளையாட்டாய் நினைத்தது இப்படி விபரீதத்தில் கொண்டு விடுமென்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

'தரங்களா' என்ற பெயரைப் போலவே அவளும் அழகாய்த்தானிருப்பாள். பார்ப்பவர்க்கு உடனே கிள்ளிப் பார்க்கத் தோன்றும் அவளது கன்னங்கள்.

அவள் சிரிக்கும் போது தெரியும் தெத்துப்பல் கூட அவளுக்கு அழகு சேர்த்துக்கொண்டுதானிருந்தது.

சந்துரு வேலை பார்க்கும் அதே ஷொப்பிங் கொம்பிளக்ஸில் சந்துருவினது கடைக்கு அடுத்ததாகவுள்ள கடையில்தான் அவளும் வேலை பார்த்தாள்.

ஆரம்பத்தில் சந்துருவிற்கு அவள் மீது எந்தவித ஈடுபாடுமே இருக்கவில்லை.

'அம்மா பிள்ளை'யாகவே வளர்ந்த படியால் சந்துரு அமைதியான சுபாவம் கொண்டவன். எவருடனுமே சட்டென்று பேசிவிடமாட்டான். தரங்கா அவனது பக்கத்துக்கடைதான் என்றாலும் அவன் இதுவரை ஒருவார்த்தை கூட அவளுடன் பேசியதில்லை. சந்துருவின் இந்தப் போக்கை மாற்ற நினைத்த அவனுடன் கூட வேலை பார்த்த நண்பர்கள்,

"சந்துரு உன்னை பக்கத்துக்கடை பெண் சைட் அடிக்கிறாளடா... நீ போய் வரும்போதெல்லாம் அவள் உன்னையே தான் பார்த்துக்கொண்டிருக்கிறாள்...." என்று கூறியபோது ஆரம்பத்தில் சந்துருவால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஊரில் உள்ள போது படிப்பில் மகா கெட்டி, விளையாட்டில் கூட கெட்டியாய் பாடசாலையில் வலம் வந்தபோது தன்னை திரும்பியும் பார்க்காத அந்த ஒரு பெண்... அவன் காதல் கடிதம் கொடுத்த போது, அதை அவன் கண் முன்னேயே சுக்கல் சுக்கலாக கிழித்துப் போட்ட மாலதி.

இப்படியிருக்க என்னைப்பற்றி எதுவுமே அறியாத ஒருத்தி என்னைக் காதலிப்பதா...? சந்துருவால் நம்ப முடியாமலிருந்தது. என்றாலும் மனதில் ஒரு ஆசை இருக்கத்தான் செய்தது. எனது ஸ்மார்ட்னெஸ்சும், உயரமும் ஒருவேளை இவளுக்குப் பிடித்திருக்குமோ...? எனது நண்பர்கள் கூறியதுபோல் இவள் என்னைப் பார்க்கிறாளா...? சந்துருவிற்கு தோன்றிய சந்தேகத்திலும் ஆவலிலும் 'தவறு' என்று அறியாமல் அந்தத் தவறை செய்யத் தொடங்கினான்.

சந்துருவும் அவளைக் கடந்து போகும்போது ஓரக்கண்ணால் அவள் தன்னைப் பார்க்கிறாளா என்று ஆராய ஆரம்பித்தான்.

இப்படித்தான் சந்துருவும் தரங்காவைப் பார்க்க ஆரம்பித்தான். அதற்கேற்றால் போல் அவனது நண்பர்களும் அவனை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நாளடைவில் சந்துருவிற்கு அது ஒரு வேடிக்கை விளையாட்டாக போய்விட்டது.

அவனும் வேண்டுமென்றே தரங்காவின் பார்வையில் படும்படியாய் நடந்துகொண்டான். அவனுக்கு இது ஒரு நல்ல பொழுதுபோக்காய் போயிற்று. ஆனால் சந்துரு ஒருநாளும் அவளுடன் பேச முயன்றதும் இல்லை, எண்ணியதுமில்லை. அவளும் அப்படித்தான். பார்த்துக்கொள்வது மட்டும்தான்.

சந்துரு இதை சீரியஸாக நினைக்காததற்கு முக்கிய காரணமிருந்தது. ஏனெனில் அவள் வேறு இனம். அதுதான் ஒருபோதும் அவன் தரங்காவைத் தன் காதலியாய் கற்பனை செய்துகூட பார்ப்பதில்லை.

இப்படியிருக்கையில் திடீரென்று ஒரு நாள் அவள் கேட்டுவிட்டாள்.

"எங்கள் வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்க்கத் துவங்கிவிட்டார்கள். நீங்கள் எப்போது வீட்டுக்கு வந்து என்னைப் பெண் கேட்கப் போறீர்கள்?" என்று இதைக் கேட்டதும் சந்துரு அதிர்ந்து தான் போனான். அவனுக்கு அவளது கேள்வியே பெரிய அதிர்ச்சியாயிருந்தது. அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

"இன்னும் நீங்கள் மௌனமாக விருந்தால் என்னை வேறு ஒருவருக்கு கட்டி வைத்துவிடுவார்கள். பிறகு நான் உயிரோடு இருக்கமாட்டேன்."

அவளது இந்த வார்த்தைகள் சந்துருவிற்கு வேதனையைக் கொடுத்தது. இன்னும் அவன் தாமதித்தால் அது விபரீதமாகிவிடுமென்று நினைத்த சந்துரு, தன் மனதில் அவளைப் பற்றி அப்படியொரு எண்ணமும் இல்லை என்றும், விளையாட்டாய்த்தான் இவ்வளவு நாளும் அவளைப் பார்த்தது என்ற உண்மையைக் கூறினான்.

கண்களிலிருந்து கண்ணீர் வருமென்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. "ஐம் ஸாரி...ஐ ஆம் வெரி ஸாரி.." அவசரமாகக் கூறினான். அவள் ஒன்றுமே பேசவில்லை. ஆழமாக அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு சென்றுவிட்டாள். ஆனால் அந்தப் பார்வையில் "என்னை ஏமாற்றிவிட்டாயே. நான் உனக்கு என்ன தவறு செய்தேன்." என்ற கேள்வியும் வருத்தமுமிருந்தது. சந்துருவால் நேரிடையாக அவள் கேள்விக்கு பதில் சொல்ல முடியாவிட்டாலும், உள் மனதில் பேசிக் கொண்டான்.

'நானும் நீயும் எப்படி இணைய முடியும்....?ஒரு போதும் முடியாதே...

'எண்பத்தி மூன்றாம் ஆண்டு ஜுலை மாதம் ஏற்பட்ட சம்பவம் இன்னும் எங்கள் வீட்டில் அனைவரது மனதிலும் ரணமாய் மாறாமல் இருக்கின்றதே.

'அன்று எங்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்றும் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒன்றே. தினமும் என் தாயை வெள்ளைப் புடவையும், குங்குமமில்லா நெற்றியுமாகப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் படும் வேதனை....

'சரி, நான்தான் அதை மறந்து உன்னை ஏற்றுக்கொண்டாலும், என் தாயால் உன்னைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்ளத் தான் முடியுமா.....?

'அப்படியே தான் நடந்தாலும் என்னையும் உன்னையும் தான் இந்த சமூகம் நிம்மதியாய் வாழ விடுமா...?

'என்று இந்த நாட்டில் 'இனப் பிரச்சனை' என்ற சொல் எவர் வாயிலுமிருந்தும் உச்சரிக்கப்படாமலிருக்கின்றதோ அன்று தான் நாங்கள் இருவரும் இணையலாம்..... அந்தப்பாக்கியம் எனக்கும் உனக்கும் தான் கிடைக்காட்டிலும், இனிவரும் சந்ததியினருக்காவது கிடைக்கட்டும்.....'

அதற்குப் பின் ஒரு வாரமாகியும் தரங்கா வேலைக்கு வரவில்லை. சில நாட்களின் பின் சந்துருவிற்கு திருமண அழைப்பிதழ் ஒன்று வந்திருந்தது. அது கூடவே ஒரு சின்னத் துண்டுக் காகிதம்.

"இனிமேலும் என்னைத் தண்டித்தது போல, யாரோ செய்த தவறுக்கு யாரையோ தண்டிக்காதீர்கள்-நன்றி" என்று அதில் எழுதியிருந்தது. சந்துருவின் கண்கள் அதை வாசித்தபோது கலங்கித்தான் போய்விட்டது. தன்னுடைய தவறை நினைத்து கவலைப் பட்டான். இனிமேல் எந்தப் பெண்ணையும் விளையாட்டாய்த்தானும் பார்ப்பதில்லை என்று உறுதி செய்துகொண்டு, கண்டிப்பாய் தரங்காவின் திருமணத்திற்கு போக வேண்டுமென்று நினைத்துக்கொண்டான்.

(யாவும் கற்பனை)



# சிரிப்பூ - ஷர்மிளா இஸ்மாயில்

"கத்தரித்த கடி ஜோக்ஸ்"களை வாசித்து தனியே சிரித்துக்கொண்டிருந்தேன். "என்னடியம்மா சிரிப்பு?" என்ற கேள்விக்கணையுடன் பாட்டி பக்கத்து நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டார். "நல்ல ஜோக்கொண்ணு பாட்டி" பாட்டி என்ன ஜோக் என்று என்னைப் பார்க்க உரக்க வாசித்து உரத்துச் சிரித்தேன். ஜோக் விளங்கியதோ இல்லையோ "என்னடியம்மா இப்படி சத்தம் போட்டு சிரிக்கறே? பொம்பள புள்ள நீ. கொஞ்சம் அடக்கமா இருக்கத்தெரியணும். நாளைக்கு இன்னொரு வீட்ல போய் இருக்கப் போறவ இல்லியா?" பாட்டி "லெக்சர்" அடிக்கத் தொடங்கியது கண்டு எரிச்சல் மில்லி மீற்றர் அளவாவது வரவில்லை. மாறாக உரக்கச் சிரிக்க வேண்டும் போல் தோன்றியது.

மீண்டும் சிரித்தேன். "என்ன பாட்டி இது? எங்க வீட்டுல இருந்து தானே சிரிக்கறேன். நடு ரோட்ல இல்லியே. அவனவனுக்கு அவனவன் வீடுதான் மாளிகைன்னு ஒரு பழமொழி இருக்கு. (ஆங்கிலப் பழமொழி ஆகையால் பாட்டிக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. தமிழ் பழமொழின்னாலே பிச்சு உதறிடுவார். அதனால் வேற்று மொழி பழமொழிகளைப் பயன்படுத்தியே பாட்டியை மடக்குவது வழக்கம்.) எங்க வீட்ல எதுவும் செய்ய நமக்கு முழு உரிமையிருக்கு." என் அதிகப் பிரசங்கித்தனம் பாட்டியை 99பாகை பரனைட்டில் ஏற்றியிருக்க வேண்டும். முகத்தை ஆயிரம் கோணலாகச் சுருக்கி, வாய்க்குள்ளாக ஏதோ முணுமுணுத்தார். அலட்சியப்படுத்தி மீண்டும் ஜோக் வாசித்து சிரித்தேன்.

பாட்டி 'டொபிக்கை'மாற்றி விட்டார். "இப்போ உனக்கு எத்தனை வயசாகுது?" படு சீரியஸாகக் கேட்டார். ஏன் எனக் கேட்க வாயெடுத்து முடிவு மாற்றி நல்ல பிள்ளையாக "இருபத்தி - ஒண்ணு" சுருக்கமாய்ச் சொன்னேன். முகவாயில் கையைத் தாங்கிய பாட்டி பெருமூச்சொன்றை இழுத்து வெளிவிட்டார். "ம்ஹும்... இந்த வயசில நான் மூணு புள்ளைகளுக்குத் தாய். வீட்டு வேலையா, புள்ளைகளைப் பார்க்கிறதா. எப்படி பம்பரமாச் சுற்றி வேலை செய்வேன் தெரியுமா?" பாட்டி எங்கே வருகிறார் என்பது சட்டென புரிந்தது. வேளைக்கு வேளை சாப்பிட்டுட்டு கையில் ஒரு புத்தகமும், டி..வியும் ரேடியோவுமாக காலம் கழிப்பதைக் குத்திக்காட்டுகிறார். "உன்னையும் நாளைக்கு ஒருத்தன் கையில புடிச்சி குடுத்தா என்னடியம்மா பண்ணுவே? கைய அசைச்சு ஒரு வேலை செய்யவிடாம மகாராணியாட்டம் வளர்த்த உன் அம்மாவை சொல்லணும். ஒன்னச் சொல்லி குத்தமில்ல." பாத்ரூமில் குளித்துக்கொண்டிருந்த அம்மாவுக்கு தும்மல் போயிற்றோ தெரியவில்லை. இன்னும் சிரிப்பு வந்தது. மீண்டும் சிரித்தேன்.

"ஏன் பைத்தியம் மாதிரி சும்மா சிரிக்கிறே? பாட்டி சொல்றது கேட்டியா? புத்தி சொன்னா என்ன சிரிப்பு உனக்கு?" அதுவரை "தினமுரசின்" சில பக்கங்களை என்னிடம் கடன்வாங்கி அதில் மூழ்கியிருந்த அண்ணன் கடுகடுத்தான்.

தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தேன். என் நண்பியர் வட்டத்தில் "ரோஜா" எனும் செல்லப் பெயருள்ள அழகிய நண்பி மீது அண்ணாவுக்கு ஒரு கண். அது எனக்குத் தெரியும். "ரோஜாவுக்கு முள் மாதிரி கடுப்பாயிருக்கிறவங்களப் பிடிக்காது." உரத்து சொல்லிவிட்டு சிரித்தேன். சட்டென பேப்பரைச் சரித்து, என்னை முறைத்து "பைத்தியம் பைத்தியமே தான். சம்மந்தா சம்மந்தமில்லாம பேசுது. சிரிக்குது." தலையிலடித்து பாட்டியைப் பார்த்து அசடு வழிந்தான். மீண்டும் சிரித்தேன்.

வாசலில் போஸ்ட்மேன் அழைத்தான். நண்பியொருத்தி எழுதியிருந்தாள். அவளுக்குத் திருமணம் பேசி ஏற்பாடுகள் முடியும் தறுவாயில் உள்ளதாக அறிந்து சந்தோஷம் பூண்டு, அண்ணனை முறைத்து விட்டு அறையினுள் நுழைந்து மீதியை வாசித்தேன். வரச் சொல்லி எழுதியிருந்தாள். நண்பியர் வட்டத்தில் முதலாவது திருமணம். அவளைக் கேலி பண்ணி, குழப்பி எடுக்க மனம் ப்ரபரத்தது. ஆனாலும் உடனே போகமுடியவில்லை. இரண்டு கிழமைகளில் திருமணம். இன்விடேஷன் பிறகு வரும். நீ முதலில் வா என எழுதியிருந்தாள்.

மனம் பறந்தது. என்னால் பறந்து போகமுடியவில்லை. அம்மா தலைவலி என்று படுத்தவள் ஒரு கிழமைக்கு எழும்பவில்லை. பாட்டியின் உதவியுடன் நானே சமையல். அசையக் கூட அவகாசம் கிட்டவில்லை. அம்மா சுகமாகி எழுந்த பின் அண்ணனும், அப்பாவும் வயிற்றுக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்தது என் பொறுப்பல்ல. என் சமையலின் குறையுமல்ல என்பதை நான் கூறியும் யாரும் ஏற்கவில்லை.

கல்யாண நண்பிக்கு பதில் எழுதவுமில்லை. போகவுமில்லை. நிச்சயம் கோபித்திருப்பாள். ஒரு மாதிரியாக அவள் வீடு போய்ச் சேர்ந்தேன்.

ஆனால், ஒரு கல்யாண வீட்டி... "கலகல" எதுவுமில்லாது "கப்சிப்"பென்று இருக்கவே ஏதோ நெருடியது. வரவேற்றவள் முகத்தில் சிரிப்பு அலைகள் பரவியது. ஏற்பாடுகள் எங்கே? மூன்று நாள் கழித்து திருமண வீடாகப் போவது போன்று அறிகுறி இல்லையே? என் சிந்தனை ரேகையை உணர்ந்தவள் போல் சிரித்தாள்.

"மாப்பிள்ளை சாருக்கு ஏற்கனவே ஒரு காதலியாம். அவவை வேண்டாம்னு தான் அவரப் பெத்தவங்க என்னைப் பேசி முடிவெடுத்தாங்க. உறுதியான காதல் போலருக்கு. தன் பெற்றோர்களை கோபிச்சுட்டு பெண்ணைக் கூட்டிக்கிட்டு எங்கோ போயிட்டாராம். ஓடிப் போயாச்சு." இரு கைகளையும் விரித்து சிரித்து சிரித்துக் கூறினாள்.

நான் திகைத்திருந்தேன். "உனக்கு வருத்தமாயில்லையா?" மெதுவாய்க் கேட்டேன்.

"போடி. தலையோடு வந்தது ரிப்பனோடு போனது. (தலைப்பாகையில்லை) கல்யாணம் முடிஞ்சாப் பிறகு ஏதும் எசகுபிசகா நடந்திருந்தா...? இப்படிப் போனதே நல்லது." சொல்லி மீண்டும் சிரித்தாள். "ம். நல்ல காலம்தான்." நானும் சொல்லி சிரித்தேன்.

நிமிஷங்கள் மறைய எல்லாவற்றையும் மறந்து 'கலகல'வென ஏதோவெல்லாம் பேசித்தள்ளி, "கத்தரித்த கடி ஜோக்ஸை" கடித்து சிரித்து... நண்பியின் தாயார் வந்து எட்டிப்பார்த்தார். "இதுகளுக்கு பைத்தியம் தான்" என்று அவர் சொல்லாத வசனத்தை முகத்திலே படித்து மீண்டும் சிரித்தோம். சிரித்துக் கொண்டேயிருந்தோம்.

(இடுக்கண் வருங்கால் நகைக்க சொன்ன ஔவைக்கு எமது நன்றிகள்)


# "போங்கடா நீங்களும் உங்கள் அரசியலும்"

அவள்: நேற்று எங்கே போனீர்கள்?
அவன்: 'ராஜதுரை'யை சந்திக்கப் போனேன்.
அவள்: அவரிடம் என்ன கேட்டீர்கள்?
அவன்: 'மனதார வாழ்த்துங்களேன்' என்றேன்.
அவள்: என்ன சொன்னார்?
அவன்: 'வாழ்க வளர்க' என்றார்.
அவள்: என்னை நினைத்தீர்களா?
அவன்: 'நினைவெல்லாம் நீ' நினைக்காமல்?
அவள்: உண்மையாகவா?
அவன்: 'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை', நினைத்தது என் தப்பு
அவள்: என்மீது கோபமா?
அவன்: 'நீபாதி நான்பாதி' கோபப்பட முடியுமா?
அவள்: நான் அழகானவளா?
அவன்: 'ரோஜா' மாதிரி
அவள்: என் பேச்சு உங்களுக்கு பிடிக்குமா?



அவன்: 'கிளிப்பேச்சு' கேக்கவா வேணும்.
அவள்: நம் கல்யாணம் எப்பொழுது?
அவன்: 'வைகாசி பொறந்தாச்சி.' இனி யோசிப்போம்.
அவள்: நம் காதலைப்பற்றி உங்கள் வீட்டில் கூறினீர்களா?
அவன்: "ம்" 'மேளம் கொட்டு தாலிக்கட்டு' என்கிறார்கள்.
அவள்: நம் திருமணத்திற்கு பின் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?
அவன்: 'உழைப்பாளி'யாகப் போகிறேன்.
அவள்: நமக்கு பிறக்கும் பிள்ளைகளுக்கு என்ன பெயர் வைப்பீர்கள்?
அவன்: ஆணாயின் 'ஆதித்யன்' பெண்ணாயின் 'செம்பருத்தி'
அவள்: மௌனம்
அவன்: ஊரில் அரசியலைப்பற்றி என்ன பேசுகிறார்கள்?
அவள்: 'போங்கடா நீங்களும் உங்கள் அரசியலும்' என்கின்றார்கள்.
இருவரும்: ஹி.ஹி.ஹி.

தொகுப்பு: நாகசேனை பூங்கொடி இராமையா.



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

கணவன்: இந்த மாதிரி ஜாக்கெட் துணி எந்தக் கடையிலும் கிடைக்கவில்லை. எல்லாக் கடைகளையும் சுற்றிப் பார்த்துவிட்டேன்,
மனைவி: நல்லவேளை அதைத் தெரிந்து கொள்ளத்தான் உங்களை அனுப்பினேன். இனிமேல் இந்த மோஸ்தரை நான் பயமின்றிப் போட்டுக்கொள்ளலாம்.

•

- உங்ககூட நின்னு ஜெயிச்ச வேட்பாளர் வருத்தமாக இருக்கார், தோற்றுவிட்ட நீங்க சந்தோசமா இருக்கீங்களே! அது ஏங்க?
- தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றணுமேங்கிற கவலை எனக்கில்லை பாருங்க... அதான்.

•

மனைவி: கைச்செலவுக்குத்தான் காலையிலே பணம் குடுத்தேனே..
கணவன்: இப்பப கேக்கிறது கால் செலவுக்கு. செருப்பு வாங்கணும்.

•

தகப்பன்: பையனுக்குத் தூக்க மாத்திரை எதுவும் கொடுக்கணுமா டாக்டர்?
டாக்டர்: தேவையில்லை. பாடப் புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்க போதும்.

•

ஒருவர்: ஏன்டாப்பா, உனக்கும் உங்க அண்ணாவுக்கும் சண்டை வந்து பாகம் கூடப் பிரித்துக் கொண்டு விட்டீர்களாமே?
மற்றவர்: ஆமாம், எனக்கு நிலமும், அண்ணாவுக்கு வீடுமாகப் பிரித்துக் கொண்டோம்.
ஒருவர்: ரொக்கமாக இருந்ததே அந்தப் பணம் என்ன ஆயிற்று?
மற்றவர்: அதை ஏன் கேட்கிறீர்கள்? பணத்தைச் சட்டத்தரணிகள் பிரித்துக் கொண்டார்கள்.

•

www.padippakam.com



## சிறுகதை



# உயிர்களெல்லாம் தெய்வமன்றி....

அஸ்வதி

எனது மனதிற்குள் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. விடிந்தால் தீபாவளி புது உடுப்புப் போடலாம். அம்மாவின் கைபிடித்துக் கோயில் போகலாம். பட்டாசு சுடலாம். மத்தியானம் ஆட்டிறைச்சி...ச்சு... அதுதான் எங்கள் வீட்டில் கிடையாதே. வடை, பாயாசத்துடன் சாப்பாடு. பெருநாட்களில் அதுதான் வழமை. நாங்கள் ஒன்றும் முற்றுமுழுதான தாவரபட்ஷணிகள் அல்ல. ஆனால் தீபாவளியன்று எல்லா வீடுகளிலும் ஆட்டிறைச்சி இருக்கும். எங்கள் வீட்டில் மட்டும் மரக்கறி சாப்பாடு.

இந்தத் தீபாவளி வராமலே விட்டால் என்ன? எனக்குப் புது உடுப்பும் பட்டாசும் இல்லாமற் போகுமே தவிர தீபாவளிக்கு அடுத்த நாள் பாடசாலையில் அவமானப் படாமல் இருக்கலாம்.

"முந்தநாள் பின்னேரமே பெரியப்பா ஆட்டைக் கொண்டுவந்து எங்கடை வீட்டிலை கட்டிப்போட்டார். எனக்கு இரவிரவா நித்திரையே வரேல்லை. தீபாவளியிலண்டு முதல் வேலையா அப்பாவும் பெரியப்பாவும் இன்னும் கொஞ்சப் பேரும் சேந்து ஆடு வெட்டினவை. ஆட்டைக் குத்திக் கொலை செய்யும் வரையும் நான் கிட்டையே போகேல்லை. பிறகு நான்தான் எல்லா உதவியும் செய்தனான்."

"நேற்றுச் சாப்பிட்டது இண்டைக்கும் கைமணக்குது. அம்மா அவ்வளவு திறமாச் சமைப்பா."

"ரத்தம் சுண்டிச் சாப்பிட்டம். சாய்... அதைப்போலை திறம் சாப்பாடு நான் சாப்பிட்டதில்லை."

அரவிந்தன், முகுந்தன், மணிவண்ணன், ராதாகிருஷ்ணன் போல எனது சினேகிதர்கள் எல்லாம் இந்த மாதிரிப் பேசிக்கொள்வார்கள். நான் மட்டும் எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பேன். நாங்கள் கத்தரிக்காயைக் கட்டித் தூக்கி, கதறக் கதற வெட்டவா முடியும். அவர்கள் சொல்லச் சொல்ல எச்சில் வாயிலூறும். அவர்களுக்குத் தெரியாமலே விழுங்கிக் கொள்வேன்.

அன்று முழுக்க ஆடு பற்றிய கதையாகவே இருக்கும். ஒரு நாள் கூட ஆட்டிறைச்சி சாப்பிடாதவன் போல நான் மனதிற்குள் புகைந்து கொள்வேன்.

இருப்பினும் ஒவ்வொரு சனியும் எங்கள் வீட்டில் ஆடோ, கோழியோதான் சமைப்போம். தீபாவளி நாளைத்தான் ஏனோ கவனியாமல் விட்டு விடுகினம். இது பற்றிப் பப்பாவிடம் கட்டாயம் கேட்க வேணும்.

பக்கத்திலேயே படுத்திருக்கும் பப்பாவைத் திரும்பிப் பார்க்கிறேன். நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார். நானும் பப்பாவை இறுக்கிக் கட்டிப் பிடித்துக்கொண்டு தூங்கிவிடுகின்றேன்.

வெடிச்சத்தத்துடன் விடிகின்றது.

அம்மா சீயாக்காய் அவிக்கிறா போல மனம் காற்றில் வருகிறது.

வழமையை விட வித்தியாசமான எண்ணைக் குளியல்.

புதிய உடுப்புப் போட்டேன்.

கோயிலுக்குப் போனேன்.

பெரியம்மாவீடு, சித்தப்பா வீடு, புஸ்பா அன்ரி வீடு...நிறைய இடங்களுக்குப் போனேன். எங்களுடைய வீட்டுக்கும் உறவினர்கள் வந்தார்கள்.

மிகவும் சந்தோசமாக இருந்தது.

மத்தியான சாப்பாட்டு நேரம் இருந்த சந்தோசம் எல்லாம் எங்கோ பறந்துவிட்டது.

சாப்பாடு நன்றாகத்தானிருந்தது. மனம் தான் சஞ்சலமாயிருந்தது.

தீபாவளிக்கு அடுத்த நாள் ஆட்டைப் பற்றிப் பிரலாபிப்பதிலேயே முடிகிறது. வழமை போல் என்னிடம் மட்டும் மௌனம்.

இரவு பப்பாவின் இடது பக்கத்தில் படுத்துக்கொண்டு எனது இடது காலையும் கையையும் அவர்மேல்போடுகிறேன். அவருடைய நெஞ்சில் சுரண்டி "பப்பா, எல்லாற்றை வீட்டிலையும் தீபாவளியண்டிடைக்கு ஆட்டிறைச்சி சமைக்க நாங்கள் மட்டும் ஏன் பப்பா மரக்கறி சாப்பிடுறம்."

"ஏன் நாங்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் சாப்பிடுறம் தானே. அது போதாதே."

"போன வருஷம் தீபாவளி சனிக்கிழமை வந்தது. அந்தண்டு மரக்கறி தானே சாப்பிட்டனாங்கள்."

"உனக்குச் சொல்லி விளங்காது செட்டி. வளந்தாப்போலை விளங்கும்."

"இல்லையில்லை நான் விடமாட்டன். சொல்லுங்கோ. சொல்லுங்கோ.... நித்திரை கொள்ள விட மாட்டேன்."

"நாங்கள் எல்லாரும் மனிஷர். தெரிஞ்சோ தெரியாமலோ நிறையப் பிழைவிடுவம். நாங்கள் தெரியாமல் செய்யிற பாவத்தை எல்லாம் கடவுள் பொறுத்துக் கொள்ளுவார். அவர் உலகத்திலை உள்ள ஜீவராசிகள் எல்லாத்துக்கும் பொதுவானவர். நரகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்த நாள் தீபாவளி.

"அந்த அசுரன் செத்தாப்பிறகு உலகத்திலை உள்ள உயிரினம் எல்லாம் சந்தோசமா இருந்ததுகள், அந்தச் சந்தோசம் ஆட்டுக்கும் கோழிக்கும் மனிசருக்கும் மற்ற விலங்குகளுக்கும் பொதுவானது. அந்த ஆட்டை நாங்கள் வெட்டிச் சாப்பிடலாமோ. எங்கடை சந்தோசத்துக்காக இன்னொரு உயிரின்ர சந்தோசத்தைப் பறிக்கலாமோ. அதாலை தான்.."

"அப்ப மற்ற நாட்களிலை நாங்கள் மச்சம் சாப்பிடுறம்.

அது பாவமில்லையோ?"

"அது வந்து...அது வந்து..."

பப்பா தூங்கிப் போனார். எனக்கும் தூக்கம் வந்தது. தூங்கிவிட்டேன்.

இரவு பதில் சொல்லாது விடுபட்ட கேள்வியை மீண்டும் பப்பாவிடம் காலையில் கேட்டேன்.

ஜீவகாருண்யம்.... புலால் உண்ணாமை... என்று ஏதேதோ சொன்னார்.

புரியவில்லை.

பல தீபாவளிகள் உருண்டோடின.

நான் ஓரளவு படித்து முன்னேறி ஓரளவு உலகத்தைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வந்த போதுதான் எனக்குப் புரிந்தது.

நாளை தீபாவளி. புது உடுப்புப் போடலாம். கோயிலுக்குப் போகலாம். சிறுவர்கள் பட்டாசு வெடிப்பதைப் பார்க்கலாம். சின்னதாக இருந்தாலும் ஒரு நன்மை செய்யலாம். மனம் குதூகலித்தது.

"அம்மா லிஸ்டைத் தாருங்கோ. நான் போய் மரக்கறி வாங்கியாறன்."

---

அக்குறணை ஹரீரா அனஸ் சிறுகதை

# சிறகொடிந்த வண்ணத்துப் பூச்சி

மறக்கக்கூடிய முகமா அது? நினைவுகள் புடை சூழ படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் மலர்விழி. "சத்தியமாய் எனக்கு மதியழகன் வேண்டும். அவர் அன்பு வேண்டும். அவரின் கனிவான பேச்சு வேண்டும்." நினைவுப் பரணில் இருந்து ஒவ்வொரு துளியாய் அவளண்டை விழுந்து தெறித்த போது மலர்விழி விம்மி விம்மி அழுதாள். கடந்து போன அந்த காலை ஒன்பது மணி இன்னும் அவள் இதயத்தை பிறாண்டியது. சுபநேரம் என்று தீர்மானித்த வேளை மலர்விழியின் கழுத்தில் தாலி கட்டும் போது முழங்கிய கெட்டி மேளம் இன்னும் அவள் காதுகளில் கர்ண கடூரமாய் ஒலித்து ஒலித்து வேதனை செய்தது. அன்பான கணவன். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்தவனுக்கு என்ன நடந்தது?



"மலர்விழி நானும் வேலைக்குப் போக வேண்டும். நீயும் வருகிறாயா?" எவ்வளவு கனிவு. "ஓம் மதி அப்பிடியே உங்கடை ஸ்கூட்டரிலை என்னைக் கொண்டு போய் விட்டுடுங்கோ... அப்பிடியே அம்மா வீட்டிலை நான் இருக்கிறன். வரும் போது கூட்டிட்டு வாங்கோ." இது திருமணம் முடித்த பதினெட்டாவது நாள் காலை...

அதன் பின்னால் தன் வீட்டுக்கு வந்து தன்னையும் ஸ்கூட்டரில் அழைத்துக்கொண்டு சொந்த வீட்டிற்குப் போவதற்காய் தன்னுடைய ஆருயிர்க் கணவன் வருவான் வருவான் என்று இன்றுவரை ஆவலுடனும் ஆசையுடனும் கண்ணீர் கொண்ட கண்களுடன் காத்திருக்கிறாள் அந்தப் பேதை.

இவ்வாறே உருண்டோடிவிட்ட காலங்கள் ஒன்றா இரண்டா, ஆயிரத்துத் தொண்ணூற்றைந்து நாட்களின் இரவுகளும் பகல்களும்... அன்று கார்த்திகை மாதம் பதினோராம் திகதி- இதுதான் மதியழகனின் பிறந்தநாள். மதியழகன் ஒரு கவிஞனும்கூட.

ஒரு நாள் மதி-மலர் காதல் விவகாரம் மலர்விழியின் பெற்றோருக்குத் தெரியவர, மலர்விழியின் பெற்றோர் அவளை வெளியில் எங்கும் போக விடாமல் தடுத்து வைத்திருந்த வேளை தனது பிறந்த நாளன்று அவன் தனது டயறியின் பக்கத்தில் எழுதிவைத்த கவிதை நினைவுக்கு வர... ஓடிச்சென்று மதியழகனின் பீரோவைத் திறந்து அந்த பழைய டயறியில் பக்கங்களைத் தேடி தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பின் பிரிவுத்துயரில் அவன் எழுதிவைத்த அந்த உயிரோட்டமான வரிகளை உச்சரித்துப் படித்தாள். தேவல் வந்து இடையில் திக்கியது. விம்மி விம்மி படித்தாள்.

எங்கே என் தேவதையின்
வயல்நிலம்?
எங்கே என் தேவதையின்
அடிப்பாதை?
எங்கே என் தேவதையின்
வாசனை?
எங்கே என் தேவதையின்
மலர்ப்பதிவுகள்?

மீண்டும் மீண்டும் அவள் உதடுகள் அந்த வரிகளை முத்தமிட்டன. பின்னர் ஒருநாள் அவர்கள் சந்தித்த நேரம் அவள் மதியின் எழுத்துக்குக்கீழ் பதித்த பதிவுகள்....

"கரைகின்ற கண்மை
அது சொல்லும் உண்மை."

தன் அன்பானவனின் நினைவுகளைப் பசுமையாக்கியவளுக்கு அந்தக் கொடூரமும் நினைவுக்கு வந்தது...

வேலைக்கென்று போன மதியழகன் திரும்பி வராத நாளன்று இரவு விடிவிளக்கின் முன் விழித்திருந்தவளின் காதுகளுக்கு அந்தச் செய்தி பயங்கரத்தை உண்டுபண்ணியது.

"இண்டைக்கு றோட்டிலை போனவர்களை புடிச்சு அடிக்கினமாம். அதுமட்டுமில்லை ஏதேதோ விசாரணைக்கு எண்டும் கூட்டிக்கொண்டு போகினமாம்."

கலவரமடைந்த மலர்விழிக்கு தாய் கண்ணகை ஆறுதல் சொன்னாள்- சதாவும் அவளுக்கு மதியழகனின் சிந்தனைதான். கடைசியாக பக்கத்து வீட்டு குண்த்தார் வந்து இந்தச் செய்தியை சொன்னார். "புள்ளை மலர்விழி அப்பிடிக் கூட்டிக்கொண்டு போனவையிலை உன்ரை புருஷன் மதியழகனும் ஒரு ஆளாம்." இந்தச் செய்தியைக் கேட்டதும் மலர்விழி அனலில் பட்ட புழுவாய்த் துடித்துப் போனாள்.

"இறைவா! இதென்ன கோதாரி நிலமை. மனிசர் ஒருபக்கம் கஞ்சி தண்ணியில்லாமை செத்து போகுதுகள். அது ஒரு பக்கம் வருத்த, துன்பம் வந்து செத்துப் போகுதுகள்... அது போதாதெண்டு பைத்தியக் குணம் வேறை... கடவுளே! இப்படியுமெண்டால் சனம் எங்கை தாங்கும். இண்டைக்கு எங்கடை நிலமையள் எல்லாம் சீராகுறதுக்கு நீதான் கிருபை செய்ய வேணும்.."

•••

"மலர்விழி அங்கை என்ன தாயே செய்யுறாய்.... இஞ்சாலை வா புள்ள." அம்மா அடுக்களையில் இருந்து குரல் கொடுக்க நினைவு மீண்டு பின்னரும் அழுதாள். மகளுக்கருகில் வந்த கண்ணகை வாழாவெட்டியாய் - தன் அன்புக் கணவனை இனவாதத்திற்குப் பலி கொடுத்த உயிருக்குயிரான மகளை தன் மார்போடு இறுகக் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

இப்பிடி... இன்று எத்தனை மலர் விழிகளும்.... எத்தனை கண்ணகைகளும்... ஓயாமல் அழுதுகொண்டிருக்கிறார்கள்!

இவர்களின் கண்ணீரைத் துடைப்பது யார்?

ஒன்றே ஒன்றுதான்! அமைதியும், சகோதரத்துவமும், புரிந்துணர்வும் கொண்ட மனிதர்கள் தோன்றவேண்டும். அதன் பின்னாலாவது மலர்விழிகளும் கண்ணகைகளும் உருவாகாமல் இருப்பார்கள் என்று துணிந்து சொல்வதற்கு - அதுவரை-

**காலம் கிழித்த விதியின் கோடுகளில்**
**உட்கார்ந்த மனிதன் ஊனம் வடிக்கிறான்.**
**இன்னுமொரு காலம் வரும். இன்னுமொரு**
**மனிதன் பிறப்பான். மீண்டும் இறைவன்**
**விதியினை மாற்றி வேடிக்கை பார்ப்பான்.**
**மனிதன் இறப்பதுவும் பிறப்பதுவும் போல....**

---



மினிக்கதை

# சுந்தரி நீயும், சுந்தரன் யானும்....

-ரமேஷ் கண்ணன்-

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை 9 மணி என்பதை கடிகாரம் உறுதிப் படுத்தியது. வராந்தாவில் பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்த சுந்தருக்கு கடிகாரத்தின் ஓசை உள்ளூர உற்சாகத்தை ஏற்படுத்தியது. தன்பார்வையை வாசல் பக்கம் திருப்பிக்கொண்டான்.

கமலம் வாசலில் நின்றபடி "என்னங்க... நான் சந்தைக்குப் போயிட்டு வாறன்." குரல் கொடுத்து நகர்கின்றாள்.

சுந்தருக்கு ஏகப்பட்ட சந்தோசம். பத்திரிகையை தூக்கி எறிந்தவன். எப்படி கண்ணாடி முன் வந்தானோ தெரியவில்லை. சுமார் கால்மணி நேரம் தன்னை கண்ணாடியில் அழகுபார்த்துக்கொண்டவன் மெல்ல நகர்ந்தான். என்னமோ தெரியவில்லை ஞாயிற்றுக்கிழமையென்றால் அவனுக்கு அப்படியொரு சந்தோசம்.

அவன் கால்கள் அடுக்களைப் பக்கம் முன்னேறின. அவன் பார்வைக்கு இப்போது வீட்டு வேலைக்காரி, வீட்டுக்காரியாகக் காட்சியளித்தாள். சுமார் 18 வயதிருக்கும். கொள்ளை அழகு. காமக் கணைகள் சுந்தரைச் சூடேற்றியது.

"சுந்தரி.." அவன் உச்சரிப்பில் ஒரு அழுத்தம். காமக் கொந்தளிப்பு வெளிப்படையாக புரிந்தது.

அவனை எதிர்பார்த்திருந்ததைப் போன்று சுந்தரியும், மோகனப் புன்னகையோடு "ஐயா" குரல்கொடுத்தாள். அவன் கண்களால் ஜாடைசெய்து தன் அறையை நோக்கிச் சென்றுவிட்டான். அவனைத் தொடர்ந்து சுந்தரியும் செல்கின்றாள்.

"சுந்தரி..கதவ சாத்திட்டு இப்படி வா... கிடைக்கிற இந்த கொஞ்ச நேரத்துக்குள்ள ஒன்ன நான் முழுமையா பாத்திடணும்..." அவன் வார்த்தைகள் சுந்தரியை சூடேற்றியது. கதவை தாழ்ப்பாளிட்டவள் தயங்கினாள். உள்ளூர வெட்கம் அவளுக்கு.

"என்ன சுந்தரி புதுப்பொண்ணுமாதிரி வெக்கப்படுற... எவ்வளவுதான் ஒன்ன பார்த்தாலும் என்ன திருப்திப்படுத்திக் கொள்ள முடியல்ல... நான் பாக்கிற ஒவ்வொரு தடவையும் நீ ரொம்ப அழகா இருக்க சுந்தரி..."

அவன் ஒவ்வொரு வார்த்தையும் சுந்தரிக்கு இதமாக இருந்தது. இப்போது அவன் மடியில் சுந்தரி சாய்ந்து கொண்டாள். சுந்தரின் கரங்கள் புதையல் தேடின. இடையிடையே சிணுங்கல் சத்தம்...

"ஐயா.... எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கு... இந்த விசயம் அம்மாவுக்குத் தெரிஞ்சா?"

"தெரிஞ்சா...," அவள் முடிக்கு முன் சுந்தர் குறுக்கிட்டான்.

"அம்மாவுக்குத் தெரிஞ்சா என்ன கொண்ணுடுவாங்க... ஒங்களவிட்டா எனக்கு யாருமில்ல...." அவள் வார்த்தைகளில் இருந்த நெருக்கம் சுந்தரை உசுப்பியது. இன்னும் இறுக அவளை அணைத்துக்கொண்டவன்,

"சுந்தரி...அவளுக்குப் போய் நீ ஏன் பயப்படுற. எல்லாத்துக்கும் நான் இருக்கன் என்டத மறந்திட்டியா..? இல்லாட்டி ஒன்ன கொன்னுட்டா மட்டும் நா உயிரோட இருந்திடுவன் எண்டு பாக்கிறியா...?

"சுந்தரி என்னையும் ஒன்னையும் ஏன் இப்படி பிரிச்சுப் பேசுர.... அவ எனக்கு பேருக்குத்தான் மனைவி... மத்தப்படி எல்லாம் நீதான்..."

"சபாஷ்.." இருவரையும் இடையில் வந்த அந்தக்குரல் நிலைதடுமாறச் செய்தது.

"சபாஷ் சுந்தர்.. சபாஷ்....நான் நினைச்சதவிட நீங்க ரொம்ப ...ரொம்ப முன்னேறிட்டீங்க...! அதிலையும் கடைசியா சொன்னீங்க பாருங்க அது ரொம்பவும் பொருத்தமா இருந்திச்சு....."

முதுகில் தட்டிக்கொடுத்தார் டைரக்டர் பாலச்சந்தர். ஆமாம் அந்தக் காட்சி "சுந்தரி நீயும் சுந்தரன் யானும்" என்னும் புதிய படத்துக்காக பதிவாகிக் கொண்டிருந்தது...

(யாவும் கற்பனையே)

# இலக்கிய நயம்

எழுவது ரசிகன்

"போய்த்தான் ஆக வேண்டுமா?"

மேகலாதேவியின் விழிகளில் கலக்கம் தெரிந்தது. குரலில் துயரம் தோய்ந்திருந்தது.

"போரிடுவதுதானே வீரனின் கடமை. முரசம் முழங்கும்போது காதல் சரசமே முக்கியம் என்று முடங்கிக்கிடப்பவன் கோழை."

வில்லவனின் குரலில் களம் செல்லும் உறுதி இரும்பாய் தெரிந்தது.

அவன் சொல்வதில் உள்ள நியாயம் மேகலாவுக்கும் புரிந்தது. போருக்கு அஞ்சாத அவன் வீரம் மேகலாவுக்கும் பிடித்திருந்தது. அந்த வீரமே வில்லவனைத் தன்னவன் ஆக்கும் காதல் வளர்க்க காரணமாக இருந்தது.

ஆனால், இப்போது பிரிவது சுமக்க முடியாத பாரமாய் நெஞ்சு முழுக்க சோகம் நிறைக்கிறது.

வீரத்தைக் காதலித்த மனது, இப்போது அந்த வீரமே தன்னிடமிருந்து இதய மன்னவனை எடுத்துச் சென்றுவிடுமோ என்று பயம்கொள்ளத் தொடங்கிவிட்டது.

பெண்ணுக்கு ஆணின் வீரம் பிடிக்கும். அன்போது கலந்த ஆற்றல் பிடிக்கும். அதே சமயம் அந்த வீரமும், அற்றலும் பிரிவுக்கு காரணமாய் அமையும்போது மனது துடிக்கும். ஓவென்று கூவி அழும்.

"என்ன மேகலா இதழ்களுக்கு மூடுவிழா நடத்திவிட்டாயா? உன் தேன் இதழ்களில் இருந்து தித்திக்கும் வார்த்தைகள் கேட்டால் தானே என் மனது மகிழ்ச்சி கொள்ளும்."

"அடுத்த தடவை போகலாம் அல்லவா?"

பிரிவை நினைத்தே பிய்ந்தழும் மனம் அதைப்பற்றியே பேசவும் வைக்கிறது.

வில்லவனுக்கு மேகலாவின் உள்ளச் சோகம் புரிந்தது.

அவள் முதுகை ஆதரவாய் வருடிக் கொடுத்தபடி, மாறாத அன்போடு பேசினான்.

"பார்த்தாயா மேகலா. நீ திடமானவள் என்று நினைத்தேன். தடுமாறுகிறாயே. எனக்கு மட்டும் பிரிவு பெரு மகிழ்ச்சி தரும் என்றா நினைக்கிறாய்."

"நம்ப மாட்டேன்."

"எதை."

"உங்களை. நீங்கள் சொல்வதை."

"ஏன்?"

கேட்டுக்கொண்டே அவள் முகம் தொட்டுத்திருப்பி நெற்றியின் மையத்தில் தன் உதடுகளை ஒற்றி எடுத்தான்.

"அன்பிருந்தால் பிரிய மனம் வருமோ?"



நேர்வந்து நிற்கும் போது காணும் சுகம் வருமோ. விழிகள் கலந்து நிலா வெளிச்சத்தில் அழகு முகம் பார்த்து அகம் மகிழும் சுவை வருமோ? வில்லவனுக்கும் மனது கனத்தது.

"புரியும். புரியும். ஆனால் இது ஒரு புதுவித அனுபவம். உள்ளத்தை வருத்தி உயிரை உருக்கி மீண்டும் சந்திக்கும் நாளுக்காய் வரம் கேட்டுத் தவம் இருக்கும் முனிவனைப் போல் காத்திருந்து...ஆம். மேகலா பிரிவுத் துயரும் நம் காதலின் வலிய உறுதிக்கு ஒரு சோதனைக் களம்தான்."

மேகலாவிடம் இருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

"இப்போது திருப்திதானே இந்த தேவ மங்கைக்கு?"

தோள்தொட்டு அணைத்தான். அவன் நெஞ்சில் முகம் புதைத்துக்கொண்டாள் மேகலா.

முகம் புதைத்து அவள் இருக்க, உச்சம்தலையில் முத்தமிட்டு கூந்தல் கோதி, அவள் முகம் தொட்டு தன் முகம் நோக்கி உயர்த்திப் பார்த்தான். பின் குனிந்து கொவ்வை பழங்களின் சுவை அறிய உதடுகளை கொடுத்தான்.

மேகலா விடுவித்துக்கொண்டு கேட்டாள்.

"அங்கே எப்படி இருக்கப் போகிறீர்களாம்?"

வில்லவன் மேகலாவின் விழிகளுக்குள் துள்ளும் மீன்களாய் துடித்த கருவிழிகளை பார்த்துக்கொண்டே பதில் சொன்னான்.

"திரும்பி வரும் வரை போதுமானதை இன்றே எடுத்துக்கொள்ளப் போகிறேன். மனம் என்னும் களஞ்சிய அறையில் அது இருக்கும். களஞ்சிய அறை காலியாகும் போது இந்த அழகுக் களஞ்சியத்தை நோக்கி ஓடி வருவேன்."

"அதை எடுத்துக்கொள்வது."

மைவிழிகள் படபடக்க தேன் இதழ்கள் வினா தொடுத்தன.

"இதையெல்லாம். இந்த எழில்களை எல்லாம்."

என்றபடி மேகலாவின் நெஞ்சில் உயர்ந்திருந்த இருமலைகளின் மையத்தில் முகம் புதைத்தான். பின் விலகி மலைகளில் உதடுகள் சுக யாத்திரை நடத்த மேகலா பிரிவுத் துயர் தரப்போகும் வேதனை பாதி, இப்போது வில்லவன் வழங்கும் இனிய சுகம் மீதியாய் உணர்ந்து தவித்தாள்.

தன்னவன் தழுவி மயங்க, அந்த சுகத்தில் திளைத்த மேகலா தடைபோடாமல் இருந்தாள். அந்த நேரத்தில் நாணம் காணாமல் போய்விட்டது. ஆசையோ மனதில் பாணங்களாய் பாய்ந்து துளைத்துப்போட்டது.

காதலர் இருவரும் களித்திருக்க நாம் இதற்கு திருவள்ளுவரிடம் ஒரு குறள் கேட்கலாமா? கேட்போம்.

**"நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்**
**பேணியார் பெட்ப செயின்."**

குறள்–1257, அதிகாரம்–126

## காணாமல் போன நாணம்!

"பிரிவென்று நீ ஏன் சொல்லுகிறாய். ஒருயிராய் மாறிய பின் உடல்கள் பிரிவது மட்டும் உண்மையான பிரிவல்ல மேகலா."

"உங்களைப் பார்க்க வேண்டும் போல் இருக்கும். பேசவேண்டும்போல் மனம் கிடந்து துடிக்கும். உங்களுக்கு மட்டும் தவிப்பும் இல்லை. துடிப்பும் இல்லை."

"போடி பைத்தியக்காரி. நீ வெளியே இருந்தால்தானே நான் துடிப்பதற்கு. எனக்குள் எடுத்து உன்னை வைத்திருக்கிறேன். பின் எப்படி பார்க்க முடியவில்லையே என்ற துடிப்பு வரும்.?"

மேகலாவை ஆறுதல்படுத்த வில்லவன் சொன்னதில் பாதி உண்மை. மீது பொய்.

நெஞ்சுக்குள் அவள் நினைவு நிறைந் திருந்தாலும், கொஞ்சும் கிளியாய், வஞ்சிக் கொடியாய், வண்ண எழில் மயிலாய் அவள் மேகலாவுக்கு உடைப்பெடுத்த வெள்ளம் போல உள்ளத்தின் உள்ளே சோகம் நிரம்பி, விழிகளின் வழியே இறங்கியது.

எப்படி விடை கொடுத்து அனுப்புவது. உயிர் விலக மனம் ஒத்துக்கொள்ளுமா?

நினைக்க, நினைக்க நெஞ்சு துன்பத் தீயில் விழுந்து அவிந்தது.

"அழாதே மேகலா. பிரிவென்றே வைத்துக்கொண்டாலும், நம் அன்பின் வலிவை அறிய அந்தப் பிரிவும் உதவும் அல்லவா?"

கலங்கிய விழிகளோடு புரியாமல் வில்லவனை நோக்கினாள்.

"ஆம், மேகலா பிரிந்திருக்கும் போதுதான் இணைந்திருந்த நாட்களை மனது அசைபோடும். அந்த இனிய நாட்களின் சுவை புரியும்."

"இல்லாவிட்டால் புரியாதாக்கும்."

## குறுக்கெழுத்துப் போட்டி இல–35

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | ■ |
| 3 | | | | ■ | 4 | 5 |
| | ■ | | ■ | 6 | ■ | |
| | 7 | | | 8 | | |
| ■ | 9 | | | | | ■ |
| 10 | | | | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | | |

**இடமிருந்து வலம்**

1. பட்டுச்சேலைகளுக்குப் பிரபல மான இடம்.
3. தீர்ப்புச்சொல்வதற்கு முதல் இது நடைபெறும்.
4. அசுத்தம் இவற்றை அதிகமாக்கும்.
8. மழை வரவேண்டும் என்பதற்கா கவும் சிலர் இதை நடத்துவார்கள்.
9. நடனத்தில் ஒரு வகை.
10. சமையலிலும் இது பயன்படும்.
11. மன்மதனோடு இணைத்துப் பேசுவார்கள். (மாறியிருக்கிறது)
12. சில இலை வகைகளிலிருந்து இதை எடுத்து மருந்தாக்கலாம்.
13. சுவையோ சுவை.

**மேலிருந்து கீழ்**

1. மகாபாரதமும் இதில் சேரும்.
2. பயங்கரமான குற்றவாளிகளுக்கு சில நாடுகளில் வழங்கப்படும் தண்டனை.
5. சீதைக்கு நடத்தப்பட்டது.
6. சிகிச்சையைத் தேடுபவர்.
7. இது கைகலப்பிலும் முடிவதுண்டு.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 5.02.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-35
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-32க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ச | கு | னி | ■ | 2 சு | 3 ள | 4 கு |
| ந் | ■ | 5 ப | த | க் | க | ம் |
| 6 நி | த் | தி | ரை | ■ | வு | மா |
| யா | ■ | ப | ■ | 7 அ | ■ | ள |
| 8 சி | றை | க் | கை | தி | ■ | ம் |
| ■ | யு | தி | ■ | 9 கா | ர் | ■ |
| 10 ந | 11 கை | ■ | 12 சு | ரி | தா | ர் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.33இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. வ. துரைராசா கொழும்பு-6.
2. ஏ.சி. ஷர்மிளா பதுளை.
3. எஸ். பவானந்தன் கொழும்பு-5.
4. ஸுபியா ஹஸன் மாத்தறை.
5. கே. செல்வநாதன் மட்டக்களப்பு.
6. எம்.பி.எம். பஷீர் வெலிகம.
7. சி. பிரதீபன் கண்டி.
8. செல்வி. எம்.வை.எவ். சியாமா கொழும்பு-12.
9. ஆர். வதனி புத்தளம்.
10. எல். நியாஸ் கல்முனை.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

மனித இனத்தில் யாரை வெறுக்கலாம்?
எம்.ஏ.ரியானா–கந்தளாய்–01.

புறத்தோற்றத்தில் மனிதர்களாகவும், உள்ளத்தில் மனித உணர்வுகள் மரித்தவர்களாகவும் இருப்பவர்களை.

•

பெண்ணைப் பூவுக்கு ஒப்பிடுகிறார்கள். ஆணை எதற்கு ஒப்பிடலாம்?
எம்.என்.என்.சபீர்–கிண்ணியா.

வழக்கம் போல வண்டுக்கு.

•

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் போட்டியிடுவதைப்பற்றி?
தியாகராஜ்–பண்டாரவளை.

தேர்தலுக்கு தமிழர்கள் எல்லோரும் எதிராக இல்லை என்று சொல்ல அரசாங்கத்திற்கு உதவும்.

•

தினமுரசில் மரபுக் கவிதைகளுக்கு இடமுண்டா?
கி.அளெம்பலம்–மட்டக்களப்பு.

உண்டு. கொடுக்கப்பட்டும் இருக்கிறது. படிக்கவில்லையா?

•

டியர் சிந்தியா! மனிதனிடம் தன்னம்பிக்கை எப்போது ஆரம்பமாகிறது?
மு.மு.மஹ்ஜபீன்–கிண்ணியா–03.

தன்னை அறியும் போது. தன்னாலும் முடியும் என்பதை உணரும்போது.

•

ஒரு பெண் நம்மைக் காதலிக்கிறாள் என்று அறிந்துகொள்வது எப்படி?
ரெ.சந்திரசேகர்–புத்தளம்.

இதற்கெல்லாம் விடை சொல்லித் தெரிவதில்லை. அனுபவத்தில் இருந்து அள்ளித் தெரிந்துகொள்ள வேண்டியதுதான்.

•

மரணத்தை எந்நேரமும் நினைத்துக் கொண்டிருக்க வழி?

**மரணத்தை நினைத்துக் கொண்டிருக்க என்ன வழி?**

எம்.எச்.எம்.நிஸ்வான்–திருகோணமலை.

வடக்கிலே போய் குடியிருக்கலாம்.

•

இலங்கை அரசியலில் நன்றாகப் பேசக்கூடிய தமிழ் தலைவர் யார்?
எஸ்.விஜயகுமார்–வவுனியா.

நன்றாகப் பேசுவோருக்குப் பஞ்சமில்லை. செயல்வீச்சுக் கொண்டோருக்குத் தானே பஞ்சம் இங்கே. பேசவிட்டால் எல்லோரும் பேசுவார்கள்.

•

டியர் சிந்தியா! யாருக்கும் தெரியாமல் உங்களிடம் கேட்கிறேன். "கண்ணே மதுமிதா" தொடர்கதை எழுதும் ரசிகன் பற்றி..."
முருகுப்பிள்ளை சிவகுமார்–களுவாக்கேணி.

ஹி....ஹி.....ஹி... அதை நாங்களே சொல்லக்கூடாது சிவகுமார்.

•

தொண்டாவும்–காமினியும் இணைவார்களா?
கே.சதாசிவம்–நுவரெலியா.

காமினியே ஆளும்கட்சியில் இணையப் போகிறாராம்.

•

அரசியலில் நுழைவதற்கு முக்கியமாக தேவைப்படுவது பணமா?படிப்பா? புகழா?
வீ.பிரமிளா–அவிசாவளை.

தேர்தல் காலத்தில் பட்டியல் நிரப்பும் நேரத்தில் பெயர் நினைவுக்கு வந்தால் போதும் என்ற நிலை உள்ளபோது மேற்கண்ட மூன்றும் முக்கியமல்ல என்றாகிவிடுகின்றனவே.

•

தந்தை சொல் தட்டியதுண்டா?
தௌபீக்–புத்தளம்.

உண்டு. அதற்காக இப்போது வருந்துவதும் உண்டு.

•

சிலர் தம் பெயருக்கு முன்னால் தமக்குத் தாமே பட்டம் சூட்டிக்கொள்கிறார்களே? அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
எம்.கே.நாயகம்–ஹப்புகஸ்சுன்ணை.

பிறர் பட்டம் தரும் தகுதி தமக்கு ஒரு நாளும் வரப்போவதில்லை என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள்.

•

அரசியல்வாதி சுயநலவாதி என்கிறார்களே, அது உண்மையா?
எம்.ஐ.நவாஸ்–கந்தளாய்.

உண்மையாகிவிடுமோ என்று சந்தேகம் தருகின்றன நாட்டு நிலவரங்கள்.


•

வெளிநாடு செல்பவர்களை சென்று வருக என்று வாழ்த்துவது எதற்காக?
எஸ்.கலாதாசன்–எடின்பரோ எஸ்டேட்.

அங்கேயே செட்டில் ஆகிவிடக்கூடாது என்பதற்காக இருக்கலாம்.

•

## ஒன்பது தடவை தவறிய குறி!



போதைப் பொருட்கள் அதைப் பாவிக்கும் மனிதர்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்கின்றன.

எனவே போதை வியாபாரிகளை மறுபேச்சே இல்லாமல் மரண தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும்.

அதுதான் கொலம்பியா நாட்டின் சட்டவிதி.

படத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர் இருவரை மரண தண்டனைக்கு உள்ளாக்கும் காட்சி இருக்கிறது.

துப்பாக்கி ஏந்திய கொலம்பிய வீரர்கள் குறிவைக்கிறார்கள்.

இத் தண்டனை வழங்கப்பட்ட போது ஒரு வித்தியாசமான வியப்பான சம்பவம் நடந்தது.

வீரர்கள் துப்பாக்கிகளின் விசைகளைத்தட்ட குண்டுகள் பாய்ந்தன. ஆனால் குறி விலகிப் பாய்ந்தன.

ஒன்பது தடவைகள் அனைவரும் குறி தவறியே சுட்டனர்.

பத்தாவது தடவைதான் குறி சரியாக அமைந்தது. குண்டுகள் குற்றவாளிகள் மீது பாய்ந்தன.

அத்தனை வீரர்களும் நன்கு பயிற்றப்பட்டவர்கள். பின்னர் எதற்காக தவறியது குறி? பதில் சொல்லப்படவில்லை.

ஒரேயடியாகக் கொல்லாமல் கொடிய குற்றவாளிகளை அஞ்சி நடுங்கவைத்து கொல்ல நினைத்தார்களே கொலம்பிய வீரர்கள்?

**இவ்வாரம் (30.01.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 14

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்: மகாபாரதக் கதையினைக் கூற வந்த நான் கிருஷ்ண பரமாத்மாவின் சிறுபிராயத்து லீலைகளில் தங்கி நிற்பது பொருத்தமற்ற கூற்றெனத் தோன்றலாம். இந்த மகாகாவியத்தின் பிரதான கதாநாயகனான கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளை முற்றாக அறியாமல் மகாபாரதத்தை அறிந்துகொள்வது முடியாத காரியமாகும். இதனால்தான் கிருஷ்ண பரமாத்மாவின் கதையைக் கூறுவதில் சற்று கூடுதலான நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது. பக்திமார்க்கத்தின் அரிய தத்துவங்களைப் புரிந்து கொள்வதில் என்னுடன் நீங்களும் இணைய வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன். பல்லாண்டுகாலமாக நான் இந்நெறியினைப் பின்பற்றி வருகிறேன்.

வாசுதேவன் தன்னுடைய எட்டாவது மகனை, எவருக்கும் தெரியாமல், புயலும் மழையும் சேர்ந்த ஓர் இரவில் யமுனை நதியினைக் கடந்து, எடுத்துக்கொண்டு நந்தகோபனிடம் சேர்க்கும் வேளையிலிருந்து இக்கதை தொடங்குகிறது.

இந்த அற்புதக் குழந்தை, மனமோகன், நந்தலாலா, கண்ணன், கிருஷ்ணன், யசோதை மைந்தன், நீலமணி, வெண்ணை திருடன், முரளிதரன், கோபாலன் என்றெல்லாம் பல்லாயிரம் நாமங்களால் அழைக்கப்படுகிறான்.

பாரதவர்ஷத்தின் ஜீவநாடியை அனுபவித்துணர்வதற்கு ஏதுவான சம்பவங்களை இனிமேல் அவதானிப்போம்.

-காட்சி துவக்கம்-

மாலதி: உன் சிநேகிதர்களுக்கு வேண்டுமானால் உன் வீட்டிலே இருந்து எடுத்துக் கொடுக்கலாமே! நீ வெண்ணை திருடன் என்று நான் எத்தனை தடவை முறையிட்டாலும் உன் அம்மா யசோதா நம்பமாட்டேன் என்கிறாள். இன்று நேரடியாகக் கொண்டுவந்து காட்டப் போகிறேன். நீ வெண்ணைத் திருடனா இல்லையா என்பதை அவள் ஒப்புக் கொள்ளுகிறாளா என்பதைப் பார்ப்போம்.

•

யசோ: நான் ஏன் அங்கு வரவேண்டும்? என் மகன் அங்கு இல்லையே!

மாலதி: அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவைத்துள்ளேன். இன்று உன் சாக்குப் போக்கெல்லாம் செல்லுபடியாகாது.

யசோ: அதற்கு முன்னர் என்னுடன் இங்கு உள்ளே வந்து பாரேன்!

மாலதியை யசோதா உள்ளே அழைத்துச் செல்கிறாள். அங்கே கண்ணன் உணவு உட்கொள்வதைக் காண்கிறாள்.

யசோ: பார்த்தாயா! கண்ணன் இங்கேதானே இருக்கிறான்.

மாலதி: அட கடவுளே!

கண்ண: வணக்கம் மாமி!

மாலதி: நான் முன்னமே சொன்னேன் அல்லவா? மாமி என்று என்னைக் கூப்பிட வேண்டாம் என்று... நான் உனக்கு சித்தி...!

கண்: என்னிடம் அப்படி எப்போது சொன்னீர்கள் மாமி?

-காட்சி மாற்றம்-

ஆயர்பாடியில் கிருஷ்ணனும் நண்பர்களும்

சிறிதாமன்: கண்ணா! எனக்கு பசி எடுக்கிறது. ஏதாவது செய்தாக வேண்டுமே!

சியாம்: ஆயர்பாடியில் உள்ள அனைவரும் நம்மைப்பற்றி அறிந்து விழிப்படைந்து விட்டார்களே!

கண்ண: உங்களுக்கு உண்மையாகவே பசி எடுத்தால் என்னுடன் வாருங்கள்.

சிறிதா: சரி போவோம்.

எல்லோரும்: வாருங்கள் போகலாம்.

-காட்சி மாற்றம்-

- ஒரு மரத்தடியில் கண்ணனும் நண்பர்களும் இருந்து பானையில் வெண்ணை எடுத்து உண்கின்றனர்.
- கண்ணனும் நண்பர்களும் விளையாடுகின்றனர்.
- கண்ணன் வெண்ணை திருடுகிறான்.
- சிறிதாமனுக்கு கண்ணன் வெண்ணை ஊட்டுகிறான்.
- கோபியர்கள் கண்ணனைப் பற்றி யசோதாவிடம் முறையிடுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

ஆயர்பாடியில் ஒரு வீடு

சிறிதா: வேண்டாம் கண்ணா; இங்கு வேண்டாம். கடந்த வாரம் இங்கே தானே நாம் மாட்டிக்கொண்டோம்!

கண்ண: ஆமாம்; இருப்பினும் நமக்குத் தண்டனை கிடைக்கவில்லையே! மாலதி சித்தி என் அம்மாவிடம் போய் முறையிட்டார். ஆனால் அம்மா அதனைப் பொருட்படுத்தவேயில்லை. அதனால் இன்றும் சித்தி அம்மாவிடம் போய் நமக்கு எதிராகக் கோள் சொல்லமாட்டார்.

கண்ணனும் நண்பர்களும் மாலதியின் வீட்டிலிருந்து வெண்ணை உண்ணுகின்றனர். மாலதி வீட்டின் வெளியே இருக்கிறாள். யசோதா வருகிறார்.

யசோ: மாலதி! என்ன தனியாக இருக்கிறாய்?

மால: இப்போ உள்ளே போய் உங்கள் கண்களாலேயே பாருங்களேன்.

யசோ: கண்ணா!

சிறிதா: கண்ணனின் அம்மா வந்துவிட்டார். வாருங்கள் எல்லோரும் ஓடிவிடலாம்!

யசோ: இறங்கு கீழே! இறங்கிவா.

கண்ணன் கீழே குதிக்கின்றான்.

யசோ: நம் வீட்டில் வெண்ணை இல்லையா? இன்றுதான் உண்மையை உணர்ந்து கொண்டேன். உண்மையில் நீ திருடனேதான்

யசோதா கோபத்துடன் வெளியேறுகிறாள்.

கண்ண: அம்மா...அம்மா

யசோ: உன்னைக் கண்டு இந்தக் கிராமமே அஞ்சுகிறது. திருடா! இன்று கையும் களவுமாய் நீ பிடிபட்டுவிட்டாய்.

கண்ண: என்னம்மா...

யசோ: உண்மையைச் சொல்லு, வெண்ணை திருடித்தின்றாய் அல்லவா?

கண்ண: அம்மா, அம்மா..

பாடல்!

அம்மா அம்மா ஓ என் அம்[illegible]
என் அன்பு அம்மா நான் வெண்[illegible] திருடவில்லையே
நான் வெண்ணை தின்னவில்[illegible]

பாடல் தொடர்கிறது: பால், தயி[illegible], [illegible]ண்ணை மற்றும் பால்கட்டி எல்லாமே......

-காட்சி மாற்றம்-

நந்தகோபனின் கிராமத்துக் குழந்தைகள் விளையாடுகின்றனர்.

சிறிதா: என்ன? எல்லாரும் சும்மா இருக்கின்றீர்கள்? வாருங்கள் விளையாடுவோம்.

ஒரு நண்பன்: எப்படி விளையாடுவது? கண்ணன் இன்னும் வரவில்லையே?

மற்றவன்: கண்ணன் வரமாட்டான். சிறிதாமன் அவனை வராமல் ஆக்கிவிட்டான். அவனை எல்லோரும் கிண்டல் பண்ணி விட்டீர்கள்.

சிறிதா: ஆமாம்! விளையாட்டில் அவன் ஏமாற்றுகிறானே!

நண்பன்: அதுவும் ஒரு வேடிக்கைதானே!

மற்றவன்: சிறிதாமா? நீ ஏற்றுக் கொள்ள மாட்டாயா?

எல்லோரும்: சொல்லு. எங்களிடம் சொல்லு!

சிறிதா: ஆமாம் உண்மைதான். நாங்களும் அதனை மகிழ்ச்சியாக ஏற்கின்றோம். நாங்கள் அவனைக்கிண்டல் செய்தால் அவனுக்குக் கோபம் வருகிறது. இருப்பினும் விளையாடும்போது கண்ணன் மிகக் கூடுதலாக அழப்புகிறானே.

மற்றொருவன்: அவன் விளையாட்டில் அழப்பாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்ளுமாறு நாங்கள் மாமாவிடம் சொன்னோம்.

சிறிதா: ஆமாம். கண்ணன் மீண்டும் தப்பாக விளையாடினால் தான் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை என்று அவர் சொன்னார்.

நண்ப: அப்போ வாருங்கள் எல்லோரும் போய் கண்ணனை அழைத்து வருவோம்.

சிறிதா: சரி வாருங்கள்.

நண்ப: இப்போது அவன் எங்களுடன் கோபமாக இருப்பான். அவன் வரவே மாட்டான்.

மற்ற நண்: நாம் போவோம். அவனுடைய கோபத்தை போக்கடிப்போம்.

சிறிதா: மாமாவும் இங்கேதான் இருப்பார். அப்போது அவன் எப்படி அழப்புகிறான் என்று பார்க்கலாம்.

எல்லோரும்: வாருங்கள் போவோம்.

நண்ப: எல்லாச் சிக்கலுக்கும் இந்த சிறிதாமன்தான் காரணம்.

மற்ற நண்: எனக்கும் அது தெரியும். ஆனால் கண்ணன் மீது உண்மையில் அவன் அதிக பற்று வைத்துள்ளான். கண்ணன் இல்லாவிட்டால் அவனுக்கு எதுவுமே ஓடாதே.

-காட்சி மாற்றம்-

சிறிதா: கண்ணா! வா விளையாடுவோம்.

கண்ண: மாட்டேன். உன்னோடு விளையாட வரமாட்டேன்.

சிறிதா: கண்ணா! நாங்கள் உன்னிடம் சரணாகதி அடைகிறோம். வா! இப்போது போய்விளையாடுவோம்.

பலராமன்: கண்ணா! அவர்கள் விளையாட வரும்படி கேட்கிறார்கள் அல்லவா? வா போய் விளையாடுவோம்.

எல்லோரும்: கண்ணா! வா எல்லோரும் விளையாடுவோம்.

சிறிதா: வாருங்கள் போவோம்.

கண்ண: சரி வருகிறேன்.

எல்லோரும்: வாருங்கள் எல்லோரும் போவோம்.

சிறிதா: இப்பொழுது நான் உன்னை வெற்றியடைவேன். அட கடவுளே! என்னைத் தோற்கடித்துவிட்டானே. கண்ணா நீ மீண்டும் பொய்யாட்டம் ஆடுகிறாய்!

கண்ண: நான் எதுவுமே செய்யவில்லையே!

சிறிதா: நீ பொய் சொல்லுகிறாய்!

கண்ண: இல்லையே நான் பொய் சொன்னதுமில்லை. சொல்வதுமில்லை.

சிறிதா: பாருங்கள் அண்ணா இவன் ஏமாற்றுகிறான்!

கண்ண: நான் எதுவுமே செய்யவில்லையே!

சிறிதா: இவன் ஏமாற்றுவது மட்டுமல்லாமல் எல்லாவற்றுக்கும் மேலாக பொய்யும் சொல்லுகிறான்.

கண்ண: இல்லை நான் பொய் சொல்லவே யில்லை.

சிறிதா: இவனோடு சேர்ந்து நான் விளையாட



மாட்டேன். இவனுடைய அப்பா முக்கியமான ஒரு பிரமுகர் என்பதனால் இவன் எங்களை எல்லாம் ஏமாற்றலாம் என்று நினைக்கிறான்.

கண்ண: வாயை மூடு. அண்ணா! நான் விளையாடும்போது தவறாக நடந்து கொள்ளமாட்டேன் என்று அவர்களிடம் கூறுங்கள்.

பலரா: நீ தப்பான வழிகளில் செல்லும்போது நான் எவ்வாறு அவற்றை மறைக்க முடியும்?

கண்ண: என்ன?

பலரா: நீ ஏன் இவ்வாறு நடக்கிறாய் என்பது எனக்குப் புரியவில்லை. நான் தப்பில்லாமல் விளையாடுகிறேன். நண்பர்களும் நேர்மையாகவே உள்ளனர். உனது அப்பா நந்தகோபரும் நேர்மையானவர். உன் தாய் யசோதாவும் அப்படியானவரே. ஆனால், நீ மட்டும் வித்தியாசமாய் இருக்கிறாயே! ஆமாம் எனக்கு ஒன்று மட்டும் புரிகிறது. நந்தகோபர் சிவப்பாக இருக்கிறார். யசோதா சித்தியும் சிவப்பு. ஆனால் நீயோ கருமை நிறம் கொண்டவனாய் இருக்கிறாய். நீ அவர்களுடைய மகன் இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. வேறு எங்கோ இருந்து உன்னை எடுத்து வந்து வளர்க்கின்றார்கள் போல் தெரிகிறது!

கண்ண: அண்ணா! நீங்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டீர்கள். வாருங்கள் என் அம்மாவிடம் சென்று நான் அவர்களுடைய மகன்தானா என்று கேட்டு அறிவோம்.

எல்லோரும் சிரிக்கிறார்கள்.

பலரா: கண்ணா எனக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

கண்ண: நான் இனிமேல் உங்களுடன் சேர்ந்து விளையாடமாட்டேன்.

கண்ணன் ஓடுகிறான் அதன் பின்னால் மற்றவர்களும் ஓடுகின்றனர்.

-காட்சிமாற்றம்-

ஆயர்பாடி- யசோதா பூஜையில் கலந்து கொள்ளுகின்றாள்.

பாடல்: அம்மா என் அன்புத்தாயே என் அண்ணன் என்னை சீண்டுகிறானே!

-காட்சிமாற்றம்-

ஆயர்பாடி–நந்தகோபன் இல்லம்

நாராயணதாஸ்: நந்தராஜா!.....நந்தராஜா...!

நந்த: வாருங்கள்.... வாருங்கள். என்ன விசேஷம்?

தாஸ்ச: மேலும் இரு பசுக்கள் இறந்துவிட்டன.

நந்த: அந்தப் பசுக்களுக்கு என்ன நடந்தது?

ஒருவர்: என்னுடைய இரு பசுக்களும் ஆற்றில் நீர் அருந்தின. அவ்விடத்திலேயே வீழ்ந்து இறந்துவிட்டன.

நந்த: என்ன....இறந்துவிட்டனவா?

மற்றொருவர்: நீர் பருகாமல் பசுக்கள் சீவிக்க முடியுமா?

நந்த: இது காளிங்கன் என்ற கொடிய விஷப் பாம்பின் வேலை. இப்படியானால் நமது பசுக்கள் அனைத்துமே மாண்டு போய்விடும். ஏதாவது செய்தாக வேண்டுமே!

மூன்றாமவர்: நாங்களோ பசுவின் பாலை நம்பிப் பிழைப்பவர்கள். எங்களால் என்ன செய்ய முடியும்?

நாலாமவர்: அவ்வாறு சொல்லிவிட்டால் எப்படி? காளிங்கன் நமது பசுக்களைக் கொன்று தீர்க்கும்வரை பார்த்துக் கொண்டு சும்மா இருந்துவிட முடியுமா?

முதலாமவர்: சகோதரர்களே! கம்சனின் கொடுமைகளுக்கு அஞ்சி கோகுலத்தை விட்டு வெளியேறினோம். இப்பொழுது இந்த நச்சுப் பாம்புக்காக நந்தகோ கிராமத்தையும் விட்டு . வெளியேற வேண்டியது தான்.

இரண்டாமவர்: கம்சன் தான் இந்த நச்சுச் சர்ப்பத்தை ஏவி விட்டுள்ளான் என்று தோன்றுகிறது.

மூன்றா: தண்ணீரையே நஞ்சாக்கி விட்டான் அந்தப் பாபி.

நந்த: மருத்துவர் மாமா? நந்தகோ கிராமத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்றுதான் நானும் கருதுகிறேன். அப்படியானால், நாம் இந்த பிரிசுபூமியையும் விட்டுப் போக வேண்டித்தான் இருக்கும்.

மருத்துவர்: நந்தகோபரே! மனதைத் தளரவிடாதீர்கள். எல்லாம் சீராகிவிடும். கடவுள் எல்லோரையும் காப்பாற்றுவான். அவன் மீது நம்பிக்கை வையுங்கள்.

-காட்சி மாற்றம்-

காட்டுப்பகுதி– அயர்பாடிச் சிறுவர்கள்

பலரா: கண்ணா!...ஏகண்ணா.....! எங்கே போகிறாய்?

கண்ண: விளையாடப் போகிறேன் அண்ணா!

பலரா: கொஞ்சம் பொறு. நானும் வருகிறேன்.

-காட்சி மாற்றம்-

சிறிதாமன் ஒரு மரக்கிளையில் காணப்படுகிறான்.

சிறிதா: அதோ கண்ணன் வந்துவிட்டான். கண்ணன் வந்துவிட்டான். கண்ணா! உனக்காகவே காத்துக்கொண்டிருக்கிறேன்.

கண்ண: சிறிதாமா..! பந்தெறிந்து விளையாடலாமா..?

சிறிதா: இதோ உன் மீது பந்தை எறிகிறேன். எனது பந்து உன்னிடம்தானே ஓடி வருகிறது.

எல்லோரும் விளையாடுகின்றனர்.

சிறிதா: கண்ணன் மீது பந்தை வீசுங்கள்.

பலரா: ஷியாம், சகா-இம்முறை பந்து சிறிதாமனை அடித்துவிட்டது.

சிறிதா: கண்ணா! பந்தை என்னிடம் வீசு..

கண்ணன் பந்தை ஆற்றினுள் வீசி எறிந்துவிட்டான்.

சிறிதா: என்னுடைய பந்தை எடுத்துக்கொடு.

கண்ண: அது யமுனை ஆற்றுள் விழுந்து விட்டது. அதனை எவ்வாறு எடுத்து வரமுடியும்?

சிறிதா: எனக்கு அதெல்லாம் தெரியாது. எனது பந்தை எடுத்துக்கொடு.

சகா: உன் பந்து யமுனா ஆற்றில் விழுந்து விட்டது. அதனை அவன் எவ்வாறு எடுத்துக்கொடுக்க முடியும்? யமுனைக்குள் அவன் போக முடியுமா?

சிறிதா: அவன் யமுனை ஆற்றில் குதிக்கிறானோ அல்லது கடலுள் குதிக்கிறானோ எனக்குத் தெரியாது. எனது பந்தை எப்படியும் அவன் எடுத்துத் தந்தாக வேண்டும்!

கண்ண: சரி-நான் யமுனைக்குள் சென்று உன் பந்தைக் கொண்டு வருகிறேன்.

சகா: அட கடவுளே! சிறிதாமா! அவனை யமுனைக்குள் போக விடாதே!

சிறிதா: நான் ஏன் தடுக்க வேண்டும்? அவன் என் பந்தைக் கொண்டு வந்தாக வேண்டும்.

சகா: சிறிதாமா! அது கொடிய விஷமுள்ள காளிங்கன் குடியிருக்கும் ஆறு. அந்தத் தண்ணீரைப் பருகிய எத்தனையோ பசுக்கள் மாண்டுபோய் விட்டன. நீ என்ன கண்ணனின் நண்பனா விரோதியா?

எல்லோரும்: கண்ணா..! கிருஷ்ணா...! அங்கே போகாதே..!

சிறிதா: கண்ணா..!

சகா: உனக்கென்ன பைத்தியமா? அந்தத் தண்ணீருக்குள் போனால் எவராவது பிழைக்க முடியுமா? தயவு செய்து கிருஷ்ணன் அங்கு போகாமல் தடு.

சிறிதா: என்னுடைய பந்தினை எடுத்துக்கொடு.

பிள்ளைகள்: கண்ணா தயவு செய்து வந்துவிடு.

ஒருவன்: கண்ணா போகாதே, நில். சிறிதாமா உனக்கு நான் ஒரு பந்து தருகிறேன்.

சிறிதா: இல்லை! எனது பந்து தான் வேண்டும்.

பிள்ளைகள்: போகாதே கண்ணா அங்கே போகாதே!

சிறிதா: கண்ணா போகாதே நில்!

பிள்ளைகள்: நில்லு கண்ணா போகாதே.

சிறிதா: கண்ணா! எனக்கு அந்தப் பந்து வேண்டாம். போகாதே தயவு செய்து நின்றுவிடு.

கண்ணன் ஆற்றங்கரையில் நின்றிருந்த மரக்கிளையில் தாவி ஏறி ஆற்றுள் குதிக்கிறான்.

-காட்சி மாற்றம்-

நீரில் சுழியோடிய கண்ணன் நீருள் காளிங்கன் எனும் சர்ப்பத்தைக்கண்டு அதனைச் சீண்டுகிறான். பாம்பு தனது படத்தை விரித்து கிருஷ்ணனைத் தாக்க முயற்சிக்கிறது. பின்னர் அவனுடைய உடலை சுற்றி வளைத்துக்கொள்ளுகிறது.

-காட்சிமாற்றம்-

பிள்ளைகள்: கண்ணா...! ஓ கண்ணா....!

ஒருவன்: சிறிதாமா! நீ தான் கண்ணனை அந்தப் பயங்கரமான நீருக்குள் போகத் தூண்டினாய்!

பிள்ளை: ஆமாம்! நீதான் இதற்கு முழுமுதற் காரணம்!

சிறிதா: ஆனால்...ஆனால்....

நீருக்கடியில் கிருஷ்ணன் காளிங்கனுடன் போர் புரிகிறான்.

பிள்ளைகள்: கண்ணா..! கண்ணா நீ எங்கே போய்விட்டாய்?

- சிறிதாமன் யசோதாவிடம் ஓடுகிறான்.
- காளிங்கன் கண்ணன் மீது தீச்சுவாலையினை வீசுகிறான். ஆனால் அது கண்ணனை எதுவும் செய்யவில்லை. சிரித்த வண்ணம் கண்ணன் தோன்றுகிறான்.

-காட்சி மாற்றம்-

யசோதாவின் இல்லம்

சிறிதா: அம்மா..!அம்மா...!

யசோ: என்ன சிறிதாமா?

சிறிதா: கண்ணன்... வந்து கண்ணன்...!

யசோ: கண்ணனுக்கு என்ன நடந்தது? சொல்லு ஏன் பேசாமல் இருக்கிறாய்? கண்ணன் எங்கே?

சிறிதா: நான் எதுவுமே செய்யவில்லை. இல்லை நான் கண்ணனை எதுவுமே செய்யவில்லை.....

யசோ: சரி கண்ணனுக்கு என்ன ஆயிற்று? எங்கே என் மகன்?

சிறிதா: நாங்கள் எல்லோரும் விளையாடிக் கொண்டிருந்தோம்....

யசோ: அப்போ...?

சிறிதா: நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது பந்து ஆற்றுள் விழுந்துவிட்டது. கண்ணன் பந்தை எடுத்துவர ஆற்றுக்குள் குதித்துவிட்டான்.

யசோ: ஐயோ பிரபு...!இவன் சொன்னதைக் கேட்டீர்களா?

நந்த: என்ன நடந்தது?

யசோ: கண்ணன் களிங்கன் இருக்கும் யமுனையில் குதித்துவிட்டானாம்.

நந்த: கடவுளே! இது பயங்கரமான சம்பவமல்லவா? இது எப்படி நடந்தது? ஐயோ என் மகனே!

யசோ: ஐயோ! என் கண்ணனிடம் என்னை அழைத்துச் செல்லுங்களேன்!

நந்த: சிறிதாமா என் கண்ணனுக்கு என்ன நடந்ததப்பா?

சிறிதா: கண்ணன்...கண்ணன்...

-காட்சி மாற்றம்-

- கண்ணன் சர்ப்பத்துடன் சண்டையிடுகிறான்.
- கண்ணா கண்ணா என்று அழைத்த வண்ணம் எல்லோரும் யமுனை ஆற்றங்கரைக்கு ஓடுகின்றனர்.

யசோ: கண்ணா...! என் ஆசைக் கண்மணியே!

நந்த: அவனுக்கு என்னதான் நடந்துவிட்டது?

சிறிதா: இந்தப் பக்கம் வாருங்கள்.

நந்த: மகனே...!மகனே..! நேராகப் போ சிறிதாமா..

கண்ணன் காளிங்கனை அடக்குகிறான்.

அதன் வாலை முறுக்குகிறான். அது இரத்தம் கக்குகிறது. ஆற்று நீர் இரத்தம் கலந்தமையினால் சிவப்பாக மாறுகிறது. இதனைக் கண்ட யசோதா மயக்கமடைகிறாள்.

நந்த: யசோதா! உனக்கு என்ன நடந்துவிட்டது?

காளிங்கன் வேதனை தாங்காது துடிக்கிறான். அவனுடைய இருமனைவியரும் வருகின்றனர்.

முதல் மனைவி: அவரை விட்டு விடுங்கள் பிரபு!

இரண்டாவது மனைவி: பிரபு அவரை ஒன்றும் செய்யாதீர்கள். உயிர்ப்பிச்சை அளியுங்கள்.

காளிங்: ஓ இறைவனே! அபயம்...அபயம்..! உங்கள் தாழ் பணிந்தேன். மன்னியுங்கள். என்னை மன்னித்துவிடுங்கள்.

கண்ண: இந்த நீரை நச்சுப்படுத்தாமல் உன் குடும்பத்துடன் எங்காவது போய் விடுவதாக சத்தியம் செய் பார்க்கலாம்.

காளிங்: தங்கள் கட்டளைப்படியே செய்கிறேன் மகா பிரபு!

முத.மனை: தயவு செய்து எங்களை மன்னித்தருளுங்கள்.

இரண்.மனை: அவரை மன்னியுங்கள்.

கண்ண: சரி மன்னித்து விட்டேன்.

காளிங்கன் விரித்த படத்தின் மீது கண்ணன் நின்ற வண்ணம் நீர்மட்டத்தின் மேல் தோன்றுகிறான். தன் புல்லாங்குழலில் இன்னிசை கானம் எழுப்புகிறான். இதனை அக்கிராம வாசிகளுடன் யசோதாவும் கண்டுகளிக்கிறாள்.

இந்தத் தெய்வீகத் திருக்காட்சியினை வானவரும் பார்த்து மகிழ்கின்றனர். கண்ணனின் தெய்வீகத்தை உணர்ந்து மரியாதை செலுத்துகின்றனர்.


(கண்ணனை ஏற்றிப் போற்றி ஆயர்பாடியிலுள்ளவர்கள் பாடுகின்றனர்.

பின்னணி:

காளிங்கனை கண்ணன் வெற்றி கொண்டான்.
கொடிய விஷம் தன்னை அகற்றிவிட்டான்- அந்த
கோபாலனின் புல்லாங்குழலிசை
கோபியருள்ளம் புகுந்திடவே
தீமை அகன்ற யமுனா தீரம்
தேவ கானம் கேட்டு திகைத்திடவே
கடந்தவையெல்லாம் கனவாக
காரிருள் கலைந்த நிலவாக
ஒளிதரும் இன்ப எதிர்காலம்
எழிலாய் மலரும் சுகவாழ்வு
பாரதத்தின் மாபெரும் காதை
பாரிலே சிறந்த மாகாவியமாம்
அறிவின் கடலாய் ஆனதுவே
அறிஞர் ஆக்கிய அரும் சொத்தாம்.

-காட்சி முடிவு-

-தொடர்ந்து வரும்-


பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 438331


குருதியைக் கொடுத்து
மலையினை திருத்தி
நாட்டின்
உயர்வினை ஆக்கியவர்கள்
இளவாதம்-
உழைப்பினை மறைக்கிறது.
தேசத்தின் முதுகெலும்புகளை
இளவாத கோசத்தால்-
முறிக்கப் பார்க்கிறது.
விடமாட்டோம்-என்று
மலையகம் விழித்துக்கொள்கிறது.
விழித்தால்
வெளிச்சமாகும்
எதிர்காலம்!

படம் அனுப்பியது-
கோயுல்ல ராமஜி
எலிய.



## மாபெரும் காட்சி



## உறுப்பினர் தொகையில் உலக சாதனை

சீனாவில் மாஓ சேதுங் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய புரட்சி ஆசியாவில் ஏற்படுத்திய தாக்கங்கள் ஆழமானவை.

இலங்கையிலும் தங்களை மாஓவாதிகள் என்று கூறிக்கொண்டு பல கட்சிகள் முகம் காட்டின. மாஓவின் கருத்துக்கள் அடங்கிய சிவப்புப் புத்தகங்கள் உலகின் பல்வேறு மொழிகளில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. தமிழிலும் சிவப்பு அட்டைகளோடு மாஓ சிந்தனைகள் வெளியிடப்பட்டன.

சோவியத் யூனியன் சிதறிப் போனதோடு உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் தாமும் சிவப்பு நிறக்கொடிகளோடு உறவை முறித்துக்கொண்டார்கள்.

ஆனால், சீனாவில் இப்போதும் மாஓ நினைவு கூரப்படுகிறார். மாஓ சேதுங் நூற்றாண்டு நினைவு விழாக்கள் சமீபத்தில் கொண்டாடப்பட்டன.

மாஓ உயிரோடு இருந்தபோது கட்சி உறுப்பினர்களோடும், ஆயுதம் தாங்கிய மக்கள் விடுதலைப் படையோடும் நடத்திய நீண்ட பயணம் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இன்னும் ஒரு உலக சாதனை இருக்கிறது.

உலகிலேயே அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி அதுதான்.

1920ல் ஆரம்பிக்கப்பட்ட கட்சியில் 1991ல் இருந்த உறுப்பினர்கள் தொகை 5 கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரம்.




தினமுரசு வாரமலர்

## போனது மரியாதை




படத்திலே ஒரு அடையாள அட்டை இருக்கிறது பாருங்கள். அது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியால் வழங்கப்பட்டது. படத்தில் இருப்பவர் சோவியத் பெண்மணி.

ஒரு காலத்தில் இந்த அடையாள அட்டைக்கு பெரும் மரியாதை. சோவியத் சிதறிய பின் அடையாள அட்டைக்கு வெறும் மட்டைக்குள்ள மரியாதைகூட கிடையாது. பொஸ்னிய வீதியில் இந்த அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது.


## 'ஹட்டாரி' சிரிக்க வைக்கும் -விலங்குகளின் உலா இரசிக்கவைக்கும்!


கிழக்கு ஆபிரிக்கக் காடுகளில் உள்ள வன விலங்குகளைப் பிடித்து உலகின் பல பாகங்களிலுமுள்ள மிருகக் காட்சிசாலைகளுக்கு அனுப்பிவைக்கும் குழு ஒன்று கானகத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை மையமாக வைத்துப் பின்னப்பட்ட திரைப்படம் 'ஹட்டாரி'.

தங்கனிக்காவிலுள்ள மொமெல்லா சரணாலயத்தில் படமாக்கப்பட்ட இப்படம் அறுபதாம் ஆண்டின் மையப்பகுதியில் இலங்கையில் திரையிடப்பட்டு இரசிகர்களின் வரவேற்பில் வசூல் குவித்தது. யானை, சிங்கம், புலி, வரிக்குதிரை மற்றும் குரங்குகள் போன்ற மிருகங்கள் தாராளமாக உலாவருகின்றன. இயற்கை வனப்பில் இயற்கைக் காட்சிகள் பரவசமூட்டும். சிறுவர்களுக்கு பெருமகிழ்வூட்டும் இப்படத்தில் பிரபல ஹொலிவூட் நடிகர் ஜோன் வெய்ன் தோன்றுகிறார். நகைச்சுவை வழங்கி மகிழ்விக்கும் பாத்திரம் ரெட் பட்டனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. குரங்குகளைப் பிடிப்பதற்காக அவர் கையாளும் தந்திரம் நிச்சயமாக சுவாரசியமானது. ஹாடி குறூகர், எல்சா மார்டினெலி மற்றும் ரெட் பட்டன் தோன்றும் இப்படத்தை 31.01.94 திங்கள் இரவு 9.30க்கு ரூபவாஹினியில் காணலாம்.

## வாடகைக்கு அதிக வண்டிகள்

வாடகைக்கு மோட்டார் வண்டிகள் சகல நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால் மெக்சிகோ நகரில்தான் உலகில் அதிகமான வாடகை மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. அவற்றின் உலக சாதனைத் தொகை 60 ஆயிரம். நகரின் மத்தியில் உள்ள றிஃபோமா அவினியூவில் அஸெட்டிக் சக்கரவர்த்தியின் சிலையைத் தாண்டி மஞ்சள் வர்ண வாடகைக்கார்கள் செல்லும் அழகைப் படம் காட்டுகிறது.





## யாரால் முடியும்

நேசி! நேசிக்கப்படுவாய்!
அதுதான் உண்மை.
சாதாரண மனிதனாக
இருந்தால் என்ன? இராணுவ
வீரனாக இருந்தால் என்ன
நெஞ்சிலே ஈரம் முக்கியம்.
கம்போடியாவில் ஐக்கிய
நாடுகள் அமைதிப்படைவீரர்
பிஞ்சுக் குழந்தையோடு
கொஞ்சி மகிழும் காட்சி இது.
ஆயுதங்களால் அழிக்கலாம்.
ஆக்குவதற்கு நெஞ்சிலே
நேசமுள்ளவர்களால்
மட்டுமே முடியும்.